ராசாவுக்கு பிணை  பக்கம் 8

சிரியா மீது புதிய தடைகள்  பக்கம் 9

விசாரணை தேவை  பக்கம் 10

முதல் வீரர் மலிங்க  பக்கம் 23



விலை ரூபா 20.00

www.onlineuthayan.com

பக்கங்கள் : 34

★ உதயன்

சுடர் 27
கதிர் 172

வள்ளுவர் ஆண்டு 2043 வைகாசி 3 புதன்கிழமை (16/05/2012) UTHAYAN - A Lively National Tamil Daily


# தெரிவுக்குழு தொடர்பில் ரணில் - சம்பந்தன் பேச்சு

## ஜனாதிபதியுடனான சந்திப்புத் தொடர்பிலும் விரிவாக விளக்கினார் எதிர்க்கட்சித் தலைவர்





*கொழும்பு, மே 16*

*இனப்பிரச்சினைத் தீர்வுக்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் எதிர்க்கட்சிகள் அங்கம் வகிப்பது குறித்து ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் முக்கிய பேச்சு நடத்தியுள்ளது.*

*இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்குமிடையில் நேற்றுமுன்தினம் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.*

*ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ரணில் சந்தித்து பேச்சு நடத்திய பின்னரே சம்பந்தனையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.*

*ஜனாதிபதியுடன்கலந்துரையாடப்பட்ட விடயங்கள் குறித்து இதன்போது கூட்டமைப்பின் தலைவரிடம் ரணில் எடுத்துரைத்தார்.*

*அத்துடன், நாடாளுமன்றத் தெரிவுக்குழு விவகாரம், வடக்கு, கிழக்குப் பிரச்சினை உட்பட சமகால அரசியல்விவகாரங்கள் குறித்தும் இவர்கள் இச்சந்திப்பின்போது விரிவாக ஆராய்ந்துள்ளனர்.*

*அதேவேளை, நாடாளுமன்றத் தெரிவுக்குழு தொடர்* 04↘

## புலிகளுக்கு உதவிய கனேடியத் தமிழர் விடுதலை

நியூயோர்க்,மே 16

விடுதலைப்புலிகள்அமைப்புக்குத் தேவையான பொருள்களைக் கொள்வனவு செய்யும் முயற்சியில் ஈடுபட்டுத் தனது குற்றத்தை ஒப்புக்கொண்ட இலங்கைத் தமிழரும், கனேடியப் பிரஜையுமான ரமணன் மயில்வாகனம் அமெரிக்க நீதிமன்றத்தினால் நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்டுள்ளார். அமெரிக்காவின் நியூயோர்க் நீதிமன்ற நீதிபதியினால் வழங்கப்பட்ட தீர்ப்பின் பிரகாரம் ரமணன் மயில்வாகனம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கனடா மற்றும் அமெரிக்காவில் தடைசெய்யப்பட்டுள்ள புலிகள் அமைப்புக்கு ஆயுதக் கொள்வனவில் ஈடுபட்ட குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்ட ரமணன் மயில்வாகனம் என்பவருக்கு 15 வருட சிறைத்தண்டனை வழங்கப்படவேண்டும் என அமெரிக்காவின் நீதித்துறைத் திணைக்களம் கோரியிருந்தது.

இருந்தபோதிலும் தமது குற்றத்தை ஏற்றுக்கொண்டு மனந்திருந்தியுள்ள தமது தரப்பு வாதியான ரமணன் மயில்வாகனம் என்பவரை விடுதலை செய்யுமாறு அவரது வழக்கறிஞர் தமது வாதத்தை முன்வைத்திருந்தார்.

இந்த நிலையில் ரமணன் மயில்வாகனம் ஏற்கனவே சிறையில் 04↘

## நவநீதம்பிள்ளைக்கு பதவி நீடிப்பு அனுமதி கோரினார் பான் கீ–மூன்

### இலங்கைக்குப் பெரும் ஏமாற்றம்

ஜெனிவா,மே 16

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் பதவிக்காலத்தை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிப்பதற்கு அனுமதி தருமாறு, ஐ.நா பொதுச்செயலர் பான் கீ-மூன் ஐ.நா. பொதுச்சபையிடம் கேட்டுள்ளார்.

இந்நிலையில் நவநீதம்பிள்ளையின் பதவிக்காலம் இந்த ஆண்டுடன் நிறைவடைவதையிட்டு நிம்மதியடைந்திருந்த இலங்கைக்கு



அவரைப் பதவிநீடிக்கப் பான் கீ-மூன் அனுமதி கோரியிருக் 04↘

## புலிகள் பற்றி தகவல் வழங்கும் பிலிப்பைன்ஸ்

மணிலா,மே 16

தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பான புலனாய்வுத் தகவல்களை வழங்கப் பிலிப்பைன்ஸ் அரசு இணக்கம் தெரிவித்துள்ளது.

பிலிப்பைன்ஸ் தீவிரவாத இயக்கங்களுடன் புலிகள் தொடர்புகளைப் பேணுகின்றார்களா என்பது பற்றிய புலனாய்வுத் தகவல்களை வழங்க அந்நாட்டு அரசு இணக்கம் வெளியிட்டுள்ளதாகப் 04↘

## பற்றைக் காணிகளைப் பார்த்து கதறி அழுத இத்தாவில் மக்கள்

தென்மராட்சி, மே 16

பற்றைகளாகக் காணப்படும் தமது காணிகளைப் பார்த்து கண்ணீர் விட்டனர் இத்தாவில்,வேம்பொடுகேணி மக்கள். அவர்களுடன் அங்கு சென்றிருந்த மீளக்குடியமர அனுமதிக்கப்படாத பகுதிகளைச் சேர்ந்த மக்களும் கண்களில் நீர்மல்க தூரத்தே நின்றவாறு தமது இடங்களைப்பார்வையிட்டனர். 04↘



போரினால் சேதமடைந்த இத்தாவில் முருகன் கோயில்.

## கண்ணீர் சிந்தும் நேரத்தில் கைகொட்டிச் சிரிக்கிறது அரசு

### போர் வெற்றி நிகழ்வை சாடுகிறார் சிறிதுங்க

கொழும்பு, மே 16

நந்திக் கடல் முனையில் அன்று தமிழ்மக்கள் 'ஐயோ!' என இட்ட மரண ஓலமே இன்று இலங்கை அரசை சர்வதேச களத்தில் குற்றவாளியாக அடையாளப்படுத்தியுள்ளது. எனவே, போர் வெற்றிக் களியாட்டங்களை விடுத்து அரசு தமிழ்மக்களின் பிரச்சினைகளை உடன் தீர்க்க வேண்டும் என ஐக்கிய சோஷலிஸக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

கண்ணீர் அஞ் 04↘

## அரசின் உண்மைத் தன்மை குறித்து எமக்குச் சந்தேகம்

### திஸ்ஸ அத்தநாயக்க கூறுகிறார்

கொழும்பு, மே 16

அரசுடன் நேற்று முன்தினம் திங்கட்கிழமை தாம் நடத்திய இருதரப்புப் பேச்சுத் தொடர்பாக அரசு உண்மைத் தன்மையுடன் உள்ளதா என்பது பற்றிய கேள்வி இருக்கத்தான் செய்கின்றது என ஐக்கிய தேசியக் கட்சி கூறியுள்ளது.

கடந்த காலங்களில் அரசுடன் நடத்திய பேச்சுக்களினால் நாம் கசப்பான அனுபவங்களைப் பெற்றிருக்கின்றோம் என ஐக்கிய தேசியக் கட்சி 04↘

## தமிழீழத் தேசிய துக்க நாளில்

## ஐ.நாவின் முன்னால் அணிதிரளும் தமிழர்

*நியூயோர்க், மே 16*

*அமெரிக்காவின் நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் முன்பாக நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை தமிழீழத் தேசிய துக்க நாளில் வட அமெரிக்கத் தமிழர்கள் அணிதிரள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக நாடுகடந்த தமிழீழ அரசு தெரிவித்துள்ளது.* 04↘

## வடக்கு தேர்தலை விரைவில் நடத்துக

### அரசிடம் கோருகிறது கபே

கொழும்பு, மே 16

கண்ணிவெடிகள் முற்றாக அகற்றப்பட்ட பின்னரே வடமாகாணசபைத் தேர்தல் நடத்தப்படும் என அரசு திட்டவட்டமாக அறிவித்துள்ள நிலையில், வடமாகாணசபைத் தேர்தலை அரசு வெகுவிரைவில் நடத்த வேண்டும் என நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் (கபே) வலியுறுத்தியுள்ளது.

கண்ணிவெடிகளுக்கு மத்தியில் அரசுக்கு மூன்று தேர்தல்களை வடக்கில் நடத்தமுடியும் என்றால் மாகாண 04↘

## புதிய அரச அதிபர் இன்று பதவியேற்பு

யாழ்.மாவட்ட அரச அதிபராகச் சுந்தரம் அருமைநாயகம் இன்று புதன்கிழமை காலை பதவியேற்கவுள்ளார். இதுவரை காலமும் பணியாற்றிய திருமதி இமெல்டா சுகுமார், ஜனாதிபதி செயலகத்துக்கு மாற்றலாகிச் செல்வதை அடுத்து மட்டக்களப்பு [illegible] யாற்றிய சுந்தரம் அருமைநாயகம் யாழ். அரச அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## டக்ளஸ், கருணா, பிள்ளையான் போன்றவர்களால் பயனில்லை

### வடக்கு, கிழக்கில் புதிய தலைமைத்துவம் கோருகிறார் கோத்தபாய

கொழும்பு, மே 16

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கருணா மற்றும் பிள்ளையான் போன்றவர்களினால் போதிய பயன் கிடைக்கப் போவதில்லை. இரண்டு நாடாளுமன்றப் பிரதிநிதித்துவங்களை வடக்கைச் சேர்ந்த தமிழ் இளைஞர்கள் இருவருக்கு வழங்குமாறு பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அதற்காக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் இருவரைப் பதவி விலகச் செய்ய வேண்டும் என்றும் அவர் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்தார்.

அரசில் அங்கம் வகிக்கும் 04↘

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் நீடிக்க இந்தியாவே காரணம்

## 'கோத்தாவின் போர்' வெளியீட்டு விழாவில் ஜனாதிபதியின் செயலாளர் குற்றச்சாட்டு

கொழும்பு, மே 16

கொழும்பில் 1980களின் நடுப்பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதல்களுக்குத் திட்டமிடுதல் மற்றும் நிறைவேற்றுதலில் இந்தியப் புலனாய்வு அமைப்புகள் வலுவாகப் பங்களித்திருந்ததாக ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க குற்றம்சாட்டியுள்ளார். போர் நீடிப்பதற்கு இந்தியாவே காரணம் எனவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

கொழும்பில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற, உபாலி குறூப்ஸ் ஊடகவியலாளர் சி.ஏ.சந்திரப்பிறேம எழுதிய கோத்தாவின் போர் நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இலங்கையில் இந்தியாவின் பங்கு தொடர்பாக தீவிரமான விவாதம் நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்தாவும் கலந்து கொண்டிருந்த இந்த நிகழ்வில் உரையாற்றிய லலித் வீரதுங்க, அவ்வப்போது கோத்தாவின் போர் நூலில் குறிப்பிடப்பட்டுள்ள சில விடயங்களையும் வாசித்துக் காண்பித்தார்.

2009 ஏப்ரல் மாதம் இந்தியா, பிரிட்டன், பிரான்ஸ் போன்ற நாடுகள் போரை நிறுத்துமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு கடுமையான அழுத்தங்களைக் கொடுத்தன. ஆனால் அவர் வெளிநாட்டு அழுத்தங்களை கண்டுகொள்ளவில்லை. இரகசியமான சந்திப்புகள் பல நடந்தன.



**வெவ்வேறு காரணங்களைக் கூறிக் கொண்டு பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களும் இங்கு வந்தனர். ஆனால் இவர்களின் நிகழ்ச்சிநிரல் எல்லாமே - போரை நிறுத்துவதாகத் தான் இருந்தது.**

இந்திய நாடாளுமன்றத் தேர்தலுக்கு, தமிழ்நாட்டில் வாக்களிப்பு இடம்பெற முன்னர் - 2009 ஏப்ரலில் இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன் தலைமையிலான குழு கொழும்பு வந்தது.

வெவ்வேறு காரணங்களைக் கூறிக் கொண்டு பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களும் இங்கு வந்தனர். ஆனால் இவர்களின் நிகழ்ச்சிநிரல் எல்லாமே - போரை நிறுத்துவதாகத் தான் இருந்தது.

வடமராட்சி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போது இந்தியப் பிரதமராக இருந்த ராஜீவ் காந்தி அந்த நடவடிக்கைக்கு எதிராகக் கடுமையான அறிக்கை ஒன்றை வெளியிட்டார். இலங்கை அப்போதே தீவிரவாதத்தை ஒழித்திருக்க முடியும்.

ஆனால் இந்தியத் தூதுவராக இருந்த ஜே.என்.டிக்சிற் வலுவான தலையீடு செய்தார்.

அந்த நடவடிக்கை தொடர்ந்திருந்தால் இலங்கை 20 ஆண்டுகளுக்கு முன்னரே போரை முடிவுக்குக் கொண்டு வந்திருக்க முடியும்.

வடமராட்சி நடவடிக்கை இடம்பெற்றுக் கொண்டிருந்த போது அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவைச் சந்தித்த ஜே.என்.டிக்சிற், இலங்கை இராணுவத்தின் கைகளில் யாழ்ப்பாணம் செல்வதை இந்தியா சும்மா பார்த்துக் கொண்டிருக்காது என்று அப்பட்டமாகவே சொன்னார்.

இராணுவ நடவடிக்கைகள் தொடர்ந்தால், எதிர்பாராத விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் அவர் எச்சரித்திருந்தார்.

அதற்கு ஜே.ஆர், எதிர்பாராத விளைவு என்றால் என்னவென்று கேட்டபோது, இலங்கையைத் துண்டாடுவதற்கு விடுதலைப் புலிகளுக்கு இந்தியா இராணுவ உதவிகளை வழங்கும் என்று டிக்சிற் பதிலளித்தார் என்றும் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்ல வோட்டர்எட்ஜ் விடுதியில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற நிகழ்வில், 500 பக்கங்களைக் கொண்ட கோத்தாவின் போர் நூலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெளியிட்டார். (த)

# காரைநகரில் 'ஹட்றிக்'



யாழ்ப்பாணம், மே 16

காரைநகரைச் சேர்ந்த தாய் ஒருவர் ஒரே சூலில் மூன்று ஆண் குழந்தைகளைப் பெற்றெடுத்துள்ளார்.

குழந்தைகளும் தாயும் ஆரோக்கியமாக இருக்கின்றனர் என்று அறுவைச் சிகிச்சையில் ஈடுபட்ட வைத்தியர் தெரிவித்தார்.

ஏற்கனவே இரண்டு ஆண் குழந்தைகளைத் தனித்தனியே பெற்றெடுத்த அவர் தற்போது ஐந்து ஆண் குழந்தைகளுடன் மிகச் சந்தோசமாக உள்ளதாக குழந்தைகளின் தந்தை தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் அதிகாலை 5.28 மணிக்கு முதலாவது குழந்தையும் அடுத்தடுத்து ஒரு நிமிட இடைவெளியில் ஏனைய இரண்டு குழந்தைகளும் 'சிசேரியன்' மூலம் பிரசவிக்கப்பட்டன. முதலாவது குழந்தை 3.2 கிலோகிராமும், இரண்டாவது குழுந்தை 2.66 கிலோகிராமும் மூன்றாவது குழந்தை 1.95 கிலோகிராமும் கொண்டுள்ளன. மூன்றாவது குழந்தை நிறையில் சற்றுக் குறைவாக இருக்கின்றபோதும் ஆரோக்கியமாக உள்ளது.

காரைநகர் சடையாளியைச் சேர்ந்த கிருபாகரன் - சுபாஜினி தம்பதியருக்கே இந்தக் குழந்தைகள் பிறந்துள்ளன. இவர்கள் இருவரும் 30 வயதுடையவர்கள். யாழ். பாஷையூர் கடற்கரை வீதியில் உள்ள திருச்சிலுவை கன்னியர் வைத்தியசாலையில் (ஹோலி குறோஸ்) கடந்த சனிக்கிழமை அனுமதிக்கப்பட்டு நேற்றுமுன்தினம் பிரசவம் நடந்தது. மகப்பேற்று வைத்தியர் ஏ.சிறீதரன் 'சிசேரியன்' சிகிச்சையை மேற்கொண்டார்.

சுபாஜினியின் இரண்டு ஆண் சகோதரர்களும் இரட்டையர்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

யாழ்ப்பாணத்தில் 2010 ஆம் ஆண்டில் உரும்பிராயைச் சேர்ந்த பெண் ஒருவர் மூன்று குழந்தைகளைப் பிரசவித்து இருந்தார். 1990 ஆம் ஆண்டிலும் குருநகரைச் சேர்ந்த தாய் ஒருவர் ஒரே சூலில் இரண்டு ஆண் குழந்தைகளையும் பெண் குழந்தை ஒன்றையும் பெற்றெடுத்திருக்கிறார். (ஒ-4)

# 'எனது உலகு' சிறுவர் புகைப்படக் கண்காட்சி



யாழ்ப்பாணம், மே 16

யாழ்ப்பாண பல்கலைக் கழக ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி மையத்தின் ஏற்பாட்டிலும் எஸ்.டி.சி. நிறுவனத்தின் அனுசரணையிலும் புகைப்படப்பிடிப்பாளரும் பண்பாட்டுப் படைப்பாளியுமான ஜோஎல் (Joel Sames) வழி காட்டலின் கீழ் 'எனது உலகு' எனும் தொனிப் பொருளில் மறவன்புலோ சகலகலா வித்தியாலயத்தில் நேற்று புகைப்படக் கண்காட்சி இடம்பெற்றது.

இந்தக் கண்காட்சியில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயப்பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி கலந்து கொண்டார். நிகழ்வின் ஆரம்ப உரையை ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி மைய இயக்குநர் ரி. தேவானந் நிகழ்த்தினார். இந்தச்செயற்றிட்டம் தொடர்பான உரையை ஜோஎல் நிகழ்த்தினார். இந்த நிகழ்வில் அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை யாழ். பல்கலைக்கழக ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் மேற்படி கண்காட்சி இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது. (த)

## தகவல் தொழில்நுட்ப சமூக ஒன்றுகூடல்

யாழ்.ஐ.ரி.கப்புடன் இணைந்து யாழ்.பல்கலைக் கழகத்தின் கணினிச் சங்கத்தின் ஏற்பாட்டில்யாழ்.ஐ.ரி.கப் இன் தகவல் தொழில்நுட்ப ஒன்று கூடல்நிகழ்வு நாளை வியாழக் கிழமை பிற்பகல் 2 மணி முதல் 5.00 மணிவரை யாழ். பல்கலைக் கழக நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சிரேஷ்ட கணினி தொழில்நுட்பவியலாளர்கள், சிரேஷ்ட மென்பொருள் கட்டமைப்பாளர்கள், கணினித்துறையினரின் கனவுத் தளமான சிலிக் கன் பள்ளத்தாக்கிலிருந்து கணினி வன்பொருள்வல்லுநர்கள், சிரேஷ்ட கணினிவிரிவுரையாளர்களைப் பலர் கலந்து தமது அனுபவங்களைப் பகிரவுள்ளனர். [illegible] அமர்வுகளும் இடம்பெறும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த மாதத்துடன் வெளியேறுகிறது டனிஷ் கண்ணிவெடி அகற்றும் பிரிவு

## நிதிப் பற்றாக்குறையே காரணம்

யாழ்ப்பாணம்,மே 16

யாழ்.மாவட்டத்தில் கண்ணி வெடி அகற்றும் பணியில் ஈடுபட்டு வரும் டனிஷ் கண்ணி வெடி அகற்றும் நிறுவனம் இந்த மாத இறுதியுடன் தனது பணிகளை இடைநிறுத்திக் கொண்டு வெளியேறவுள்ளது. நிதிப் பற்றாக்குறை காரணமாகவே அந்த நிறுவனம் இவ்வாறு வெளியேறுவதாக யாழ். மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலர் வ.முருகதாஸ் தெரிவித்தார்.

இவர் இது தொடர்பாகத் தெரிவித்ததாவது,

யாழ்.மாவட்டத்தில் மிதிவெடி அகற்றும் செயற்பாடுகளில் டனிஷ் கண்ணிவெடி அகற்றும் நிறுவனம், ஹலோட்ரஸ்ற் மற்றும் இராணுவத்தினரின் மனிதநேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவு ஆகியன ஈடுபட்டு வந்தன. தொடர்ச்சியாக நிதிப் பற்றாக்குறைகள் இருப்பதன் காரணமாக டனிஷ் கண்ணிவெடி அகற்றும் நிறுவனம் தனது பணியாளர்களைக் குறைத்துக் கொண்டு வந்தது. இந்த நிலையில் தொடர்ந்தும் இயங்க முடியாத இக்கட்டான நிலைமைக்கு இந்த நிறுவனம் தள்ளப்பட்டதால் இந்த மாத இறுதியுடன் பணிகளை நிறுத்தி அதனை மூடிவிட அவர்கள் தீர்மானித்துள்ளனர்.

இதன் காரணமாக கண்ணிவெடி அகற்றும் பணிகள் தாமதமடையவுள்ளன. முகமாலை முன்னரங்க நிலைகள் தவிர்த்து ஏனைய இடங்களில் அடுத்த ஆண்டு இறுதியில் பூரணமாகக் கண்ணி வெடி அகற்றி முடிக்கப்படும் என்று எதிர்பார்த்தோம் இருப்பினும் டனிஷ் நிறுவனம் வெளியேறுவதால் 2014 ஆம் ஆண்டளவிலேயே அவற்றை அகற்றி முடிக்கக் கூடிய சூழல் ஏற்பட்டுள்ளது.

இதனைவிடத் தற்போது இராணுவத்தின் மனிதநேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவினரும் முல்லைத்தீவுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றிருப்பதால் கண்ணிவெடி அகற்றும் பணிகளில் மேலும் தாமதம் ஏற்படும் என்றார். (த-5)

## சைக்கிள் திருட்டு

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை உத்தியோகத்தர் வாகனப் பாதுகாப்பு நிலையத்தில் விடப்பட்ட புத்தம் புதிய பெண்கள் சைக்கிள் திருட்டுப் போயுள்ளது. இரவுக் கடமைக்கு வந்த பெண் ஊழியரின் சைக்கிளே திருட்டுப் போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவர் உத்தியோகத்தர் வாகனப் பாதுகாப்பு நிலையத்தில் சைக்கிளை நிறுத்தி பூட்டி விட்டுக் கடமையில் ஈடுபட்டதாகவும் காலையில் சென்று பார்த்த போது சைக்கிள் காணாமல் போயிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

உத்தியோகத்தர் வாகனப் பாதுகாப்பு நிலையப் பகுதியில் மின்வெளிச்ச வசதி இல்லாததால் இதனைப் பயன்படுத்தி திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியிருக்கலாமெனத் தெரிவிக்கப்பட்டது. (த-9)

## பருத்தித்துறை நீதிமன்றத்தின் சட்டத்தரணிகளுக்கு அலுவலகம்

வடமராட்சி, மே 16

பருத்தித்துறை மாவட்ட, நீதிவான் நீதிமன்றங்களில் பணியாற்றும் சட்டத்தரணிகளுக்கான அலுவலகக் கட்டடங்கள் கோட்டுவாசல் ஸ்ரீ சண்டிகா பரமேஸ்வரி ஆலயக் காணியில் கட்டப்பட்டு வருகின்றன.

நீதிமன்ற வளாகத்துக்கு எதிரே நீதிமன்ற வீதியின் மறுகரையில் இந்த ஆலயத்துக்குச் சொந்தமான காணியில் சட்டத்தரணிகளுக்கான அலுவலகக் கட்டடங்கள் முன்னர் அமைந்திருந்தன.

கடந்தகால யுத்தத்தினால் இக்கட்டடங்கள் தரைமட்டமாக்கப்பட்டிருந்தன. இப்போது பருத்தித்துறை மாவட்ட நீதிவான் நீதிமன்றங்கள் புனரமைக்கப்பட்டு புதுப்பொலிவுடன் இயங்கி வருகின்றன.

இந்நிலையில் வழக்காளிகள் சட்டத்தரணிகளைச் சந்திப்பதற்கும், சட்டத்தரணிகள் வழக்காளிகளைச் சந்திப்பதற்கும் வசதியான இடங்கள் இல்லாத நிலையில், சட்டத்தரணிகளுக்கான அலுவலகங்கள் முன்னர் இருந்த அதே இடத்தில் அவற்றை மீண்டும் அமைத்துக் கொடுக்க ஆலய பரிபாலனசபை முன்வந்துள்ளது.

**கடந்தகால யுத்தத்தினால் இக்கட்டடங்கள் தரைமட்டமாக்கப் பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.**

முதற்கட்டமாக நீதிமன்ற வீதியோடு இணைந்த ஆலயக் காணியில் முன்னர் அலுவலகங்கள் அமைந்திருந்த அதே இடத்தில் இரண்டு அலுவலகங்களுக்கான அறைகள் கொண்ட கட்டடம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (த-8)

1995ஆம் ஆண்டுக்கு முன் இடம்பெயர்ந்து

## மீளக்குடியமர்ந்தோர் விபரங்களை திரட்டும் பிரதேச செயலகங்கள்

யாழ்ப்பாணம், மே 16

யாழ். மாவட்டத்தில் கடந்த 1995 ஆம் ஆண்டுக்கு முன்னர் இடம்பெயர்ந்து 2009 மே மாதத்திற்குப் பின்னர் மீளக்குடியமர்ந்த மக்கள் தொடர்பான விவரங்கள் பிரதேச செயலகங்களால் திரட்டப்படுகின்றன.

இந்தக் குடும்பங்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பது தொடர்பான செயலமர்வு எதிர்வரும் 21 ஆம் திகதி வவுனியா பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பணிமனையில் நடத்தப்படவுள்ளது.

**இந்தக் குடும்பங்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொடுப்பது தொடர்பான செயலமர்வு எதிர்வரும் 21 ஆம் திகதி வவுனியா பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பணிமனையில் நடத்தப்படவுள்ளது.**

இந்தக் கூட்டத்தில் வடக்கு மாகாண ஆளுநர், மாகாண பிரதம செயலாளர் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து மேற்படி குடும்பங்களின் விவரங்களை உடனடியாக அனுப்பி வைக்குமாறு யாழ்.மேலதிக அரச அதிபர் திருமதி ரூபிணி வரதலிங்கம் சகல பிரதேச செயலகங்களுக்கும் அறிவித்துள்ளார்.

## நாகர்கோவில் ம.வி. அபிவிருத்தி குறித்து ஆராயக் கூட்டம்

மீளக்குடியேற்றம் நடைபெற்று வரும் நாகர்கோவில் பகுதியில் இயங்கி வரும் நாகர்கோவில் மகாவித்தியாலயத்தின் கல்வி அபிவிருத்தி, பௌதிக வளங்கள் அபிவிருத்திகளை மேற்கொள்வது தொடர்பாக எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு வித்தியாலயத்தில் ஆலோசனைக் கூட்டம் நடைபெறவுள்ளது.

வித்தியாலயத்தின் எதிர்காலம் கருதி பெற்றோர்கள், பழையமாணவர்கள், நலன் விரும்பிகள் அக்கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு அதிபர் நா.கண்ணதாசன் அறிவித்துள்ளார். (த-8)

## தென்னந்தோட்டங்களில் ஜூன் மாதம் மீளக்குடியமர்வு

பளை ,மே 16

எழுதுமட்டுவாழ் சந்திக்கும் முகமாலைக்கும் இடையில் உள்ள தென்னந் தோட்டங்களில் ஜூன் மாதத்தில் மக்கள் மீளக்குடியமர்த்தப்படவுள்ளனர்.

ஏ-9 வீதியின் இருபுறமும் உள்ள கீ.ஆர் தோட்டம் வீ.எம்.கே. தோட்டம்,ஆகியவற்றிலேயே மீளக்குடியமர்வு அடுத்த கட்டமாக இடம் பெறவுள்ளது.

பளைப் பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படாத இடங்களில் விரைவில் கட்டம் கட்டமாக மக்கள் மீளக்குடியமர்த்தப்படவுள்ளனர்.

இந்தப் பகுதிகளில் படையினர் மற்றும் ஹலோ டிரஸ்ற் நிறுவனம் ஆகியவற்றின் வெடி பொருள் அகற்றும் பிரிவினர் அங்குலம் அங்குலமாக பரிசோதனைகளை மேற்கொண்டு வெடி பொருள்களை அகற்றி வருவதால் மக்கள் அவசரப் படவேண்டாம் எனவும் வெடி பொருள்கள் அகற்றும் பணிகள் நிறைவடையும் பகுதிகளில் மக்கள் உடனுக்குடன் மீளக் குடியமர்த்தப்படுவர் எனவும் இத்தாவிலில் நேற்று நடைபெற்ற மீளக்குடியமர்வு நிகழ்வில் தெரிவிக்கப்பட்டது.

## தென்மராட்சி பாடசாலைகளுக்கு மரக்கறி விதைகள் விநியோகம்

தென்மராட்சி,மே 16

மாகாண கல்வித் திணைக்களத்தின் பாடசாலைத் தோட்டங்களில் மரக்கறிப் பயிர்ச் செய்கையை ஊக்குவிக்கும் திட்டத்தின் கீழ் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கு மரக்கறி விதைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் வலயக் கல்வி அலுவலகத்தில் விநியோகம் இடம்பெறும்.

பாடசாலைகளுக்கு இன்று ஐந்து பைக்கெற் வித்துக்களும், ஆசிரியர்களுக்கு ஒரு பைக்கெற் வித்துக்களும் விநியோகிக்கப்படவுள்ளதால் பொருத்தமான ஆசிரியரை அனுப்பி விதைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (த-9)

## முதலாவது பெண் அரச அதிபராகி பெருமை சேர்த்தவர் இமெல்டா

### யாழ். செயலகத்தில் அவருக்கு அரச அதிகாரிகள் பலரும் பாராட்டு



யாழ்ப்பாணம், மே 16

யாழ். மாவட்டத்தின் முதலாவது பெண் அரச அதிபராகப் பதவியேற்று, மக்களுக்காகத் தன்னை அர்ப்பணித்து சேவை செய்து மக்களிடம் பாராட்டுக்களைப் பெற்று, தேசிய விருதுகளை வென்று மாவட்டத்துக்குப் பெருமை சேர்த்தவர் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார்.

இவ்வாறு திணைக்களத் தலைவர்கள், பிரதேச செயலர்கள், கணக்காளர்கள், திட்டப் பணிப்பாளர்கள், சிற்றூழியர்கள் அனைவரும் அவரை நேற்றுப் பாராட்டி வாழ்த்தினர்.

யாழ். மாவட்ட செயலக நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் அரச அதிபரின் பிரியாவிடை வைபவம் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது.

இதில் பிரதேச செயலர்கள் மாவட்ட செயலக திணைக்களத் தலைவர்கள், கணக்காளர்கள், திட்டப் பணிப்பாளர்கள், ஊழியர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணம் சவால் நிறைந்த மாவட்டமாக விளங்கிய போதும், ஒரு பெண்ணாகப் பதவியேற்று, பெண்களுக்கெதிரான வன்முறைக்காகக் குரல் கொடுத்ததுடன் அவர்களைத் தலை நிமிரச் செய்தவர் திருமதி இமெல்டா சுகுமார். அத்துடன் சகல மக்களையும் வேறுபாடு காட்டாது தனது சேவையால் அரவணைத்தவர் என்று அவரை அனைவரும் பாராட்டி வாழ்த்தினர்.

இந்த வாழ்த்துரைகளுக்குப் பின்னர் அரச அதிபர் திருமதி இமெல்டா ஏற்புரை நிகழ்த்தினார்.

அவர் தனதுரையில் தெரிவித்ததாவது:-

யாழ். மாவட்டத்தில் இது வரை சாதித்ததை எண்ணி மகிழ்ச்சியடைகின்றேன். சகல அலுவலர்களதும் அனுசரணையுடன் தான் என்னால் இதனைச் செய்ய முடிந்தது.

எல்லோரும் ஏன் இந்தத் திடீர் இடமாற்றம் என்று கேட்கின்றனர். என் வாயாலே சொல்ல வேண்டும் என்று நினைக்கின்றனர். இந்த இடமாற்றம் வரும் என்று நான் முன்னரே கணிப்பீடு செய்திருந்தேன்.

அரசியல் செல்வாக்குள்ளவர்கள் சௌகரியமான இடத்திலிருந்து சேவையாற்ற முடியும். 1984 ஆம் ஆண்டில் நான் அரச சேவைக்கு செல்லும்போதே இடமாற்றத்துக்கு தயாராகவே வந்தேன். எனது தற்போதைய இடமாற்றம் ஜனாதிபதி மட்டத்திலேயே எடுக்கப்பட்டதாக அமைச்சின் செயலர் கூறினார். இந்த இடமாற்றப் பின்னணியில் அரசியல், ஆளுநரின் சம்பவங்கள் இருப்பதாக கூறுகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருக்கின்ற ஒவ்வொரு மக்களும் என்னை மறக்க மாட்டார்கள். நான் எனது மக்களுக்கு சேவையாற்றுவதை யாராலும் தடுக்க முடியாது. அரசின் கொள்கைகளைச் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தியிருந்தேன்.

நான் பதவி உயர்வு கேட்கவில்லை. எனது மக்களுக்காகவே சேவையாற்றினேன். நான் இந்த மாவட்டத்தில் பதவி ஏற்கும் பொழுது 250 குடும்பங்களையே மீளக்குடியமர்த்தியிருந்தனர். இப்போது 37 ஆயிரம் பேரை மீளக்குடியமர்த்தியுள்ளேன்.

மக்களுக்குச் சேவை செய்யும், மக்கள் நாடிவரும் புனிதமான பணியில் இருப்பதனால், மக்களை அலைக்கழிக்காமல் நீங்களும் சேவையாற்ற வேண்டும் - என்றார். (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலிகள் பற்றி தகவல் வழங்கும் பிலிப்பைன்ஸ்

பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா தெரிவித்துள்ளார்.

தற்போது இலங்கைக்குப் பயணம் செய்துள்ள பிலிப்பைன்ஸின் பிரதி வெளிவிவகார அமைச்சர் எர்லின்டா பெசிலியோ இந்த உறுதி மொழியை வழங்கியுள்ளார்.

புலம்பெயர் புலி ஆதரவு அமைப்புக்கள் பிலிப்பைன்ஸ் தீவிரவாத அமைப்புக்களுடன் தொடர்புகளைப் பேணி வருவதாக பிரதி அமைச்சர் நியோமல் பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் 50 ஆண்டு கள் பூர்த்தியாவதை முன்னிட்டு பிலிப்பைன்ஸ் பிரதி வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்குப் பயண செய்துள்ளார். (த)

## புலிகளுக்கு உதவிய கனேடிய தமிழர் விடுதலை

தடுத்து வைக்கப்பட்ட காலத்தை அவரின் தண்டனையாகக் கருதி விடுதலை செய்ய நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

விடுதலை செய்யப்பட்ட கனேடியரான ரமணன் மயில்வாகனம் மீண்டும் கனடா வருவதற்கு சட்டச் சிக்கல்களை எதிர்கொள்வாரா என்பது குறித்துத் தெளிவான விவரங்கள் இது வரை வெளியாகவில்லை.


புலிகள் அமைப்புக்கு நிதி சேகரித்தார் என்ற குற்றச்சாட்டில் கைதான கருணாகரன் கந்தசாமி என்ற அமெரிக்க பிரஜையும் கடந்த வாரம் நியூயோர்க் நீதிமன்றத்தினால் அவர் சிறையிலிருந்த காலத்தை தண்டனையாகக் கருதி விடுதலை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)

### விடுதலையாகினர்

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட இருவர் அவர்களின் குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் நிராகரிக்கப்பட்ட நிலையில் வவுனியா மேல்நீதி மன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர். கடந்த 2010 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட இவர்கள் கட்டம் கட்டமாக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வந்தனர்.

விடுதலையானவர்கள் மன்னார் அடம்பனைச் சேர்ந்த கி.வார்ஸ்த், வவுனியா குரும்பன் காட்டைச் சேர்ந்த பு.சதீஸ்வரன் ஆகியோரே விடுதலையாகினர்.

## பற்றைக் காணிகளைப் பார்த்து கதறி அழுத இத்தாவில் மக்கள்



பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தின் இத்தாவில், வேம் பொடுகேணி ஆகிய பிரிவு களில் மீளக் குடியமர்வு நேற்று செவ்வாய்க்கிழமை இடம் பெறும் என பத்திரிகைளில் அறிவிக்கப்பட்டதை அடுத்து இந்தப் பிரிவுக ளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இத்தாவில் முருகமூர்த்தி ஆலயத்துக்குக் காலையிலேயே வருகை தந்திருந்தனர்.

இத்தாவில் - அரசர் கேணி வீதியின் கிழக்குப் புறமும், இத்தாவில் ஏ-9 வீதியில் இருந்து நவுணதீவு அம்மன் கோயிலுக்குச் செல்லும் வீதியின் கிழக்குப் புறமுமே மீள்குடியமர அனுமதிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டதால் குறித்த வீதிகளின் மேற்குப் புறத்தில் உள்ள நூற்றுக்கணக்கான குடும்பங்கள் தமது பகுதியில் விரைவில் தம்மை மீளக்குடியமர்த்துமாறு அதிகாரிகளைக் கோரினர்.

பளைப் பிரதேச செயலக பிரிவில் உள்ள இத்தாவில், வேம்பொடுகேணி ஆகிய பிரிவுகளில் ஒரு பகுதி மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பான நிகழ்வு நேற்று இத்தாவில் முருகமூர்த்தி ஆலய முன்றிலில் இடம்பெற்றது.

பளைப்பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பளைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான முருகேசு சந்திரகுமார், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் கீதாஞ்சலி, கிளிநொச்சி மாவட்ட அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதி, 551 ஆவது படையணியின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் குலதுங்க, கேணல் வணிக சுயதர உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தமது காணிகளில் மீளக் குடியமரும் ஆர்வத்துடன் இந்தப் பகுதிகளைச் சேர்ந்த 250க்கும் மேற்பட்ட குடும்பங்கள் அங்கு வந்திருந்தனர்.

புனரமைக்கப்பட்டிருந்த இத்தாவில் முருகமூர்த்தி ஆலயத்தில் மீள்குடியமர்வு தொடர்பான விசேட பூசைகளின் பின்னர் விருந்தினர்கள் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டுக் கூட்டம் தொடங்கியது.

கூட்ட நிறைவில் மீள்குடியமர்வுக்குப் பதிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு காணிகளைத் துப்புரவு செய்வதற்காக இந்திய அரசினால் வழங்கப்பட்ட உபகரணங்கள் கையளிக்கப்பட்டன.

கூட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கான மதிய உணவினை பச்சிலைப் பள்ளி அபிவிருத்திப் பேரவையினர் வழங்கினர்.

புனரமைக்கப்படவுள்ள இத்தாவில் அரச கேணி இணைப்பு வீதி திருத்த வேலைகளை நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் ஆரம்பித்து வைத்தார். (த-9)

### தெரிவுக்குழு தொடர்பில் ரணில் – சம்பந்தன் பேச்சு

பில் தமது கட்சியின் நிலைப்பாட்டை சம்பந்தன் ஐ.தே.க. தலைவரிடம் தெரிவித்துள்ளார் என்றும் அறியமுடிகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. சுமந்திரனும் இச்சந்திப்பில் பங்கேற்றிருந்தார்.

## ஐ.நாவின் முன்னால் அணிதிரளும் தமிழர்

நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு பேரணியாகத் தொடங்கி, ஐ.நாவுக்கு முன்னால் நினைவெழுச்சி நிகழ்வாக இது நிறைவு பெறவுள்ளது.

இந்த நிகழ்வில், அமெரிக்க தமிழ் உறவுகள் மட்டுமல்ல கனடாவின் மொன்றியல் தமிழ் உறவுகளும் இதில் பங்கெடுக்கவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிங்கள பௌத்த பேரினவாத அரசினால் ஈழத்தமிழினத்தின் மீது நடந்தேறிய இனப்படுகொலையை வெளிப்படுத்தும் வகையில், ஒளிப்படக் கண்காட்சி மற்றும் துண்டுப் பிரசுரங்கள் பரப்புரைகளும் இடம்பெறவுள்ளன. (த)

## அரசின் உண்மைத் தன்மை குறித்து எமக்குச் சந்தேகம்

யின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க ஊடகவியலாளர்களுடன் பேசிய போது தெரிவித்தார்.

நல்லிணக்க ஆணைக் குழுவை நடைமுறைப் படுத்தியதிலும் அரசியல் தீர்வு காண்பதிலும் நேர்மையான, உண்மையான முயற்சிகள் எடுக்கப்படாதுவிடின் நாடு பெரும் கஷ்டங்களை கட்டாயமாக அனுபவிக்க வேண்டிவரும். முன்னெப்போதையும்விட கூடுதலாகச் சர்வதேச சமுதாயம் இலங்கையை அவதானித்து வருகின்றது என அவர் கூறினார்.

திங்கட்கிழமை நடந்த பேச்சு சர்வதேச சமூகத்தின் அழுத்தம் காரணமாக நடந்ததா எனக் கேட்கப்பட்ட போது, அதற்கான சாத்தியத்தை அவர் நிராகரிக்கவில்லை.

ஒரு அரசியல் தீர்வை எட்டும் செயல் முறையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மக்கள் விடுதலை முன்னணி உட்பட சகல எதிர்க் கட்சிகளுடனும் பேச வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி இந்தச் சந்திப்பின் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைக் கோரியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தெரிவுக்குழுவில் பங்குகொள்ள வைக்க ஐக்கிய தேசியக் கட்சி முயற்சிக்க வேண்டுமென ஜனாதிபதி கூறியபோது, அரசு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசிய விடயங்களைத் தெரிவுக்குழுவில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி கேட்டுக்கொண்டது.

அரசுடன் நடத்திய பேச்சுப் பற்றி விளக்குவதற்காகத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை ஐக்கிய தேசியக் கட்சி திங்கட்கிழமை சந்தித்தது என்று திஸ்ஸ அத்தநாயக்க மேலும் கூறினார். (த)

## நவநீதம்பிள்ளைக்கு பதவி நீடிப்பு அனுமதி கோரினார் பான் கீ–மூன்

கின்றமை பெரும் ஏமாற்றத்துக்கு உள்ளாக்கியுள்ளது.

நவநீதம்பிள்ளையின் பதவிக்காலம் இந்த ஆண்டு இறுதியுடன் முடிவடையவுள்ள நிலையில், அவர் மேலும் இரண்டு ஆண்டுகளுக்குப் பணியாற்ற இணங்கியுள்ளதாக ஐ.நா. பொதுச் செயலர் பான் கி மூனின் பணியகம் அறிவித்துள்ளது.

தென்னாபிரிக்க நீதியாளரான நவநீதம்பிள்ளை, 2008ஆம் ஆண்டில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளராகப் பதவியேற்றிருந்தார்.

இவர் இந்தப் பதவியை ஏற்க முன்னர், நெதர்லாந்தில் உள்ள அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றத்தின் மேல்முறையீட்டு அமர்வின் நீதியாளராகப் பணியாற்றியிருந்தார்.

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் உள்ளிட்ட மனிதஉரிமை மீறல்கள் குறித்துக் கடுமையான கருத்துக்களை வெளியிட்டு வரும் நவநீதம் பிள்ளை, பாரபட்சமாக நடந்து கொள்வதாக இலங்கை அரசினால் கடுமையாக விமர்சிக்கப்பட்டு வருபவராவார்.

நவநீதம்பிள்ளையின் பதவிக்காலம் இந்த ஆண்டுடன் நிறைவடைவதையிட்டு இலங்கை நிம்மதியடைந்திருந்த நிலையில், அவருக்குப் பதவிநீடிப்பை வழங்க பான் கீ மூன் அனுமதி கோரியிருப்பது இலங்கையை ஏமாற்றத்துக்கு உள்ளாக்கியுள்ளது.(த)

## கண்ணீர் சிந்தும் நேரத்தில் கைகொட்டிச் சிரிக்கிறது அரசு

சலிசெலுத்த வேண்டிய தருணத்தில் கைதட்டிச் சிரிப்பது போன்றதுதான் அரசின் யுத்த வெற்றிக் கொண்டாட்டம் என்றும் அந்தக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

மக்கள் வாழ்வதற்கு வழியின்றி திண்டாடும் நிலையில் அரசு யாரைத் திருப்திப்படுத்துவதற்காக போர் வெற்றி விழாவைக் கொண்டாடுகின்றது என அக் கட்சியின் பொதுச் செயலாளர் சிறிதுங்க ஜயசூரிய சுட்டிக்காட்டினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

அரசின் முறையற்ற பொருளாதாரக் கொள்கைகள் காரணமாக நாட்டின் பொருளாதாரம் இன்று அதல பாதாளத்துக்குள் தள்ளப்பட்டுள்ளது.

மக்கள் ஒருவேளை உணவைக்கூட ஒழுங்காக உண்ணுவதற்கு வழியின்றித் திண்டாடுகின்றனர். அந்தளவுக்கு நாட்டின் பொருளாதாரம் மிகவும் மோசமாகவுள்ளது.

இந்நிலையில், அரசு கோடிக்கணக்கில் பணத்தை வாரியிறைத்து யுத்த வெற்றி விழாவைக் கொண்டாடுவதற்கு முயற்சிக்கின்றது. அரசின் இந்த நடவடிக்கையை ஒருபோதும் ஏற்கமுடியாது.

கண்ணீர் அஞ்சலிசெலுத்த வேண்டிய சந்தர்ப்பத்தில் கைதட்டிச்சிரிப்பது போல்தான் அரசின் யுத்த வெற்றிவிழா உள்ளது.

தமிழ்மக்கள் அன்று வன்னியில் இட்ட மரண ஓலமே மஹிந்த அரசுக்கு சர்வதேசப் பிரச்சினையாக மாறியது. எனவே, தமிழ்மக்களை மேலும் அரசு கொடுமைப்படுத்துமானால் விளைவுகள் பாரதூரமாகவே அமையும்.

எனவே, அரசு தமிழ்மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார்.

## டக்ளஸ், கருணா, பிள்ளையான் போன்றவர்களால் பயனில்லை

தமிழ் அரசியல்வாதிகள் மீது வட வடக்கு, கிழக்கு மக்கள் நம்பிக்கை வைக்கவில்லை எனவும், இதனால் அந்த மக்களுக்கு நெருக்கமான தமிழ் அரசியல் தலைவர்களை அறிமுகப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து பாதுகாப்புச் செயலாளர், ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளதுடன் இதற்குப் பொருத்தமான சில தமிழ் இளைஞர்களை தான் அடையாளம் கண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு, கிழக்கில் புதிய அரசியல் தலைமைத்துவத்தை அறிமுகப்படுத்தாது, போரில் பெற்ற வெற்றியைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல முடியாது என ஜனாதிபதியிடம் தெளிவுபடுத்தியுள்ள பாதுகாப்புச் செயலாளர், எதிர்காலத்தில் நடைபெறும் தேர்தல்களில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கருணா மற்றும் பிள்ளையான் போன்றவர்களினால் போதிய பயன் கிடைக்கப் போவதில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புச் செயலாளரின் கருத்துக்களை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டுள்ள போதிலும் தற்போது தேசியப்பட்டியலில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் இரண்டு பேரை பதவி விலக செய்ய தலைக்குத் தேவையாக இருந்த போதிலும் எவரையும் அதற்கு இணங்கவைக்க முடியவில்லை எனக் கூறியுள்ளார். (த)

## வடக்கு தேர்தலை விரைவில் நடத்துக

சபைத் தேர்தலை மட்டும் ஏன் நடத்த முடியாது என எதிர்க்கட்சிகளும் கேள்வி எழுப்பிவரும் இவ்வேளையிலேய கபே அமைப்பும் இவ்வாறான தொரு அறிவிப்பை விடுத்துள்ளது.

அதேவேளை, எந்தவொரு தேர்தலையும் எதிர்கொள்வதற்குத் தாம் தயார் என அரசு சூளுரைத்தாலும் வட மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு அது அஞ்சுகின்றது என எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டுகின்றன.

இருப்பினும், கண்ணிவெடியைக் காரணங்காட்டி அவ்வாறான குற்றச்சாட்டுகளை அரசு சமாளிக்கின்றது.

இந்நிலையில், வடமாகாணசபைத் தேர்தல் விவகாரம் குறித்து 'உதய'னிடம் கருத்து வெளியிட்ட கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னகோன்,

''வடமாகாணசபைத் தேர்தலை அரசு விரைவில் நடத்தவேண்டும். இதுவே எமது நிலைப்பாடாகவுள்ளது. கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு இன்னும் எத்தனை வருடங்கள் எடுக்கும் என்ற கேள்வி தற்போது எழுந்துள்ளது'' - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடு கடந்த தமிழீழ அரசால்

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வணக்கப் பாடல் வெளியீடு

யாழ்ப்பாணம்,மே.16

தமிழீழத் தேசிய துக்க தினத்தை முக்கியப்படுத்தி முள்ளிவாய்க்கால் மூன்றாம் ஆண்டு நினைவேந்தல் வாரம் உலகெங்கும் கடைப் பிடிக்கப்பட்டு வரும் நிலையில், நாடுகடந்த தமிழீழ அரசின் தகவல்துறை அமைச்சகத்தினால் நினை வேந்தல் வாரத்துக்கான வணக்கப் பாடல் வெளியிட்டு வைக்கப் பட்டுள்ளது.

பிரான்ஸ்-லாகூர்னெவப் பகுதியில் நிறுவப்பட்டிருக் கும் பிரிகேடியர் சுப.தமிழ் செல்வனின் நினைவிடத் தில், இந்த நினைவேந்தல் வணக்கப்பாடலை நாடு கடந்த தமிழீழ அரசு உத்தி யோகபூர்வமாக வெளியிட்டு வைத்துள்ளது.

மே-12 முதல் கடைப் பிடிக்கப்பட்டு வரும் முள்ளி வாய்க்கால் நினைவேந்தல் வாரத்துக்குரிய வணக்கப் பாடலாக இது இயற்றப் பட்டுள்ளது.

**பிரான்ஸ்—லாகூர்னெவப் பகுதியில் நிறுவப்பட்டிருக் கும் பிரிகேடியர் சுப.தமிழ் செல்வனின் நினைவிடத் தில், இந்த நினைவேந்தல் வணக்கப்பாடல் வெளியிட்டு வைக்கப்பட்டது.**




பாடலுக்கான வரிகளை திலோபா எழுதியிருக்க, ஸ்ரார் சிறியின் இசையில் மயிலையூர் இந்திரன் மற்றும் புலியாட்சி ஆகியோர் பாடியுள்ளனர். இந்த நினை வேந்தல் வணக்கப் பாட லின் இறுவட்டை பிரான்ஸ்-லாகூர்னெவ் நகரசபை உறுப் பினர் அந்தோனி றூசல் வெளியிட்டு வைத்தார்.

(வ)

## முள்ளிவாய்க்காலில் மரணித்த உறவுகளின் ஆத்மா சாந்தியடைய வேண்டி மகா யாகம்



2009ஆம் ஆண்டு மே மாதம் முள்ளிவாய்க்காலில் மரணித்த ஈழ உறவுகளின் ஆத்ம சாந்திக்கான மகா யாகம் ரொறன்ரோவில் அமைந்துள்ள ஐயப்பன் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்றது. புலம்பெயர் தமிழ் அமைப்புகளினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த யாகத்தில் பல மதகுருமார்கள் கலந்துகொண்டு ஆத்மசாந்திக்கான மகா யாகத்தை நடத்தினர். முள்ளி வாய்க்காலில் பலியானவர்களுக்கான நினைவாலயத்தை கடந்த வெள்ளிக்கிழமை திறந்துவைத்து வணக்க நிகழ்வுகளை நடத்தி வரும் நாடு கடந்த அரசு, மே மாதம் 18ஆம் திகதியன்று வெள் ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு ரொறன்ரோ குயின்ஸ் பார்க் சட்டசபையின் முன்னால் துக்க நிகழ்வுகளை ஏற்பாடு செய்துள்ளது. இந்த நிகழ்வுக்கு கனடாவிலுள்ள முக்கிய அமைப்புகள் தமது ஆதரவை வழங்கியுள்ளன. (ந)

### தொழில் வாய்ப்பற்ற இளைஞர், யுவதிகளின் விவரம் திரட்டல்

கரவெட்டி, வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலர்பிரிவுகளில் தொழில்வாய்ப்பு களற்ற இளைஞர் யுவதிக ளின் விவரங்கள் திரட்டப் பட்டு வருகின்றன.

எனவே இதுவரை பதிவு களை மேற்கொள்ளாத மேற் படி பிரிவுகளைச் சேர்ந்த இளை ஞர், யுவதிகள் பிரதேச செய லகங்களில் அதற்கான விண் ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து ஒப்படைக்குமாறு கர வெட்டி,வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகங் கள் கோரியுள்ளன. (வ-8)

### ரயிலில் மோதுண்டு ஒருவர் சாவு

வெள்ளவத்தை ரயில் நிலையத்துக்கு அருகில் ஓடும் ரயிலில் மோதுண்டு ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று பிற்பகல் 1.30 அள வில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

ரயிலில் மோதுண்டு உயிரிழந்தவர் ஆண் ஒருவர் என அடையாளம் காணப் பட்டுள்ள நிலையில், மேல திக விவரங்கள் எதுவும் தெரிய வரவில்லை. (ந)

வெள்ளவத்தையில் மோசடி

# பலகோடி ரூபாவுடன் பெண் தலைமறைவு

கொழும்பு, மே16

கொழும்பு வெள்ளவத்தை யில் பல கோடி ரூபாவுடன் பெண் ஒருவர் தலைமறை வாகியுள்ளார். பலரிடம் மோச டியாக பெற்றுக்கொண்ட பணத்துடனேயே இந்தப் பெண் தலைமறைவாகியுள் ளார் என்று பல முறைப்பாடு கள் கிடைத்துள்ளன.

அதி காரத்திலுள்ளவர் களிடம் செல்வாக்கு இருப்ப தாகக் கூறி, அவர்கள் மூலம் வாகன வரிச்சலுகையுடன் அனுமதிப்பத்திரம் , மது சாலை அனுமதிப்பத்திரம் ஆகியவற்றைப் பெற்றுத் தருவதாகக் கூறிப் பலரிடம் இந்தப் பெண் பணம் வசூலித் துள்ளார். அத்துடன், பணம் தருவோருக்கு கூடிய வட்டி வீதத்தையும் வழங்குவ தாகக் கூறியுள்ளார்.

புலம்பெயர் தமிழர்கள், நகை வர்த்தகர், பிரபல வர்த் தகர்கள் எனப் பலர் இந்தப் பெண்ணிடம் கோடிக்கணக் கான பணத்தை நம்பிக்கை யின் அடிப்படையில் வழங்கி யுள்ளனர்.

உயர் தொழில் புரியும் இந்தப் பெண் சுமார் 20 முதல் 50 கோடி ரூபா வரை பலரி டமிருந்து சேகரித்துள்ளார். பணம் பெற்றுக்கொண்ட சிலருக்கு நம்பிக்கையின் நிமித்தம் காசோலைகளை யும் வழங்கியுள்ளார்.

எனினும், பணம் இல்லாத வைப்புக் கணக்கின் பேரி லேயே காசோலைகள் வழங் கப்பட்டுள்ளன என்பதை வங்கிக்குச் சென்றுஏமாற்ற மடைந்த பாதிக்கப்பட்ட சிலர் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில மாதங்களாக அவரது நடத்தையில் சந் தேகம்கொண்ட, பணம் கொடுத்தோர் பணத்தை மீளப் பெற எத்தனித்தபோதே அவர் தலைமறைவாகிவிட்டார் என் பது தெரியவந்தது.

இதேவேளை பாதிக்கப் பட்டோர் பொலிஸ் நிலை யத்தில் முறைப்பாடு செய்ய வும் அஞ்சுகின்றனர் எனத் தெரியவருகிறது. காரணம், பணத்திற்கான சட்டரீதியான ஆவணம் கோரும் பட்சத் தில் சிரமம் ஏற்படும் எனவும், பணத்தை வழங்கியதற்கான சாட்சி இல்லை எனவும் பாதிக் கப்பட்டவர்கள் தெரி விக் கின்றனர். இந்தப் பெண் தமிழ கத்திற்குத் தப்பிச் சென்று தலைமறைவாகி யிருக்கலாம் என்று சந்தேகிக் கப்படுகிறது. (ந)




தென்புலோலி காந்தியூர் கோட்டத்துறை பத்திரகாளி சமேத வீரபத்திரசுவாமி கோயில் வருடாந்த விசேட அபிஷேக உற்சவம் இன்று புதன்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 1008 சங் காபிஷேகத்துடன் கூடிய மணவாளக்கோல உற்சவம் இடம்பெறும்.

(வ-8)

***

இருபாலை கற்பகப்பிள் ளையார் ஆலய வருடாந்த பெருந்திருவிழா கடந்த 3 ஆம் திகதி கொடியேற்றத் துடன் ஆரம்பமாகி நடை பெற்று வருகின்றது.

இன்று புதன்கிழமை மாலை 6 மணிக்கு சப்பறத் திரு விழாவும், நாளை வியாழக் கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெற வுள்ளன.

***

மணியம் தோட்டம் கர்த் தர் ஆலய வருடாந்த விண் ணேற்புப் பெருவிழா நாளை மாலை 4.45 மணிக்கு கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகவுள் ளது.எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு முதல் நன்மைத் திருப்பலியும் மாலை 5 மணிக்கு நற்கருணைப் பெரு விழாவும் இடம்பெறும்.

மறுநாள் ஞாயிற்றுக் கிழமை காலை 6.30 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் திருச்சொரூப பவனியும் ஆசீ ரும் இடம்பெறும்.

(வ-135)

## மரண அறிவித்தல்

### கோவிந்தர் சிவலிங்கம் (சித்தப்பா)

(இளைப்பாறிய மின்சார சபை ஊழியர், யாழ். மாநகரசபை)



வீமன்காமம் தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், கரவெட்டி, வெல்லன், மத்தொனியைப் வசிப்பிடமாகவும் கொண்ட கோவித்தர் சிவலிங்கம் நேற்று (15.05.2012) செவ்வாய்க் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கோவிந்தர் தம்பதியரின் அன்பு மகனும் கமலாதேவியின் அன்புக்கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.05.2012) புதன்கிழமை அவரது இல்லத்தல் நடைபெற்று, நண்பகல் 12 மணிக்கு தகனக்கிரியைக்காக சோனப்பு இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

வெல்லன்,
மத்தொனி,
கரவெட்டி.

தகவல்
சி.கமலாதேவி
(மனைவி)

# இலங்கையர்களுக்கு வேலை வழங்க இத்தாலி, ஈராக், கொரியா இணக்கம்

வெளிநாட்டு வேலைவாய்ப்பு நலனோம்பு அமைச்சர் டிலான் தெரிவிப்பு

இலங்கையர்களுக்குத் தொடர்ந்தும் அதிக வேலை வாய்ப்புக்களை வழங்க இத்தாலி, ஈராக், குவைத் மற் றும் தென் கொரிய அரசுகள் இணக்கம் தெரிவித்துள்ளன. இதற்கென மேற்படி நாடு களுடன் செய்து கொள்ளப்பட் டிருக்கும் ஒப்பந்தங்கள் நீடிக் கப்பட்டிருக்கின்றன என்று வெளிநாட்டு வேலை வாய்ப்பு நலனோம்பு அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்களின் நலன்புரி வசதிகளை உறு திப்படுத்தும் நோக்கில் அமைச்சர் டிலான் பெரேரா தலைமையில் ஜோர்தான் நாட்டின் அம்மான் நகரில் இரு நாள் உத்தியோகபூர்வ மாநாடு நடைபெற்று வருகிறது.

இதில் கலந்து கொண்டு உரை யாற்றுகையிலேயே அமைச் சர் மேற்கண்டவாறு தெரிவித் தார்.

இந்த மாநாட்டில் அபு தாபி, ஓமான், குவைத், பஹ்ரேன், மலேஷியா, சிங் கப்பூர், சவூதி அரேபியா, கட் டார், லெபனான், சைப்பிரஸ் மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளின் இலங்கைத் தூது வர்கள், நலன்புரி நிலைய அதிகாரிகள், ஐ. எல். ஓ. மற் றும் ஐ. ஓ. எம். ஆகிய சர்வ தேச அமைப்புக்களின் பிரதி நிதிகளும் கலந்து கொண் டனர்.

இந்த மாநாட்டில் அமைச் சா டிலான் மேலும் தெரிவித்த தாவது:-

பொதுவாக வெளிநாட்டு வேலைவாய்ப் புக்கென இலங்கையிலிருந்து பெண் களே அதிகமாக வேலைக்க மர்த்தப்படுகின்றனர். குறிப் பாக மத்திய கிழக்கு நாடு களுக்கு பெண்களே அதிகள வில் செல்கின்றனர். இந் நிலையில் மாற்றத்தை ஏற் படுத்தி ஆண்களுக்கும் வெளிநாடுகளில் அதிக வேலை வாய்ப்பைப் பெற் றுக் கொடுக்க வேண்டும் என்பதே மஹிந்த சிந்தனை யின் கொள்கையாகும்.

அந்த வகையில், இத் தாலி, ஈராக், குவைத் மற் றும் தென்கொரிய நாடுக ளில் இலங்கை ஆண் ளுக் கும் அதிகளவிலான வேலை வாய்ப்புக்கள் பெற்றுக் கொடுக் கப்படவுள்ளன.

ஓமான் நாட்டிலும் வேலைவாய்ப்பு

இதேவேளை, வீட்டுப் பணிப்பெண் தொழிலுக்கும் மேலதிகமாக அதிக சம்பளத் துடன் கூடிய தாதியர், தாதி உதவியாளர்கள் உள்ளிட்ட பல்வேறு வேலை வாய்ப் புக்களைப் பெற்றுக் கொடுப் பது தொடர்பிலும் அந்நாட் டின் உயர்மட்ட அதிகாரிகளு டன் பேச்சு நடத்தத் திட்ட மிடப்பட்டுள்ளது.

இதன் கீழ் விரைவில் முதற்கட்டப் பேச்சு ஓமான் நாட்டில் நடத்தப்பட இருக் கின்றது- என்றார்.

(ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபான்ஸ் பொன்மாலைப் பொழுது

பல வருட காலமாக உங்களுக்கு தரமான
வீட்டு மின் உபகரணங்களை வழங்கும் அபான்ஸ் நிறுவனம்
இதோ உங்கள் ஊரில் இனிமையான
மாலைப்பொழுதொன்றை ஏற்பாடுசெய்துள்ளது.

- மெஜிக் காட்சிகள்
- D J இசைநிகழ்ச்சி
- சமையல் செயன்முறைகள்
- மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள்

## அனைவருக்குமான விநோத விளையாட்டுக்கள்

- பாடல் போட்டி
- இசைக்கதிரைப்போட்டி
- சிறுவர் விளையாட்டுக்கள்
- விநோத உடைப்போட்டி
- கேள்வி பதில்கள்
- சமையல் போட்டிகள்

3D (முப்பரிமாண) தொழில்நுட்பத்துடன் கூடிய, புதிய திரைப்பட காட்சிகள்

குடும்பத்தோடு வாருங்கள், போட்டிகளில் கலந்து பரிசில்களை அள்ளிச்செல்லுங்கள்

| | | | |
|---|---|---|---|
| 14-05-2012 | கனகராயன் குளம் | 22-05-2012 | பருத்தித்துறை |
| 15-05-2012 | மல்லாவி | 23-05-2012 | சுன்னாகம் |
| 16-05-2012 | முல்லைத்தீவு | 24-05-2012 | சங்கானை |
| 17-05-2012 | கிளிநொச்சி | 25-05-2012 | மானிப்பாய் |
| 18-05-2012 | பளை | 26-05-2012 | திருநெல்வேலி |
| 19-05-2012 | சாவகச்சேரி | 27-05-2012 | யாழ்ப்பாணம் A |
| 20-05-2012 | அச்சுவேலி | 28-05-2012 | யாழ்ப்பாணம் B |
| 21-05-2012 | நெல்லியடி | 29-05-2012 | முருங்கன் |
| | | 30-05-2012 | மன்னார் |

Abans


## பெயர் மாற்றம்

154/1, W.A. சில்வா மாவத்தை, கொழும்பு - 6 எனும் முகவரியில் வசிக்கும் ஐயாத்துரை வள்ளியம்மாள் ஆகிய நான் (16.05.2012) இன்றிலிருந்து எனது பெயரை ஐயாத்துரை ஈஸ்வரி என்று மாற்றம் செய்வதுடன் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பமிடுவேன் என்பதனை அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஐயாத்துரை ஈஸ்வரி.


## மினிதியேட்டர் செற் விற்பனைக்கு

- ★ Sony 10 அடி புறஜெக்டர் - 01
- ★ அம்ப் - 01
- ★ பொக்ஸ் - 02
- ★ 2000 W ஜெனறேட்டர் - 01
- ★ சப்ளைசர் - 01
- ★ மற்றும் இதர பொருள்கள், 20 மணிநேரம் மட்டும் பாவித்தவை.

தொடர்பு: இல. 077 554 8033

# MIND VISHION COLLEGE

புதிய பிரிவுகள் ஆரம்பம்
19/05/2012

## IELTS

- Student visa / work visa மூலம் வெளிநாடு செல்லும் மாணவர்களுக்கு உகந்தது.
- பரீட்சை யாழ் மண்ணில் நடைபெறும்.
- ஒவ்வொரு மாணவரின் கல்விச் செயற்பாட்டிலும் தனிப்பட்ட கவனம் செலுத்தப்படும்.
- உங்களின் சிறந்த பெறுபேற்றுக்கு நாம் உத்தரவாதம்.
- மாலைநேர, வார இறுதிநாள் வகுப்புக்கள்

## SPOKEN SINGALA

- ஆசிரியர் திரு. M.சொலமன் போதனாசிரியர்- அரச கரும மொழிகள் திணைக்களம்
சிங்கள மொழிபெயர்ப்பாளர்- யாழ் பல்கலைக்கழகம்.
முன்னாள் விரிவுரையாளர்- கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி
- சிறந்த முறையில் மொழியாற்றலை வளர்த்து பேசுவதற்கு நாம் உத்தரவாதம்.

## BANKING

- CBF, DBF பயிற்சி நெறிக்கான விரிவுரைகள் ஆரம்பம்.
- வாரநாள் இரவு நேர வகுப்புகள் வார இறுதிநாள் வகுப்புகள் ஒழுங்கு செய்து தரப்படும்.
- பல்கலைக்கழக மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்களால் விரிவுரைகள் நடத்தப்படும்

## KIDS PROGRAMS

CAMBRIDGE UNIVERSITY PRESS இனால் வடிவமைக்கப்பட்ட பாட விதானங்களுடனான சர்வதேச தரத்திலான பயிற்சிநெறி.
- 4வயது தொடக்கம் இணைய முடியும்
- மாணவர்களுக்கு விரும்பிய நேரத்தில் வகுப்புகள் ஒழுங்கு செய்து தரப்படும்
- உங்கள் பிள்ளைகளின் கணினிச் செயற்பாடுகளை ஒவ்வொரு மாதமுடிவிலும் எமது நிறுவனத்தில் பார்வையிட முடியும்

Contact
Mind Vishion College of International Studies ( Pvt.) Ltd.
(Reg No: PV 85546)
NO.04. CLOCK TOWER LANE. NAVALAR ROAD. JAFFNA 021 221 9456


# முதலாம் ஆண்டு நினைவலை

திருமதி
## பூரணச்சந்திரன் சிவானந்தவல்லி
(இளைப்பாறிய அரச மருந்தாளர்)

திதி: ஏகாதசி 16.05.2012

தாயின் மடியில்
02 ★ 03★ 1948




ஆண்டவன் அடியில்
28 ★ 05★ 2011

பாசத்தின் குரல் கேட்டு பாவி என்னிடம்
- பறந்து வந்தாய்
பாசத்தின் சுமையோடு எமையெல்லாம்
- பிரிந்துசென்றாய்
மறுபிறப்பொன்றிருந்தால் மாவீடராய்
- நாம் பிறந்தால்
மண்ணுலகில் என்னைத் தனிக்கவிட்டு
- விண்ணுலகு சென்ற உன்னை
மன்னித்து மறுபடியும் மாலைசூடி
- மகிழ்ந்திடுவேன் (கணவன்)
நாம் கைகூப்பி நின்ற தெய்வங்கள்
நாமெல்லாம் கண் கலங்க கைவிட்டுப் போனதென்ன?
கொடிய காலனவன் கண்பட்டு உன்னை கவர்ந்து
- சென்று
நம்மையெல்லாம் கண்கலங்க வைத்ததென்ன?
இனிமையான உங்கள் வார்த்தைகள் இன்று
- எங்கே மறைந்ததம்மா?
பலகோடி இன்பங்கள் இருந்தென்ன மறைந்தென்ன
- நீங்களில்லாத
துன்பத்தில் துவளும் எம்மைத் தேற்ற
- இறைவனாலும் முடியாதம்மா
உங்கள் ஆத்மா சாந்தியடையவேண்டும் என நீங்கள் வணங்கிய தெய்வங்களை வேண்டி நிற்கும்.

உங்கள் இணைபிரியா
கணவர், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

குரும்பசிட்டி,
புலோலி,
071 8192219

# மரண அறிவித்தல்



## பரராஜசிங்கம் வாரித்தம்பி
(ஓய்வு பெற்ற நீதிமன்ற பதிவாளர்)

மீசாலையைப் பிறப்பிடமாகவும், அக்கரைப்பற்றை வதிவிடமாகவும், தம்மபுரி, தமிழ்நாடு, இந்தியாவை தற்போது வதிவிடமாகவும் கொண்ட பரராஜசிங்கம் வாரித்தம்பி நேற்றுமுன்தினம் (14.05.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரராஜசிங்கம் - சின்னம்மா தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான ஞானக்குட்டி - காசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் சிவயோகத்தின் அன்புக் கணவரும், தங்கராசா, விமலாதேவி ஆகியோரின் சகோதரரும், சொருபா, சுசீலன், இந்து, சங்கீதா ஆகியோரின் பாசமிகு தந்தையும், விநாயகமூர்த்தி, சுதா, செல்வராஜா, பிரபாகரன் ஆகியோரின் அன்பு மாமனும், விஜுஷன், விஷாகரன், சியாம், சியான், சங்கரன், கொலின், கெவின், சஜின், ஹரிஷன், ஜீவனா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.05.2012) புதன்கிழமை தருமபுரி, தமிழ்நாடு இந்தியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சுசீலன் - 0091 - 9741 055 266 - இந்தியா,
சுதா - 0091 - 9845 195 656 - இந்தியா,
சொருபா - 001 - 9052 759 143 - கனடா,
இந்து - 0044 - 7825 005 269 - லண்டன்,
ராஜா - 0044 -7557 237 824 - லண்டன்,
சங்கீதா, பிரபாகரன் - 0044 - 7903 521 434 - லண்டன்.

A- One DAIRY
PRODUCTS PVT LTD,
PALLACOD,
DHARMAPURI,
THMIL NADU. India.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# 13 ஆவது திருத்தமும் அதற்கு மேலும்

போருக்குப் பின் இலங்கைத் தமிழர்களின் நிலை எப்படி இருக்கிறது என்பதைப் பற்றி ஆராய வந்த இந்திய நாடாளுமன்ற அனைத்துக் கட்சிக் குழுவிடம் உழுத்துப் போன பருப்பை காட்டியமைக்காக வவுனியா இடைத்தங்கல் முகாமில் உள்ள மக்களை மீள் குடியேற்ற அமைச்சர் குணரட்ண வீரக்கோன் கடிந்து கொண்டார் என்று ஒரு செய்தி நேற்று பத்திரிகைகளில் வந்திருந்தது.

இந்தியா என்னத்தைத் தந்துவிடப் போகிறது என்று அவர்களிடம் கொண்டுபோய் உழுத்துப் போன பருப்பை காட்டினீர்கள் என்று அமைச்சர் கடுப்பாக கேள்வி எழுப்பினார் என்பது செய்தி.

குடாநாட்டு மக்களுக்கு உணவுப் பொருள்கள் அனுப்பப்படுவதில் கொழும்பு தடைகள் ஏற்படுத்தி பாரபட்சம் காட்டியதால் எழுந்திருந்த பிரச்சினையை முன்வைத்தே இந்தியா இலங்கைப் பிரச்சினையில் தீவிரமானதொரு தலையீட்டை மேற்கொண்டது என்பதை அவ்வளவு விரைவாக யாரும் மறந்திருக்க முடியாது. உணவுப் பொதிகளை ஏற்றிக் கொண்டு இந்திய படகு அணியொன்று கடல்மார்க்கமாக இலங்கை நோக்கி வந்ததும் அதனை இலங்கைக் கடற்படை தடுத்து நிறுத்தியதையடுத்து இந்திய விமானங்கள் குடாநாட்டு மக்களுக்கென உணவுப் பொதிகளை ஆங்காங்கே போட்டுச் சென்றதும் இன்றும் இந்த மக்கள் நினைவில் வைத்திருக்கிறார்கள்.

அந்தச் சம்பவங்களின் தொடர்விடயம்தான் இன்று இங்கும் சரி இந்தியாவிலும் சரி இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக பெரிதாகப் பேசப்படுகின்ற இலங்கை - இந்திய ஒப்பந்தம். அதன் வாயிலாக இலங்கை அரசமைப்பில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள 13 ஆவது திருத்தச் சட்டமும் ஆகும்.

எனவே இந்தியா என்னத்தைப் பெரிதாக தந்து விடப் போகிறது என்று கேட்பதில் அர்த்தமில்லை. உண்மையில் இந்தியா அன்று நினைத்திருந்தால் 13 ஆவது திருத்தமல்ல, அதற்கு மேலும் சென்று இலங்கைத் தமிழருக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய உரிமைகளைப் பெற்றுக் கொடுத்திருக்க முடியும். துரதிர்ஷ்டவசமாக ஒப்பந்தம் என்று ஒன்று ஏற்பட்டு, 13 ஆவது திருத்தமே மாபெரும் வரப்பிரசாதம் போல் கணிக்கப்பட்டு அந்தச் சந்தர்ப்பமும் கை நழுவி போய்விட்டது. அந்தக் கால கட்டத்தைப் பற்றியும் அதன்பிறகு ஏற்பட்ட தொடர் நிகழ்வுகள் பற்றியும் இன்று நினைத்துப் புழுங்குவதில் தமிழருக்கு எதுவித பயனுமில்லை.

ஆனால் 13 ஆவது திருத்தத்தைப் பற்றி இந்தியத் தலைவர்கள் பெரிதாக எண்ணிக்கொண்டிருப்பது போல் தெரிகிறது. அதனால் தான் அவர்களுடன் பேசுவதற்கு சென்றாலும் அவர்கள் இங்கே பேசுவதற்கு வந்தாலும் இலங்கை ஜனாதிபதியும் பிரமுகர்களும் அதைச் செயல்படுத்துவோம் என்றும் அதற்கு அப்பாலும் சென்று வழங்குவோம் என்றும் கூறி சமாளித்துக் கொண்டு இருக்கிறார்கள். உண்மையில் சொன்னால் 13 ஆவது திருத்தத்தில் தமிழர் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய அம்சங்கள் மிகவும் சொற்பமாகவே இருக்கின்றன என்பது தமிழர் தரப்பின் பெரும்பாலானவர்களின் கருத்தாகும்.

ஒப்பந்தத்தின் விளைவாக 13 ஆவது திருத்தம் அரசமைப்பில் சேர்க்கப்பட்டதே அன்றி அதன் வாயிலாக பெரிய அளவில் தமிழருக்கு நன்மை ஏற்படவில்லை. மாகாணசபைகள் ஏனைய மாகாணங்களில் செயற்பட்டுக் கொண்டு இருந்தாலும் வடக்குக் கிழக்கு மக்கள் அதன் பயன்பாட்டை இன்னமும் சரியாக அனுபவிக்கவில்லை. இந்த இரு மாகாணங்களும் ஒன்றாக இணைந்திருப்பதற்கான ஏற்பாடும் கூட ஒரு வழக்கின் தீர்ப்பின் மூலம் சிதறடிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பின்புலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசு உருவாக்கியிருக்கும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் சேர்ந்து கொள்ள வேண்டும், அதன் மூலம் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வருகிறது.

பத்திரிகைச் செய்திகளையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கிய சில பிரமுகர்கள் வெளியிடும் கருத்துக்களையும் பார்க்கையில் மிக விரைவில் அல்லது சில நாள்கள் கழித்து தெரிவுக்குழுவுக்கான பிரதிநிதிகளை அவர்கள் அறிவிக்கும் வாய்ப்பிருக்கிறது. சில நிபந்தனைகளுடன் தெரிவுக்குழுவில் அவர்கள் சேரக்கூடும் என்றும் ஒரு செய்தி உண்டு.

13ஆவது திருத்தமானது, ஒன்றிணைக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாண மக்களின் நேரடித் தெரிவின் மூலம் முதலமைச்சர் ஒருவருடன் மாகாண சபைகள் அமைவதற்கு வகை செய்கின்றது. அத்துடன் மாகாண சபைகளுக்கு கணிசமான அளவு அதிகாரங்களை வழங்குவதாகவும் இருக்கின்றது. அதுமட்டுமில்லை. மாகாணத்துக்குள் பொலிஸ் மற்றும் பொது ஒழுங்கு தொடர்பான அதிகாரத்தையும் வழங்குகிறது. மாகாண சபையின் பொலிஸ் அமைப்பானது முதலமைச்சரின் அதிகாரத்தின் கீழேயே இயங்குவதாய் இருக்கும். இவைகளுடன் காணி அதிகாரமும் மாகாணசபைகளுக்கு இருக்கும். அந்த வகையில் மத்திய அரசு தனக்குத் தேவையான காணிகளை மாகாண சபையின் ஆலோசனையுடனேயே பெற்றுக்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கின்றது.

கல்வி, சுகாதாரம் உள்ளூர் நிர்வாகம், நீர்ப்பாசனம், குடியேற்றம், கூட்டுறவுத்துறை, குறிப்பிட்ட துறைகளில் வரிகள் அறவிடுவதும் மாகாணசபை அதிகாரத்துக்குள் வரும். மேலும் மாகாணசபையின் செயற்பாடுகளுக்கு மத்திய அரசிலிருந்து நிதி வசதிகள் கிடைக்கும்.

இந்த வகையிலான அதிகாரங்கள் குறிப்பாக பொலிஸ், காணி அதிகாரங்களை மாகாணசபைகளுக்கு வழங்க ஜனாதிபதிக்கு விருப்பமில்லை. அதனை அவர் வெளிப்படையாகவே கூறியிருக்கிறார். இந்த நிலையில் 13ஆவது திருத்தத்துக்கு அப்பாலும் சென்று தீர்வு வழங்க அவர் முன்வருவார் என்று எதிர்பார்ப்பது துர்லபம்.

என்றாலும் தீர்வு ஒன்று ஏற்படுவதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே தடுத்து வருகிறார்கள் என்ற பழிச்சொல்லுக்கு தெரிவுக் குழுவில் கலந்துகொள்வதன் மூலம் அவர்கள் ஒருமுற்றுப்புள்ளி வைக்கலாம்.

அவ்வாறாயின் அந்தத் தீர்வு 13ஆவது அரசமைப்பு திருத்தத்துக்கும் மேலானதாக தமிழர் அபிலாஷைகளைப் பெரும்பாலும் நிறைவேற்றுவதாக அமையவேண்டும் என்பதே தமிழர்களின் எதிர்பார்ப்பாக இருக்கும் என்று கூறத்தேவையில்லை.

# ஆங்கில ஆசிரிய மாணவர்களுக்கு மட்டக்களப்பில் தான் பயிற்சி நெறி

## உறுதியாக உள்ளது கல்வி அமைச்சு

யாழ்ப்பாணம்,மே 16

ஆங்கில பாடநெறிக்கான பதிவுகள் மற்றும் விரிவுரைகள் யாவும் மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையிலேயே இடம்பெறும். இதில் எந்த மாற்றமும் செய்யப்பட மாட்டாது. இது தான் கல்வி அமைச்சின் செயலாளரது நிலைப்பாடு எனக் கல்வி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையில் ஆங்கிலப் பயிற்சிக்கு போதுமான விரிவுரையாளர்கள் உள்ளனர். திருப்திகரமான முறையில் அங்கு பயிற்சிகளை அளிக்க முடியும் என அந்த அதிகாரி மேலும் கூறினார்.

இதே வேளை, ஆங்கில பாடத்துக்கான பதிவை மேற்கொள்ளும் விடயத்தில் ஆசிரிய மாணவர்கள் நேற்று முன்தினம் அலைக்கழிக்கப்பட்டனர்.

ஆசிரியர் கலாசாலைகளில் நேற்று முன்தினம் 14 ஆம் திகதி பதிவுகளை மேற்கொள்ளுமாறு கல்வி அமைச்சு ஏற்கனவே அறிவித்திருந்தது. பலாலி ஆசிரியர் கலாசாலையில் ஆங்கிலப் பயிற்சியைத் தொடர்வதற்கான பதிவுகளை மேற்கொள்ளவென மாணவர்கள் காத்திருந்தனர். பதிவுத் திகதிக்கு மூன்று தினங்கள் முன்னதாக கடந்த வெள்ளிக்கிழமை ஆங்கில பாடநெறி மாணவர்களுக்கு மட்டக்களப்பு கலாசாலையில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் வழங்கப்படும் மாதாந்த சம்பளம் 3 ஆயிரம் ரூபா போதுமானதாக இல்லை என்றும், வீட்டில் பெற்றோர், பிள்ளைகளைப் பராமரிக்க வேண்டியுள்ளது என்ற காரணத்தைக் கூறியும் ஆசிரிய மாணவர்களில் ஒரு பகுதியினர் மட்டக்களப்பு கலாசாலைக்கு போவதில்லை எனத் தீர்மானித்தனர்.

அந்த மாணவர்கள் நேற்று முன்தினம் காலை பதிவுக்காக கோப்பாய் ஆசிரியர் கலாசாலைக்குச் சென்றனர். சற்று நேரத்தில் பலாலி ஆசிரியர் கலாசாலைக்குச் சென்று பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்று அறிவிப்பு ஒன்று மாணவர்களுக்குக் கிடைத்தது.

உடனடியாகப் பலாலி கலாசாலைக்குச் சென்ற மாணவர்களுக்கு அங்கும் ஏமாற்றமே காத்திருந்தது. மட்டக்களப்பு கலாசாலையில் தான் பதிவு செய்ய வேண்டும் என பலாலி ஆசிரியர் கலாசாலை அதிபரால் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

மாணவர்கள் என்ன செய்வதென்று தெரியாமல் தடுமாறினார்கள். நேற்று முன்தினம் 4 மணிவரையும் கலாசாலை வளாகத்தில் அவர்கள் காத்திருந்தனர்.

பலாலி ஆசிரியர் கலாசாலை அதிபர் எம்.இக்னேசியஸுடன் இது குறித்துத் தொடர்பு கொண்டு கேட்ட போது;

எமது கலாசாலையில் இதுவரை பயிற்சிகளை நடத்தி வந்தமை போலவே தற்போதும் விரிவுரையாளர் வளம், இடவசதி என்பன எமது கலாசாலையில் உள்ளன. அதில் எதுவும் கூடிக் குறையவில்லை. விரிவுரையாளர் இல்லை, இடநெருக்கடி எனச் சாட்டுப் போக்குச் சொல்லி கல்வி அமைச்சு மட்டக்களப்புக்கு ஆங்கில பாடநெறியை ஏன் மாற்றியதோ தெரியவில்லை. அதற்கான அவசியம் இல்லை''- என்றார். (த-3)

# கல்வி நிர்வாக சேவைப் பரீட்சையில் தோற்றிய 18000 பேரில் 78 பேர் சித்தி

கொழும்பு,மே 16

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் IIIக்கு உத்தியோகத்தர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிய 18 ஆயிரம் விண்ணப்பதாரிகளில் 78 பேர் மாத்திரமே சித்தியடைந்துள்ளனர்.

இந்தப் பரீட்சையில் சித்தியடைந்துள்ள 78 பேரின் பெயர்ப்பட்டியல் அரச சேவைகள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகப் பரீட்சைகள் ஆணையாளர் டபிள்யூ.எம்.என்.ஜே.புஸ்பகுமார தெரிவித்தார்.

இந்தப் பரீட்சைக்குத் தோற்றிய 18 ஆயிரம் பேரில் பரீட்சையின் முதலாவது பிரிவில் சித்தியடைந்த 173 பேருக்கு கடந்த 29ஆம் திகதி இரண்டாவது பரீட்சை இடம்பெற்றிருந்தது. அவர்களுள் 78 பேர் மாத்திரமே சித்தியடைந்திருப்பதாக பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்தார்.

பரீட்சையின் முதலாவது பிரிவில் சித்தியடைந்திருந்த 173 பேரில் 24 பேர் இரண்டாவது பிரிவுப் பரீட்சைக்குத் தோற்றவில்லை எனப் பரீட்சை ஆணையாளர் மேலும் கூறினார்.

கடந்த 29ஆம் திகதி இடம்பெற்ற மேற்படி பரீட்சையின் பெறுபேறுகள் பத்துத் தினங்களுக்குள் வெளியிடப்பட்டுள்ளது எனவும், பரீட்சைகள் திணைக்களத்தின் இணையத்தளத்தில் இந்தப் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (த-22)

# காரைநகரிலிருந்து கண்டிக்கு இ.போ.ச பஸ்சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மே 16

காரைநகர் - கண்டி, புதுக்குடியிருப்பு- கொழும்பு பஸ் சேவைகள் இலங்கைப் போக்குவரத்து சபையின் வடபிராந்திய அலுவலகத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்பிலிருந்து கிளிநொச்சி ஊடாகக் கொழும்புக்கான சேவை இன்று புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

காரைநகரில் இருந்து கண்டிக்கான சேவை நேற்று முன்தினம் உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இந்த பஸ் சேவை காரைநகரிலிருந்து யாழ்.மத்திய பஸ்நிலையம் சென்று அங்கிருந்து கண்டிக்குப் புறப்படும்.

அத்துடன் சாவகச்சேரியில் இருந்து தனங்கிளப்பு ஊடாக பூநகரிக்கான பஸ் சேவையும் இன்று ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வட பிராந்திய பிரதம முகாமையாளரர் எஸ்.அஸ்வர் தலைமையில் இந்த பஸ் சேவைகள் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

பஸ் சேவைகள் இடம்பெறும் விவரங்கள் சில தினங்களில் பொது மக்களுக்கு அறிவிக்கப்படவுள்ளன. (த-3)

# திக்வெல்லையில் காளி கோவில் விஷமிகளால் தீயிட்டு எரிப்பு

கொழும்பு,மே 16

திக்வெல்ல உப்புக் கடல்படுகை பிரதேசத்தில் அமைந்துள்ள காளி கோயில் குழுவொன்றினால் கடந்த 13 ஆம் திகதி தீயிட்டுக் அழிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் காளி கோயிலைத் தீயிட்டு சேதம் விளைவித்த சந்தேக நபர்களைக் கைது செய்வதற்கான விசாரணைகள் இடம்பெற்று வருவதாகத் திக்வெல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

இதற்கு முன்னர் இந்தக் கோயிலைப் பராமரித்து வருபவரிடம் சென்ற சிலர் கோயிலை உடைத்து அகற்றி விடப் போவதாக அச்சுறுத்தல் விடுத்ததாகத் திக்வெல்லைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர். (த-22)

# வடமராட்சியில் நுளம்பு ஒழிப்பு நடவடிக்கைகள்

வடமராட்சி,மே 16

வடமராட்சிப் பிரதேசத்தில் பெரும் எடுப்பில் நுளம்பு ஒழிப்பு நடவடிக்கைகள் நேற்று முன்தினம் 14 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பருத்தித்துறை, கரவெட்டி பகுதிகளைச் சேர்ந்த சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள் நுளம்பு, ஒழிப்பு நடவடிக்கைகளுக்காக கிராம சேவையாளர்கள், பொலிஸார், சிவில் பாதுகாப்புக்குழுக்கள் பொதுச்சுகாதாரப்பரிசோதகர்கள், குடும்ப நல உத்தியோகத்தர்கள், சுகாதாரத் தொண்டர்கள் ஆகிய அனைவரையும் ஒன்றிணைத்து குழுக்களாகப் பிரித்து, அந்தக் குழுக்கள் மூலம் நுளம்பு ஒழிப்புத் திட்டத்தினை மேற்கொண்டு வருகின்றன.

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கென பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் வடமராட்சி வடக்கு, வடமராட்சி கிழக்கு ஆகிய பிரதேச, உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் கரவெட்டி பொதுசுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலர் பிரிவிலும் தலா 7 அலுவலர்களைக் கொண்ட குழுக்களாக வகுக்கப்பட்டு 21 வலயங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த 14 ஆம் திகதி ஆரம்பமான நுளம்பு ஒழிக்கும் பணி எதிர்வரும் 20 ஆம் திகதி வரை ஒருவாரகாலத்துக்கு நீடிக்கும். (த-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா நகரசபை தலைவருடன் இந்திய துணைத் தூதுவர் சந்திப்பு

வவுனியா, மே 16

யாழ்ப்பாணத்தில் இயங்கி வரும் இந்தியத் தூதரக அலுவலகத்தின் துணைத்தூதுவர் எஸ்.மகாலிங்கம் கடந்த 12 ஆம் திகதி வவுனியாவுக்கு வருகை தந்து நகரசபையின் செயற்பாடுகள், எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்ந்துள்ளார்.

வவுனியாவுக்கு வருகை தந்த இவர் நகரசபையின் சபா மண்டபத்தில் நகர சபைத் தலைவர் ஐ. கனகையாவைச் சந்தித்து நகர சபை வேலைத் திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடினார்.

கலந்துரையாடலின் பின் மகாலிங்கம் கருத்துக் கூறியதாவது:-

நீண்ட நாள்களின் பின் வவுனியா வந்து நகரசபைத் தலைவரை மரியாதை நிமித்தம் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளேன். இங்குள்ள பிரதேச, நகர சபை உறுப்பினர்கள் பலர் இளைஞர்களாக இருப்பதை அறிய முடிந்தது.

இவர்களை இந்தியாவுக்கு அழைத்துச் சென்று அங்குள்ள உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகளைக் காண்பிக்க வேண்டும் எனப் பலரும் எதிர்பார்க்கின்றனர். இதனை விரைவில் மேற்கொள்வதாகவும் அவர் தெரிவித்தார். இதேவேளை இவர் வவுனியா மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எம்.எஸ். சாள்ஸையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இதனிடையே வவுனியா நகரசபை உறுப்பினர்கள் அனைவரும் யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதுவராலயத்துக்குச் சென்று கலந்துரையாடவுள்ளனர் அதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (க-400)



வவுனியா தெற்கு வலய சுற்றாடல் முன்னோடி ஆணையாளர் பொ.சண்முகதேவன், சுற்றாடல் கல்வி விழிப்பூட்டல் செயற்பாடுகளைச் சிறப்பாக ஆற்றி வருவதைக் கௌரவித்து சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா விருது வழங்கிக் கௌரவிக்கின்றார். (400)

### வீதிகள் இருளில் மூழ்குவதால் பாண்டியன்குளத்தில் விபத்துக்கள்

முல்லைத்தீவு பாண்டியன்குளம் பிரதேசத்தின் முக்கிய இடங்களில் வீதி விளக்குகள் பொருத்தப்படாததால் இரவு வேளைகளில் விபத்துக்கள் ஏற்பட்டு வருகின்றன.

முல்லைத்தீவு மாந்தை கிழக்குப் பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட பாண்டியன்குளம் பகுதியிலுள்ள பாண்டியன்குளம் மகாவித்தியாலயம், பொதுச்சந்தை, பிரதான சந்தி ஆகிய முக்கிய இடங்களில் இதுவரை வீதி மின் விளக்குகள் எவையும் பொருத்தப்படவில்லை. இதனால் இரவு வேளைகளில் விபத்துக்கள் ஏற்படுகின்றன.

இந்தப் பிரதேசத்தின் முக்கிய பகுதிகளுக்கு வீதி மின் விளக்குகளை பொருத்துமாறு பல தடவை அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்திய போதிலும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. (க -6)

### புதுக்குடியிருப்பு கோம்பாவில் பகுதியில்

## ஒப்பந்த வேலைகளிலும் இராணுவம் தலையீடு

முல்லைத்தீவு, மே 16

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு கோம்பாவில் பகுதியில் மேற்கொள்ளப்படும் ஒப்பந்த வேலைகளில் இராணுவத் தலையீடு அதிகளவில் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக முல்லைத்தீவு கோம்பாவிலில் மீளக்குடியமர்வு இடம்பெற்றுள்ள திம்பிலிப்பகுதியில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகளிலேயே இராணுவத்தின் தலையீடு அதிகமாகக் காணப்படுகின்றது.

அத்துடன் ஒப்பந்தகாரர்கள் தமக்குரிய சில வேலைகளை இலவசமாகத் செய்து தர வேண்டும் என்றும் இராணுவத்தினர் கட்டாயப்படுத்தி வருகின்றனர்.

இதனால் தமது பணிகளை உரிய முறையில் முன்னெடுக்க முடியவில்லை எனவும் ஒப்பந்தகாரர்கள் தெரிவித்துள்ளனர்.

மேற்படி பிரதேசத்தில் பொது நோக்கு மண்டபம் ஒன்றை அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த ஒப்பந்தகாரர் ஒருவர் ஒப்பந்த வேலைக்குப் பயன்படுத்தி வந்த கனரக வாகனத்தை அதிக நேரம் இராணுவத்தினர் தமது தேவைக்குப் பயன்படுத்தியுள்ளனர் என்றும் இதனால் தமக்குச் சுமார் 23 ஆயிரம் ரூபா நட்டம் ஏற்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

இதனைவிட இந்தப் பகுதியில் பொது மண்டபம் அமைக்கும் பணிகள் முழுமையாக நிறைவு பெற்றுள்ள போதிலும் எஞ்சிய கட்டுமானப் பொருள்களை குறித்த ஒப்பந்தகாரர் எடுத்துச் செல்வதற்கு இராணுவம் தடை விதித்து அவற்றைத் தமக்கு வழங்குமாறு வற்புறுத்தியுள்ளதுடன் அப்பொருள்களை ஏற்ற வேண்டாம் எனவும் தடுத்துள்ளனர்.

இவ்வாறு ஒப்பந்த வேலைகளில் இராணுவத் தலையீடுகள் மிக அதிகமாகக் காணப்படுவதால் தாம் மிகவும் மோசமாக பாதிக்கப்படுவதாக ஒப்பந்தகாரர்கள் தெரிவித்துள்ளனர். (க-6)

### டெங்கு ஒழிப்பு மும்முரம்

## மாந்தை கிழக்கில் துப்புரவுப் பணிகள்

துணுக்காய், மே 16

மாந்தை கிழக்குப் பிரதேச சபையினர் டெங்கு நுளம்பு பெருகும் இடங்களிலுள்ள குப்பை கூளங்களை அகற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக இலையான் மற்றும் நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுவதால் பிரதேச சபையினர் இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

பாண்டியன்குளம் பிரதேசம் 15 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்டது. இங்கு சுகாதாரத்தைப் பேணும் பொருட்டுக் கடந்த 9 ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் மாந்தை கிழக்குப் பிரதேச சபைத் தலைவர் அ.தணிகாசலம் தலைமையில் டெங்கு ஒழிப்பு நிகழ்வுகள் ஆரம்பமாகின.

**மழை காரணமாக இலையான் மற்றும் நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துள்ளது.**

இதன் முதல் கட்டமாக நட்டாங்கண்டல், பாண்டியன்குளம், விநாயகபுரம் ஆகிய இடங்களில் குப்பை கூளங்களை அகற்றும் பணிகள் இடம்பெற்றன.

பிரதேச சபைச் செயலர் திருமதி குணவதி சண்முகலிங்கம் நேரடியாகச் சென்று அங்கு பணியில் ஈடுபட்டவர்களை உற்சாகப்படுத்தினார்.

நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் இந்தப் பணியில் ஈடுபட்டிருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (க-415)

## வவுனியா பஸ் நிலைய மலசலகூடங்களுக்கு மூக்கை பொத்தியபடியே போக வேண்டும்

### ஆனால் ஊழியர்கள் கேட்பது தான் கட்டணம்

வவுனியா, மே 16

வவுனியா நகர பஸ் நிலையத்திலுள்ள மலசல கூடங்கள் சுத்தம் பேணப்படாத நிலையில் உயர்ந்த கட்டணம் அறவிடப்படுவதாக வவுனியா நகர வரியிறுப்பாளர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

மலசல கூடத்துக்குச் செல்வோர் மூக்கை இறுக்கிப் பொத்தியபடியே தான் பிரவேசிக்க முடிகிறது என்றும் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

வவுனியா நகர சபை நிர்வாகத்தின் கீழ் பராமரிக்கப்படும் இந்த மலசல கூடங்களில் சேவை புரியும் ஊழியர்கள், தாங்கள் நினைத்தவாறு கூடிய கட்டணங்களைப் பாவனையாளர்களிடம் அறவிடுகின்றனர்.

ஆனால் அது தொடர்பான கட்டண விவரங்கள் எவையும் காட்சிப்படுத்தப்படவில்லை.

அங்கு கடமையில் இருக்கும் ஊழியர்கள் எந்நேரமும் மது போதையில காணப்படுவதாகவும் மலசல கூடப் பாவனைக்கு வரும் இளைஞர், யுவதிகளுடன் தகாத வார்த்தைப் பிரயோகத்தில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அங்கு சுத்தம் பேணப்படாமையால் இயற்கைக் கடன் கழிக்கச் செல்வோர் முகம் சுழித்தவண்ணமே செல்ல வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை பூந்தோட்டம் பகுதியிலுள்ள சந்தைப் பகுதியிலுள்ள கழிவுகள் ஒழுங்கான முறையில் அகற்றப்படுவதில்லை எனவும் மாட்டிறைச்சிக்கடை, மீன் சந்தை என்பவற்றின் கழிவு நீர் அருகிலுள்ள குளத்தில் சேர்ந்து தேங்கி நிற்பதனால் துர்நாற்றம் வீசுவதாகவும் இதனால் சந்தைக்கு வரும் பாவனையாளர்களும், பாதசாரிகளும் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்குகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

**பூந்தோட்டம் பகுதியிலுள்ள சந்தைப் பகுதியிலுள்ள கழிவுகள் ஒழுங்கான முறையில் அகற்றப்படுவதில்லை எனவும் மாட்டிறைச்சிக்கடை, மீன்சந்தை என்பவற்றின் கழிவு நீர் அருகிலுள்ள குளத்தில் சேர்ந்து தேங்கி நிற்பதனால் துர்நாற்றம் வீசுவதாகவும் இதனால் சந்தைக்கு வரும் பாவனையாளர்களும், பாதசாரிகளும் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்குகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.**

இது தொடர்பாக நகர சபை நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சுட்டிக்காட்டப்படுகிறது. (க-400)

## இருளில் மூழ்கியிருந்த வவுனியா நகரின் வீதிகளுக்கு உடன் மின் விளக்குகள்

### நகரசபை உறுப்பினர்களும் தலா 40 வீதம் பங்கீடு

வவுனியா, மே 16

நீண்டகாலமாக இருளில் மூழ்கியிருந்த வீதிகளுக்கு மின் விளக்குகள் பொருத்தும் பணிகளில் வவுனியா நகர சபை நிர்வாகம் ஈடுபட்டுள்ளது.

வவுனியா நகர சபைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள பலவீதிகள் நீண்டகாலமாக வீதி விளக்குகள் பொருத்தப்படாது இருளில் மூழ்கியிருந்தன. இதனால் அதிகளவான விபத்துக்கள் இடம்பெற்றதோடு அவ்வீதிகளினூடாக பயணம் செய்வோர் பல அசௌகரியங்களையும் எதிர் நோக்கிவந்துள்ளனர்.

இதனையடுத்து வீதிகளுக்கு நகர சபையின் நிதி மூலம் மின் விளக்குகள் பொருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கென முதற்கட்டமாக 455 மின் விளக்குகள் நகரசபையால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. நகர சபையிலுள்ள உறுப்பினர்கள் தத்தமது பகுதிகளிலுள்ள வீதிகளுக்கு மின் விளக்குகள் பொருத்துவதற்கென ஒவ்வொருவருக்கும் தலா 40 மின் விளக்குகள் வழங்கப்பட்டுள்ளன.

தற்போது பஸ் நிலையப் பகுதியிலும் கண்டி பிரதான வீதியைச் சூழவுள்ள பகுதிகளுக்கும் உடனடியாக மின் விளக்குகள் பொருத்தப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-400)

## அமைப்புகளை வலுப்படுத்துவதற்கான பயிற்சிப் பட்டறை தேறாங்கண்டலில்

துணுக்காய், மே 16

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தேறாங்கண்டல் கிராமத்தில் சமூக மட்ட அமைப்புகளை வலுப்படுத்துவதற்கான பயிற்சிப் பட்டறை இடம்பெற்றுள்ளது.

இந்தப் பயிற்சிப் பட்டறை கடந்த 10 ஆம் திகதி காலை 9 மணியளவில் தேறாங்கண்டல் பொது மண்டபத்தில் இடம் பெற்றது.

இங்கு ஒளிநாடா மூலம் விளக்கம் அளிக்கப்பட்டது.

இதில் சமூக சீரழிவுகளை இல்லாதொழித்தல், சுய முயற்சியால் முன்னேற்றம் காணுதல், சேமிப்புப் பழக்கங்களை ஊக்குவித்தல், புதிய தொழில் முயற்சிகளை ஏற்படுத்துதல், வங்கிக் கடன்களைப் பெறுவதற்கு குழு அமைத்தல், பொருத்தமான அபிவிருத்தியை இனம் காணுதல் மற்றும் பல விடயங்கள் தொடர்பாக விளக்கங்கள் அளிக்கப்பட்டன.

இங்கு துணுக்காய்ப் பிரதேச செயலர் எஸ்.குணபாலன், உதவித் திட்டப் பணிப்பாளர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராசா, பால் நிலை இணைப்பாளர் திருமதி பாத்திமா தேவராசா, அபிவிருத்தி உத்தியோகத்தர் லோ.பகீரதன் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கினர். (க-415)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடமாற்றம் கிடைக்காததை எதிர்த்து ஆசிரியர் கவனயீர்ப்புப் போராட்டம்

## 21ஆம் திகதி மாகாண கல்வி அலுவலகம் முன்பாக

**உயர் அதிகாரிகளுடன் பலமுறை தொடர்பு கொண்டபோதும், எமது இடமாற்ற விடயம் தொடர்பான ஆக்கபூர்வமான பதில் எதுவும் வழங்கப்படவில்லை.**

யாழ்ப்பாணம், மே 16

மாவட்டங்களுக்கு இடையிலான ஆசிரியர் இடமாற்றத்தின் போது, தகுதியிருந்தும் தவறவிடப்பட்டுள்ள ஆசிரியர்கள் தமக்கான இடமாற்றத்தை வழங்கக்கோரி மாகாண கல்விப் பணிமனையின் முன்பாக, கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

எதிர்வரும் 21ஆம் திகதி திங்கட்கிழமை இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளதாக பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

வெளிமாவட்டங்களில் சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்களில் ஒரு தொகையினர் இடமாற்றத்தின்போது தவறவிடப்பட்டுள்ளனர் என்று தெரிவித்தனர்.

கடந்த 2011ஆம் ஆண்டுக்கான மாவட்டங்களுக்கிடையிலான ஆசிரியர் இடமாற்றத்தின் போதே இவர்கள் தவறவிடப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இடமாற்றத்துக்கான தகுதி இருப்பதை மாகாணக் கல்வித் திணைக்களம் ஏற்றுக்கொண்டுள்ளபோதும் இடமாற்றம் வழங்குவதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை என ஆசிரியர்கள் தரப்பில் அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது.

உயர் அதிகாரிகளுடன் பலமுறை தொடர்பு கொண்டபோதும், எமது இடமாற்ற விடயம் தொடர்பான ஆக்கபூர்வமான பதில் எதுவும் வழங்கப்படவில்லை.

எனவேதான் இடமாற்றம் வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து கவனயீர்ப்புப் போராட்டம் மேற்கொள்ள முடிவெடுத்துள்ளோம் என்று ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பாக 34 ஆசிரியர்கள் கையொப்பம் இட்டு அறிக்கை ஒன்றை விடுத்துள்ளனர். அத்துடன் இலங்கை ஆசிரியர் சங்கத்துக்கும் இந்த விடயத்தைத் தாம் தெரியப்படுத்தியுள்ளதாக ஆசிரியர்கள் கூறினர். (த-3)

# பூசகருக்கு நேர்ந்த கதி

யாழ்ப்பாணம்,மே 16

கோயில் கிணற்றில் தண்ணீர் அள்ளச் சென்ற பூசகரை போதையில் நின்ற இளைஞர்களில் ஒருவர் கடுமையாகத் தாக்கி கிணற்றினுள் தூக்கிப்போட முற்பட்டுள்ளார். அதிலிருந்து தப்பிய அவர் தற்போது சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நவாலி வடக்கில் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் இடம்பெற்றது. சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த ஸ்ரீகணேஸ் சர்மானந் (வயது-38) என்பவரே படுகாயமடைந்துள்ளார்.

உடனடியாக சங்கானை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவர் உரும்பிராய் அம்மன் கோயில் பூசகராவார். அட்டகிரி முருகன் கோயில் கிணற்றில் தண்ணீர் அள்ளச் சென்ற போதே சம்பவம் நிகழ்ந்துள்ளது.

அந்தப் பகுதியில் போதைப் பொருள் பாவிப்பவர்களே தன்னைத் தாக்கியதாக அவர் தெரிவித்துள்ளார். இது பற்றி மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஒ-4)

# கொழும்புத்துறை மீன் சந்தையில் உரிய வசதிகளை ஏற்படுத்துங்கள்

யாழ்ப்பாணம், மே 16

கொழும்புத்துறை இறங்குதுறையில் அமைந்துள்ள மீன் சந்தைக்கான வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்தைக்கு வரும் நுகர்வோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. எனினும் அங்கு போதிய வசதிகள் இல்லாமையால் பெரும் இட நெருக்கடி நிலவுகின்றது.

தற்போது இந்த மீன் சந்தை ஒரு சிறிய தற்காலிக கட்டடத்திலேயே இயங்கி வருகின்றது.

இறங்குதுறையில் ஏற்கனவே உள்ள மீன் சந்தை கடந்த காலப் போரினால் சேதமடைந்து காணப்படுகிறது. இதனைப் புனரமைப்பதற்கு இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே இந்தச் சந்தையை புனரமைப்பதற்கும் தற்போது இயங்கும் சந்தையில் மேலும் வசதிகளை ஏற்படுத்துவதற்கும் உடன் நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி மக்களும் மீனவர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-17)

# சட்ட ஆவணங்களை வழங்கும் நடமாடும் சேவை பளையில்

பளை, மே 16

பச்சிலைப்பள்ளி பிரதேச மக்களுக்கு சட்ட ஆவணங்களை வழங்குவதற்கான இறுதிக் கட்ட நடமாடும் சேவை நாளை வியாழக்கிழமை பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெறும்.

தேசிய மொழிகள் மற்றும் சமூகஒருமைப்பாட்டு அமைச்சு, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்ட நிறுவனம், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகம் ஆகியவை இணைந்து நடமாடும் சேவையினை நடத்தவுள்ளன.

பிறப்புச் சான்றிதழ் பெறுதல், காலம் கடந்த பிறப்புகளைப் பதிவு செய்தல், விவாகச் சான்றிதழ் மற்றும் இறப்புச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளல், தேசிய அடையாள அட்டை, முதியோர் அடையாள அட்டை, தொலைந்த அடையாள அட்டை தொடர்பான பொலிஸ் அறிக்கை ஆகியவை நடமாடும் சேவையில் மேற்கொள்ளப்படும்.

நடமாடும் சேவையில் முத்திரைக் கட்டணமின்றி விண்ணப்பங்கள் ஏற்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

# லொறிகளின் கண்ணாடிகளை அடித்து நொருக்கிய இளைஞர்

## வீட்டார் வெளியே வர தப்பிச்சென்றார்

வடமராட்சி, மே 16

மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர் ஒருவர் வீட்டின் முன்னால் தரித்து நின்ற இரு லொறிகளின் முன்பக்கக் கண்ணாடிகளையும் வீட்டின் ஜன்னலையும் பொல்லால் அடித்து உடைத்து நாசப்படுத்தியுள்ளார்.

இந்தச் சம்பவம் பொலிகண்டி சின்னக்கடை என்ற இடத்தில் உள்ள வீடொன்றில் நடைபெற்றுள்ளது.

சம்பவதினம் நண்பகல் வீட்டில் உள்ளோர் சமையல் வேலைகளில் ஈடுபட்டிருந்த சமயம் திடீரென வந்த இளைஞர் ஒருவர் மேற்கொண்ட நாசச் செயல்களினால் சத்தம் கேட்கவே வீட்டில் உள்ளோர் வெளியே வந்து பார்த்தவேளை குறித்த இளைஞர் தப்பிச் சென்றுவிட்டார் என்று கூறப்பட்டது.

வல்வெட்டித்துறைப் பொலிஸில் இந்தச் சம்பவம் தொடர்பாக வீட்டின் உரிமையாளர் முறைப்பாடு செய்துள்ளார். இதனைத் தொடர்ந்து பொலிஸார் குறித்த இளைஞனைத் தேடி வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-8)

# இருளில் மூழ்கும் பாரதி வீதி

கொழும்புத்துறை.மே 16

யாழ். கச்சேரியடி பாரதி வீதியில் உள்ள மின் விளக்குகள் இரவு நேரங்களில் ஒளிராமையால் அந்தப் பகுதி இருளில் மூழ்கிக் காணப்படுகிறது.

வீதியில் மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ள போதிலும் அவை நீண்ட காலமாக ஒளிராது உள்ளன என்று இரவு நேரங்களில் பயணிப்போர் இரவில் பல சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை பாரதி வீதி நெடுநாள்களாக திருத்தம் செய்யப்படாத நிலையில் குன்றும் குழியுமாகக் காணப்படுவதாக தெரிவிக்கப்படுவதுடன் இந்தக் குறைபாடுகளை நீக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-135)

# வலி. கிழக்கில் டெங்கு விழிப்புணர்வுச் செயற்பாடு

யாழ்ப்பாணம், மே 16

வலி கிழக்குப் பகுதியில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கான விழிப்புணர்வுச் செயற்பாடுகள் மீண்டும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கிராமங்கள் தோறும் சுகாதாரப் பகுதியினர் வீடு வீடாகச் சென்று மீண்டும் மக்கள் மத்தியில் சுகாதார விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

டெங்கு அபாயம் குறித்து மக்களுக்குத் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், வீடுவீடாகச் சென்று மக்களின் குடியிருப்புச் சூழலைப் பார்வையிடும் நடவடிக்கைகளிலும் சுகாதாரப் பகுதியினர் ஈடுபட்டுள்ளனர்.

கழிவுப் பொருள்கள், குப்பைகள் நிரம்பியுள்ள இடங்களில் சிரமதானப் பணிகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சூழலை சுத்தமாகப் பேணாதவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-17)

# வெங்காயச் சங்கத்துக்கு நீர்வேலியில் புதிய கட்டடம்



யாழ்ப்பாணம், மே 16

நீர்வேலி தெற்கில் வெங்காய உற்பத்திச் சங்கத்துக்கெனப் புதிய கட்டடம் அமைக்கும் பணிகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றன.

இன்னும் ஓரிரு மாதங்களில் கட்டடப் பணிகள் முற்றாக நிறைவடையும் நிலையை எட்டியுள்ளதாகச் சங்க உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் இந்தக் கட்டடம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வலி.கிழக்குப் பகுதியில் வெங்காய உற்பத்தியை அதிகரிப்பதற்கும், அதற்கான சிறந்த சந்தை வாய்ப்பை ஏற்படுத்துவதற்கும்; வெங்காயச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளின் நலன்களைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டும் இந்த வெங்காய உற்பத்திச் சங்கக் கட்டடம் அமைக்கப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பகுதியில் இந்தச் சங்கத்துக்கு முன்னர் கட்டடம் இருந்தபோதும் கடந்த காலப் போரினால் அது தரைமட்டமாக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (த-17)

# அரச ஊழியருக்கு தனியான பஸ் சேவை

## இன்று முதல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 16

அரச உத்தியோகத்தர்களின் கோரிக்கைக்கு இணங்க அவர்களுக்கான பஸ்சேவை ஒன்று இன்று புதன்கிழமை ஆரம்பிக்கப்படுகிறது என்று இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வட பிராந்தியப் பிரதான முகாமையாளர் எஸ்.ஏ. அஸ்வர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரச ஊழியர்கள் சுமார் 200 பேர் தமக்கான தனி பஸ் சேவை ஒன்றை வழங்குமாறு கோரி மனு ஒன்றை என்னிடம் கையளித்துள்ளனர். இந்தக் கோரிக்கைக்கு அமைய அரச ஊழியர்களுக்கான விசேட பஸ் சேவை இன்று புதன்கிழமை ஆரம்பமாக வுள்ளது.

பருத்தித்துறையில் இருந்து 750 பஸ் பாதை இலக்கம் கொண்ட இந்த

**அரச ஊழியர்கள் சுமார் 200 பேர் தமக்கான தனி பஸ் சேவை ஒன்றை வழங்குமாறு கோரி மனு ஒன்றை என்னிடம் கையளித்துள்ளனர்.**

பஸ் சேவை தினமும் காலை 7 மணிக்கு பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கியும், மாலை 4.15 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து கச்சேரியூடாக பருத்தித்துறை நோக்கியும் பயணிக்கும். இந்தப் பஸ் சேவையில் அரச ஊழியர்கள் மட்டுமே பயணிக்க முடியும் - என்றார். (த-13)

# யாழ். பிரதான வீதியின் அகலிப்புப் பணி ஆரம்பம்

*யாழ்ப்பாணம், மே 16.*

*ஏ-9 வீதியின் அகலிப்புப் பணிகளைத் துரிதப்படுத்துவதற்கு வசதியாக யாழ். நகரப் பகுதியில் பிரதான வீதிக்கு மிக அருகில் அமைந்துள்ள கட்டடங்களை அகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.*

*குறிப்பாக யாழ். நகரின் பிரதான வீதியில் தண்ணீர்த் தாங்கி அமைந்துள்ள இடத்துக்கு அருகில் உள்ள கட்டடங்களைப் பின்னகர்த்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.*

*வீதியை அகலிப்பதற்கான எல்லைக்குள் வரும் அனைத்துக் கட்டடங்களையும் உடனடியாக அகற்றி வீதிப் புனரமைப்புப் பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபை பொதுமக்களிடம் கோரியுள்ளது.*

*இந்தக் கோரிக்கையை அடுத்து பிரதான வீதியில் உள்ள மக்கள் தமது மதில்கள் மற்றும் கட்டடங்களை இடித்து அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.*

*விரைவில் இந்த வீதியின் அகலிப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரி ஒருவர் கூறினார்.* (த-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14 மாதங்களின் பின் ராசாவுக்குப் பிணை

## சொந்த இடமான தமிழகம் செல்லத் தடை

டில்லி, மே16

2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல் தொடர்பான முறைகேட்டில் சிறையில் அடைக்கப்பட்டிருந்த முன்னாள் மத்திய அமைச்சர் ஆ.ராசாவுக்கு சுமார் 14 மாதங்களின் பின்னர் டில்லி நீதிமன்றம் நேற்று பிணை வழங்கியுள்ளது. மேலும் அவர் நீதிமன்ற அனுமதியின்றி சொந்த ஊருக்கு - தமிழகத்துக்குச் செல்லக்கூடாது என்றும் டில்லியிலேயே தங்கியிருக்க வேண்டும் என்றும் நிபந்தனை விதித்துள்ளது நீதிமன்றம்.

2ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு வழக்கில் கைதுசெய்யப்பட்ட முன்னாள் மத்திய தொலைத்தொடர்பு அமைச்சர் ஆ.ராசா கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி முதல் திகார் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவருடன் கைதான தி.மு.கவின் மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழி உட்பட 12 பேரும் பிணையில் விடுதலையாகி விட்டனர்.



தன்னையும் பிணையில் விடுதலை செய்ய வேண்டும் என்று, வழக்கை விசாரித்து வரும் சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றத்தில் நீண்ட காலத்தின் பின்னர் - பல மாதங்கள் கழித்து ஆ.ராசா மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்தப் பிணை மனு மீது கடந்த 11 ஆம் திகதி நீதிபதி ஓ.பி.சைனி முன்னிலையில் விசாரணை நடைபெற்றது.

ராசா தரப்புச் சட்டத்தரணி, சி.பி.ஐ. தரப்பு சட்டத்தரணி ஆகியோரின் வாதங்களைக் கேட்ட நீதிபதி ஓ.பி. சைனி, இந்த வழக்கில் 15 ஆம் திகதி (நேற்று) தீர்ப்பு அளிக்கப்படும் என்று அறிவித்தார். இதன்படி நேற்று விசாரணை இடம்பெற்றது. விசாரணையின் முடிவில் ஆ.ராசாவுக்கு நிபந்தனைகளுடன் பிணை வழங்கப்பட்டது.

**பிணை நிபந்தனை**

கடவுச்சீட்டு ஒப்படைக்கப்பட வேண்டும், 20 லட்சம் ரூபாவை பிணையாகச்செலுத்த வேண்டும்,டில்லியில் தங்கியிருக்க வேண்டும், நீதிமன்ற அனுமதியின்றி தமிழகத்துக்குச் செல்லக்கூடாது, தொலைத்தொடர்பு அலுவலகத்துக்குச் செல்லக்கூடாது, நாடாளுமன்றக்கூட்டத்தில் பங்கேற்கத் தடையில்லை.

இவைதான் பிணைக்கான நிபந்தனைகள். (வ)

## புதுக்கோட்டை இடைத் தேர்தலில் விஜயகாந்துக்கு கருணாநிதி ஆதரவு



புதுக்கோட்டை இடைத் தேர்தலில் போட்டியிடும் தே.மு.தி.கவுக்கு தி.மு.க. ஆதரவு வழங்கும் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன.

இந்தத்தொகுதியின் இந்திய கம்யூனிஸ்ட் எம்.எல்.ஏ முத்துக்குமரன் மறைவையடுத்து புதுக்கோட்டை இடைத்தேர்தல் நடைபெறவுள்ளது.

இந்தத் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், தி.மு.க., ம.தி.மு.க. மற்றும் பா.ம.க. ஆகியன அறிவித்து விட்டன. ஆனால் அ.தி.முகவை எதிர்த்து போட்டியிடப்போவது என்று முடிவு செய்து களத்தில் குதிக்கிறது தே.மு.தி.க.


அ.தி.மு.க. சார்பில் கார்த்திக் தொண்டைமான் போட்டியிடுகிறார். இந்த நிலையில் எதிர்வரும் ஜூன் 12 ஆம் திகதி நடைபெறவுள்ள இடைத் தேர்தலில் தே.மு.தி.க. வேட்பாளர் அறிவிக்கப்படலாம் என்று தெரிகிறது.

முன்னதாக தேர்தலைப் புறக்கணிக்கப் போவதாக அறிவித்த தி.மு.க. தலைவர் கருணாநிதி, பொது வேட்பாளருக்கு ஆதரவு அளிப்பது குறித்து ஆலோசிக்கப்படும் என்றும், கேட்கும் கட்சியைப் பொறுத்து ஆதரவு அளிப்போம் என்றும் தெரிவித்திருந்தார்.

ஆனால் தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் தானாகவே சென்று தி.மு.கவின் ஆதரவு கேட்கத் தயங்குவதாகத் தெரிகிறது. அதே நேரத்தில் தி.மு.கவே முன் வந்து ஆதரித்தால், அதை வரவேற்று ஏற்றுக் கொள்ளத் தயாராகவே இருப்பதாகத் தெரிகிறது.

ஏற்கனவே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தே.மு.தி.கவுக்கு ஆதரவைத் தெரிவித்துவிட்ட நிலையில், பொது வேட்பாளர் அந்தஸ்து தே.மு.தி.கவுக்குக் கிடைத்துள்ளது. இதனால் அந்தக் கட்சியின் வேட்பாளரை நேரடியாக இல்லாவிட்டாலும் மறைமுகமாக தி.மு.க ஆதரிக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் காங்கிரஸ் கட்சியின் ஆதரவையும் பெற விஜயகாந்த் தரப்பு முயற்சி எடுத்து வருகிறது. (வ)

## இணையத் தளங்கள் மீதான வழக்கு 'பேஸ்புக்' பெயரை நீக்குமாறு மனு





டில்லி, மே16

சர்ச்சைக்குரிய தகவல்கள் வெளியான இணையத் தளங்கள் தொடர்பான வழக்கில் இருந்து 'பேஸ்புக்' பெயரை நீக்கக்கோரி டில்லி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சமூக இணையத்தளங்களில் கடவுள்களையும், முக்கிய அரசியல் தலைவர்களையும் இழிவுபடுத்தும் வகையில் படங்கள், கட்டுரைகள் இடம்பெறுகின்றன. இதனால், பல்வேறு இனத்தினரிடையே மோதல் ஏற்படவும், நாட்டின் ஒற்றுமைக்கு ஆபத்து ஏற்படவும் வாய்ப்பு உள்ளது. இதனால், சமூக இணையத்தளங்களை தடை செய்யக்கோரி டில்லி பெருநகர மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் இருந்து பேஸ்புக் இணையத்தின் பெயரை நீக்கக்கோரி டில்லி நீதிமன்றத்தில் 'பேஸ்புக்' இந்தியா நிறுவனத்தின் சார்பில் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில், 'பேஸ்புக்' இணையத்தளத்தில் இடம்பெறும் விவரங்களுக்கு நாம் பொறுப்பல்ல. மேலும் இணையத்தளத்தின் கணினி சேமிப்பகங்கள் அமெரிக்காவில் உள்ளன. எனவே, இந்த வழக்கில் இருந்து பேஸ்புக்கின் பெயரை நீக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. இந்த மனு நீதிபதி பர்வீன் சிங் முன் விரைவில் விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது. (வ)

## மாலைதீவுக்கு மேலும் கடனுதவி பிரதமர் மன்மோகன் அறிவிப்பு



மாலை தீவின் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப வசதியை மேம்படுத்திக்கொள்ள சுமார் 25 மில்லியன் அமெரிக்க டொலர்களை இந்தியா கடனாக வழங்கவுள்ளது.

மாலைதீவில் ஏற்பட்ட அரசியல் சர்ச்சைகளுக்கு பின்னர், இந்திய பிரதமர் மன்மோகன் சிங்கை மாலை தீவுகள் ஜனாதிபதி முஹம்மத் வாஹித் சந்தித்தார்.

இந்தச்சந்திப்பின்போது பிரதமர் மன்மோகன்சிங், மாலைதீவுகளில் அமைதி, ஸ்திரத்தன்மை மற்றும் வளம் போன்றவற்றையே இந்தியா விரும்புகிறது என்று தெரிவித்தார். மேலும், மாலைதீவு அரசியல் கட்சித் தலைவர்கள் அனைவரும் தங்கள் கருத்து வேறுபாடுகளை மறந்து ஆட்சி செழிக்க பாடுபடவேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்தார்.

கடந்தவருடம் நவம்பர் மாதத்தில் பிரதமர் மன்மோகன் சிங் மாலை தீவு சென்றபோது சுமார் 100 மில்லியன் டொலர்கள் அளவிற்கு கடனுதவி வழங்கியது குறிப்பிடத்தக்கது.

## பா.ஜ.க. பிரமுகர் கடத்தல்

**ஒரே நாளில் இரண்டு முக்கியஸ்தர்கள் சத்தீஸ்கரில் கடத்தப்பட்ட சம்பவம் பொலிஸாருக்கு மிகுந்த நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.**

சத்தீஷ்கர் மாநிலத்தில் பாரதீய ஜனதாக்கட்சிப் பிரமுகர் ஒருவர் மாவோயிஸ்ட்டுக்களால் கடத்தப்பட்டுள்ளார். இதனையடுத்து அந்த மாநிலத்தில் பதற்றமான சூழ்நிலை நிலவுகிறது.

சத்தீஷ்கரில், சுக்மா மாவட்டத்தில் பா.ஜ.க. செயலராக உள்ள மோச்சாகி ஜோகா நேற்று முன்தினம் வீட்டுக்குச் செல்வதற்காக பஸ்ஸில் புறப்பட்டுச்சென்றார்.

அப்போது பஸ்ஸை வழிமறித்த மாவோயிஸ்ட்டுகள் அவரை துப்பாக்கி முனையில் கடத்திச்சென்றனர்.

இதேபோன்று தூர்னாபால் பகுதியில் தொழிலதிபர் ஒருவரையும் மாவோயிஸ்ட்டுகள் கடத்திச்சென்றுள்ளனர்.

ஒரே நாளில் இரண்டு முக்கியஸ்தர்கள் சத்தீஸ்கரில் கடத்தப்பட்ட சம்பவம் பொலிஸாருக்கு மிகுந்த நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. இதனையடுத்து பொலிஸார் கடத்தப்பட்டவர்களைத் தேடும் பணியை ஆரம்பித்துள்ளனர். (வ)

## நேபாள விமான விபத்தில் குழந்தை நட்சத்திரம் மரணம்



நேபாளத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விமான விபத்தில் தமிழகத்தைச் சேர்ந்த குழந்தை நட்சத்திரம் தருணி சச்தேவ் உயிரிழந்துள்ளார்.

தருணி சச்தேவ் தனது தாயுடன் நேபாள தலைநகர் காத்மாண்டுவிலிருந்து பிரதான சுற்றுலாத் தளமான ஜோம்சோமுக்கு பயணமானபோது விமானம் மலையில் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்திலேயே தருணி சச்தேவும் அவரது தாயாரும் மரணமடைந்துள்ளனர்.

தருணி பொலிவுட்டில் அமிதாப்பச்சன் நடித்த 'பா' திரைப்படத்தில் அவருடன் இணைந்து பாடசாலை மாணவியாக நடித்துள்ளார்.


மேலும் மலையாளத்தில் பிருத்விராஜ் நடித்த சத்யம், வெள்ளி நட்சத்திரம் படங்களிலும் நடித்துள்ளார்.

இதுதவிர பொலிவுட் நடிகர் ஷாருக்கானின் ரியாலிட்டி நிகழ்ச்சியிலும் பங்கேற்றுள்ளார்.

இந்த விமானத்தில் பயணம் செய்த 21 பேரில் 14 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

# எல்லையில் படைகளைத் திரும்பப் பெறுவதா? அந்தப் பேச்சுக்கு இடமேயில்லை

## பாக். வெளியிட்ட தகவலுக்கு இந்தியா எதிர்ப்பு



டில்லி, மே.16

மும்பை தாக்குதலுக்குப் பின்னர் எல்லைப் பகுதியில் குவிக்கப்பட்ட எல்லைப் படைகளை விலக்கிக் கொள்ள இந்தியாவும் பாகிஸ்தானும் ஒப்புக்கொண்டதாக பாகிஸ்தான் நாளேடு வெளியிட்ட செய்திக்கு இந்தியா கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானிலிருந்து வெளியாகும் 'தி எக்ஸ்பிரஸ் டிரிபியூன்' பத்திரிகையில் நேற்றுமுன்தினம் எல்லைப் பகுதியில் படைகளை இந்தியா விலக்கிக் கொள்கிறது என்ற தலைப்பில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

அதில், மும்பையில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலுக்குப் பின்னர் எல்லையில் இந்தியா படைகளைக் குவித்தது. அதைத் தொடர்ந்து பாகிஸ்தானும் குவித்தது. இந்தநிலையில் இந்தியாவுக்கு பாகிஸ்தான் அதிபர் சர்தாரி கடந்த மாதம் பயணம் மேற்கொண்டிருந்தார். இந்தப்பயணத்தின் போது எல்லைகளில் இருந்து படைகளை விலக்கிக் கொள்ள இருநாடுகளும் ஒப்புக் கொண்டன என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்திய மத்திய பாதுகாப்பு அமைச்சகம் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. படைகளைத் திரும்பப்பெறும் பேச்சுக்கே இடம் இல்லை என்று பாதுகாப்பு அமைச்சக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

முன்னதாக சியாச்சின் எல்லைப் பகுதியில் பனிப்பாறை சரிவில் பாகிஸ்தான் படையினர் சிக்கியபோது அங்கிருந்து இருநாடுகளுமே படைகளை விலக்கிக் கொள்ளவேண்டும் என்று பாகிஸ்தான் இராணுவத் தளபதி கியானி தெரிவித்திருந்தார். ஆனால் இந்தியா அதை அப்போது ஏற்கவில்லை.

ஜம்மு காஷ்மீரில் கரகோரம் கணவாய் வழியாக லடாக் பகுதிக்குச் சீனா மற்றும் பாகிஸ்தானால் ஏற்பட்டிருக்கும் அச்சுறுத்தலைத் தடுக்கும் வகையில் 22 ஆயிரம் அடி உயர மலைப் பகுதியில் இந்தியப் படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர். அண்மைக்காலமாக பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் மற்றும் பல்திஷ்தான் பகுதிகளிலும், சீனா தனது நடவடிக்கைகளை விரிவாக்கம் செய்து வருகிறது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐரோப்பிய ஒன்றியம்

# சிரியா மீது புதிய தடைகள்

பிரஸெல்ஸ், மே 16

ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் சிரியா மீது திங்கட்கிழமை புதிய தடையை விதித்தனர். அந்த நாடு போர் நிறுத்த உடன்பாட்டை கடைப்பிடிக்கவில்லை என்றால், சிரிய அரசுக்கு எதிராக மேலும் நடவடிக்கை எடுப்போம் என்றும் அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

சிரியாவுக்கு எதிராகத் தடை விதிக்க 27 நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களும் ஒப்புக் கொண்டுள்ளனர் என்று ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கை தெரிவிக்கிறது.

அந்த நாட்டுக்குச் சொந்தமான இரண்டு நிறுவனங்களின் சொத்துகளை முடக்கியுள்ளதுடன், அந்த நிறுவனங்களுக்கு விசா வழங்குவதற்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளதென அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது சிரியாவுக்கு எதிராக ஐரோப்பிய ஒன்றியம் விதிக்கும் 15ஆவது தடையாகும். சிரியாவில் போர்நிறுத்த உடன்பாடு முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று பிரிட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் வில்லியம் ஹெகு தெரிவித்தார். சிரியாவில் கொலைகளும், சித்திரவதைகளும் தொடர்கின்றன. எனவே அசாத் அரசை நிர்ப்பந்திப்பது அவசியமாகிறது.

**சிரியாவுக்கு எதிராகத் தடை விதிக்க 27 நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களும் ஒப்புக் கொண்டுள்ளனர் என்று ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கை தெரிவிக்கிறது.**



சிரியாவுக்கு எதிரான அரசியல் நிர்ப்பந்தங்களைத் தொடர்ந்து பிரயோகிக்க வேண்டும் என்று லக்ஸம்பர்க் வெளியுறவு அமைச்சர் ஜீன் அசல்பான் தெரிவித்தார். சிரியாவில் கடந்த 14 மாதங்களாக அரசுக்கு எதிராக வன்முறைகள் நிகழ்ந்து வருகின்றன.

கடந்த மாதம் ஐரோப்பிய ஒன்றியம் மேற்கொண்ட நடவடிக்கையில், அதிபர் அசாத் மற்றும் அவரது குழுவினர் பயன்படுத்தும் ஆடம்பர பொருள்களை சிரியாவுக்கு ஏற்றுமதி செய்ய தடைவிதிக்கப்பட்டது. சிரியா முழுவதும் உடனடியாகப் போர்நிறுத்தப் பார்வையாளர்களை நியமிக்க வேண்டும் என்றும் வெளியுறவு அமைச்சர்கள் வலியுறுத்தினர்.

ஐ.நா.வின் முன்னாள் பொதுச் செயலர் கோபி அனான், ஐ.நா. மற்றும் அரபு லீக் அமைப்பின் தூதுவராகச் செயல்பட்டு போர் நிறுத்த உடன்பாடு ஒன்றை உருவாக்கினார். சிரியாவின் உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வர அந்த உடன்பாடு மட்டுமே தீர்வாகும் என்று ஐரோப்பிய ஒன்றியம் கருதுகிறது.

போர்நிறுத்தக் கண்காணிப்பாளர்கள் அனைவரும் சிரியாவுக்குள் செல்ல முடியும் என்று நம்புகிறேன். பார்வையாளர்கள் உள்ள பகுதிகளில் வன்முறை குறைந்துள்ளது என்று ஸ்வீடன் வெளியுறவு அமைச்சர் கார் பெல்ட் தெரிவித்தார். கோபி அனான் திட்டம் தோல்வியடைந்தால், சிரியாவில் நிகழ்ந்து வரும் உள்நாட்டுப் போர் தீவிரமடையும். அது சிரியாவையும், அந்தப் பிராந்தியத்தின் ஒழுங்கையும் பாழாக்கிவிடும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

போர்நிறுத்தக் கண்காணிப்பாளர்களைப் பாதுகாக்க ஐரோப்பிய ஒன்றியம் முன்வந்துள்ளது. அதற்காக 25 கவச வாகனங்களுக்கு நிதியளிக்க ஐரோப்பிய ஒன்றியம் தயாராக உள்ளது எனத் தெரிகிறது. மேலும் மருத்துவ உதவிகளையும் வழங்க முன்வந்துள்ளது.

இதுவரை 126 பேர் மற்றும் 41 நிறுவனங்களைக் கறுப்புப் பட்டியலில் சேர்த்துள்ள ஐரோப்பிய ஒன்றியம், சிரியாவின் மத்திய வங்கியின் சொத்துக்களை முடக்கியுள்ளது. அத்துடன் ஐரோப்பிய நாடுகளுக்குச் சரக்கு விமானங்கள் வரவும், தங் கம் உள்ளிட்ட விலையுயர்ந்த ஆபரணங்களை வர்த்தகம் செய்யவும் தடை விதித்துள்ளது.

### ஸ்கொட்லன்ட்யார்ட்டில் தீவிரவாதிகள்

உலகிலேயே மிகவும் திறமை வாய்ந்தவர்கள் என பெயர் எடுத்த ஸ்கொட்லண்ட்யார்ட் பொலிஸ் துறைக்குள்ளும் பாகிஸ்தான் தீவிரவாதிகள் புகுந்து இருப்பதை பிரிட்டனின் 'எம்.15' உளவுத் துறையினர் கண்டறிந்துள்ளனர்.

அதைத் தொடர்ந்து சந்தேகப்படும் பொலிஸார் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் அப்துல் ரஹ்மான் என்ற பொலிஸ்காரரும் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். வங்காள தேசத்தைச் சேர்ந்த இவர் லண்டனில் தங்கி பின்னர் பிரிட்டன் குடியுரிமை பெற்றவர். பொலிஸ் வேலையில் சேர்ந்த இவருக்குப் பாகிஸ்தான் தீவிரவாதிகளுடன் தொடர்பு ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து கடந்த 2001ஆம் ஆண்டு பாகிஸ்தான் சென்ற அவருக்குத் தீவிரவாதிகள் தங்கள் முகாம்களில் பயிற்சி அளித்துள்ளனர்.

இந்தத் தகவல் உறுதி செய்யப்பட்டவுடன் அவர்கள் பணியில் இருந்து நீக்கம் செய்யப்பட்டனர். ஆனால் தனது பணி நீக்கத்தை எதிர்த்து அப்துல் ரஹ்மான் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். அதில், தீவிரவாதிகளுக்கும், தனக்கும் எந்தத் தொடர்பும் இல்லை எனத் தெரிவித்துள்ளார்.

## பெண்கள் மொட்டை அடித்தால் அவர்களுக்கு வராதாம் எயிட்ஸ்



பெண்கள் அழகாக இருப்பதால்தான், ஆண்கள் மயங்குகிறார்கள். அதனால் ஏற்படும் பாதுகாப்பற்ற உறவு மூலம் எய்ட்ஸ் பரவுகிறது. இதைத் தடுக்க பெண்கள் தலையை மொட்டை அடிக்க வேண்டும் என்று ஸிம்பாப்வே நாடாளுமன்றத்தில் ஓர் உறுப்பினர் பேசினார். இதற்கு கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

ஸிம்பாப்வே நாடாளுமன்றத்தின் சார்பில் எச்.ஐ.வி விழிப்புணர்வுக் கருத்தரங்கம் நடந்தது. அதில், நாடாளுமன்ற உறுப்பினர் மோர்கன் பமாய் என்பவர், விழிப்புணர்வுக் கருத்துச் சொல்வதாக நினைத்துக் கொண்டு, ஏதேதோ பேசி மாட்டிக் கொண்டார்.

அவர் அங்கு பேசுகையில், ''பெண்கள் அழகான ஆடைகள், அழகுசாதனப் பொருள்கள் மூலம் தங்களை மேன்மேலும் அழகாக வெளிப்படுத்திக் காட்டுகின்றனர். இதனால், அவர்களின் அழகைக் கண்டு ஆண்கள் மயங்கி விடுகின்றனர். உணர்ச்சி வேகத்தில், அவர்கள் பாதுகாப்பற்ற முறையில் பாலியல் தொடர்புகளை வைத்துக் கொள்கின்றனர். அதைத் தடுக்க வேண்டும். ஆணை விட, பெண்ணின் உடலுக்குள் ஈரப்பதம் அதிகம் இருப்பதால் எச்.ஐ.வி கிருமி பெண்களிடம் வேகமாகப் பரவுகிறது. இந்த காரணங்களால், பெண்கள் அதிகமாகக் குளிக்கக் கூடாது. தலையை மொட்டையடித்துக் கொள்ள வேண்டும். இதற்காக ஒரு சட்டமே கொண்டு வரலாம். அதன் மூலம், எச்.ஐ.வி பரவுவதைக் கட்டுப்படுத்தலாம்'' என்றார்.

இதையடுத்து, பெண்களை இழிவுபடுத்தும் வகையில் பேசியதற்காக மோர்கனுக்கு எதிராக ஸிம்பாப்வேயில் கடும் கண்டனக் குரல்கள் எழுந்துள்ளன.

### சிரியாவில் 23 இராணுவத்தினர் சாவு

மத்திய சிரியாவின் ரஸ்ரன் நகரில் இடம்பெற்று வரும் கடும் மோதலில் சுமார் 23 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதலில் பலர் காயமடைந்துள்ளனர் என பிரிட்டனைத் தளமாகக் கொண்ட சிரிய மனித உரிமை கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இராணுவத்தினரின் 3 வாகனங்கள் சேதமடைந்துள்ளன. எறிகணைத் தாக்குதல் காரணமாகப் பொது மக்கள் பலர் காயமடைந்துள்ளனர் என்றும் கண்காணிப்பாளர்கள் கூறியுள்ளனர்.

சிரியாவில் ஜனநாயகச் சார்பு ஆர்ப்பாட்டங்கள் கடந்த 2011ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் தொடங்கியதிலிருந்து இதுவரையில் 9000 பொது மக்கள் மரணமடைந்துள்ளனர் என்று ஐ.நா. கணக்கிட்டுள்ளது.



ஸ்ரேலில் கைதாகியுள்ள பாலஸ்தீனர்களை மீட்டுத் தரக்கோரி ஆர்ப்பாட்டம் அந்த நாட்டு ஐ.நா. அலுவலகத்தின் முன்றலில் நடந்தது.

## பான் கீ – மூனுக்கு கை முறிந்தது

ஜெனிவா, மே 16

ஐ.நா.பொதுச்செயலாளர் பான் கீ-மூனுக்கு கால்பந்து விளையாட்டின்போது இடது கை முறிந்தது. இது குறித்து ஐ.நா. செய்தித் தொடர்பாளர் மார்ட்டின் நெசிர்க்கி கூறுகையில், ''67 வயதான பான் கீ-மூனுக்குச் சிறு எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது. அவர் கால்பந்து தொடரில் விளையாடிய போது இவ்வாறு நிகழ்ந்தது. இதனைத் தொடர்ந்து அவர் சிகிச்சை பெற்று வருகின்றார்'' -என்றார்.

### கொலைக் குற்ற விஞ்ஞானி சிஸ்டி நாடு திரும்புகிறார்

ஆஜ்மீர், மே 16

20 ஆண்டுகளுக்குப் பின்னர் பாகிஸ்தான் திரும்பி உள்ளார் 82 வயதாகும் விஞ்ஞானி கலீல் சிஸ்டி. பாகிஸ்தானில் சில மாதங்கள் தற்காலிகமாகத் தங்கியிருக்க உச்ச நீதிமன்றம் இவருக்கு அனுமதியளித்துள்ளது.

கொலைக் குற்றத்துக்காக ஆயுள் தண்டனை பெற்ற சிஸ்டிக்கு கடந்த ஏப்ரல் 9ஆம் திகதி பிணை வழங்கப்பட்டது. இருப்பினும் இந்தியாவை விட்டுச் செல்லக்கூடாது என்று உத்தரவில் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து ஆஜ்மீரில் உள்ள தனது சகோதரர் வீட்டில் அவர் தங்கியிருந்தார். இந்த நிலையில் மே 10ஆம் திகதி பாகிஸ்தான் செல்வதற்கு உச்ச நீதிமன்றம் அனுமதியளித்தது. இதைத் தொடர்ந்து நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்ட அவரது கடவுச்சீட்டு திரும்ப வழங்கப்பட்டது.

ரஷ்ய விமான விபத்து:

## கறுப்புப்பெட்டி தேடும் பணிகள் ஆரம்பம்

ஜகார்த்தா, மே 16

இந்தோனேசியாவில், கடந்த வாரம் விபத்துக்குள்ளான ரஷ்யப் பயணிகள் விமானத்தின் கறுப்புப் பெட்டியைத் தேடும் பணி நடக்கிறது. ரஷ்யாவின் சுகோய் விமான நிறுவனம், இதுவரை போர் விமானங்களை மட்டுமே தயாரித்து வந்தது. தற்போது இந்த நிறுவனம், பயணிகள் விமானங்களையும் தயாரித்து வருகிறது. இப்படி தயாரிக்கப்பட்ட 42 சுகோய் சூப்பர் ஜெட் விமானங்களை, இந்தோனேசியாவுக்கு விற்க திட்டமிடப்பட்டது. புதிய விமானத்தின் செயல்பாடுகளை விளக்குவதற்காக, இந்தோனேசியாவின் ஜகார்த்தா விமான நிலையத்திலிருந்து கடந்த வாரம் 48 பேருடன் புறப்பட்ட சுகோய் விமானம், 20 நிமிடங்களுக்குப் பின்னர், மேற்கு ஜாவாவின் போகோர் என்ற இடத்தில் உள்ள சலாக் எரிமலையில் மோதி விபத்துக்குள்ளானது.



இந்த விபத்தில் அனைவரும் கொல்லப்பட்டனர். விமானத்தின் பாகங்களையும், சடலங்களையும் மீட்கும் பணி நடைபெற்று வருகின்றது. வானிலை சீர்கேட்டினால் மீட்புப் பணி மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில் நடந்து வருகிறது.

இதுவரை விமானத்தின் கறுப்புப் பெட்டி மீட்கப்படவில்லை. இந்தக் கறுப்புப் பெட்டியில் பதிவானத் தகவல்களை வைத்து தான், விபத்துக்கான காரணத்தை கண்டறிய முடியும் என்பதால், அதை தேடும் பணியில் மீட்புக் குழுவினர் தீவிரமாக உள்ளனர். தற்போது இந்த மலையை கருமேகம் சூழ்ந்து பலத்த மழை பெய்வதால், மீட்புப் பணி தாமதமாகியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிபிய விவகாரம் தொடர்பாக

# விசாரணை தேவை

## நேட்டோவை வலியுறுத்துகின்றது மனித உரிமை கண்காணிப்பகம்

லிபியாவில் கடந்த வருடம் இடம்பெற்ற விமானத் தாக்குதல்களால் கொல்லப்பட்ட பொதுமக்கள் குறித்து முழுமையான விசாரணை நடத்துமாறு நேட்டோ அமைப்பை மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

நேட்டோவின் விமானத் தாக்குதல்களில் குறைந்த பட்சம் 72 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் நம்புகின்றது. பொருத்தமான இடங்களில் நேட்டோ அமைப்பு பொறுப்பேற்க வேண்டும் எனவும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

பொதுமக்கள் உயிரிழப்பைக் குறைப்பதற்கு முன்னெப்போதுமில்லாத வகையில் அவதானமான நடவடிக்கைகளைத் தான் மேற்கொண்டதாக நேட்டோ தெரிவித்துள்ளது. அதே வேளை உயிரிழப்புகளை உறுதிப்படுத்துவதற்குத் தான் தரையில் பிரசன்னமாகாதிருக்கவில்லை எனவும் இதனால் இவற்றுக்குத் தான் பொறுப்பேற்க முடியாது எனவும் நேட்டோ தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் லிபியாவின் அப்போதைய ஜனாதிபதி கடாபியின் படைகளுக்கு எதிராக அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த விமானங்கள் 9658 தடவைகள் தாக்குதல்களை நடத்தின. 16 நாடுகள் இந்தத் தாக்குதல்களுக்கு உதவியளித்தமை குறிப்பிடத்தக்கது.



நேட்டோவின் விமானத் தாக்குதல்களில் குறைந்த பட்சம் 72 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் நம்புகின்றது.

இந்தத் தாக்குதல்களில் 16 சிறுவர்கள், 14 பெண்கள் உட்பட 55 பொதுமக்கள் உயிரிழந்த சம்பவங்களைத் தான் ஆவணப்படுத்தியுள்ளதாக சர்வதேச மன்னிப்புச் சபை கடந்த மார்ச் மாதம் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## தலாய் லாமாவின் குற்றச்சாட்டுக்கு சீனா மறுப்பு



லண்டன், மே 16

''பெண் பக்தர்கள் வேடத்தில் ஆள்களை அனுப்பி, என்னை கொல்ல சதி நடக்கிறது'' எனக் கூறிய தலாய் லாமாவின் குற்றச்சாட்டை, சீனா மறுத்துள்ளது.

சீனாவின் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியின் பத்திரிகையின் தலையங்கத்தில், இது குறித்து எழுதப்பட்டுள்ள செய்திக் குறிப்பில், இந்த ஆண்டு இறுதியில், கம்யூனிஸ்ட் கட்சி மாநாடு நடக்க உள்ளது. இதில் குழப்பம் ஏற்படுத்தும் பொருட்டும், மேலும் பிரிவினைவாத நடவடிக்கைகளை ஏற்படுத்தும் பொருட்டும், அவர் இது போன்ற சூழ்ச்சியைக் கையாண்டுள்ளார். தலாய் லாமாவால் சில பிரச்சினைகள் உள்ளன என்றாலும், அவர் உயிரோடு இருப்பது எங்களுக்கு ஒரு பொருட்டல்ல. அவர் நோபல் பரிசு பெற்ற மனிதராக நடந்து கொள்ளாமல், சீனாவுக்கு எதிரானப் புலனாய்வு வேலைகளைச் செய்கிறார். தற்போது கூறியுள்ள குற்றச்சாட்டு மூலம், அவர் இயற்கையாக மரணமடைந்தாலும், சீனா விஷம் வைத்துக் கொன்றுவிட்டது போன்ற தோற்றத்தை ஏற்படுத்த முயற்சிக்கிறார். திபெத்தியப் பகுதியில், அவர் வன்முறைகளைத் தூண்டிவிட்ட போதும், அவரை சீனா தண்டிக்கவில்லை. உலக நாடுகளுக்கு, அவர் இன்னும் பாதுகாப்பாகத் தான் சென்று வருகிறார். இதன் மூலம், சீனா தனது கண்ணியத்தை நிலை நாட்டி வருகிறது எனக் கூறப்பட்டுள்ளது.

## கிரேக்கத்தில் அரசமைப்பது நெருக்கடியில்

கிரேக்கத்தில் புதிய கூட்டணி அரசமைப்பது தொடர்பான பேச்சுக்களில் இருந்து தீவிர இடதுசாரிக் கட்சி விலகியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்காரணமாக கிரேக்கத்தில் மேலும் அரசியல் ஸ்திரமற்ற நிலை தோன்றியுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. நிதி நெருக்கடியைச் சமாளிக்கப் பிணை நிதியைப் பெற்றுக் கொள்வதற்கு எதிரான கட்சி தேர்தலில் வெற்றி பெறும் எனத் தெரிவிக்கப்படும் நிலையில், குறித்த கட்சி இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளது.

கூட்டணி அரசை அமைப்பது தொடர்பானப் பேச்சுக்களுக்கு நான்கு கட்சிகளுக்குக் கிரேக்க ஜனாதிபதி கரோலோஸ் பெப்போலியஸ் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த நிலையில் பிணை நிதியைப் பெற்றுக் கொள்வதற்கு ஆதரவான எந்தவொரு கட்சியுடனும் பேச்சு நடத்தப்படமாட்டாது என்று இடதுசாரிக் கட்சியின் தலைவர் அறிவித்துள்ளார்.

## ஜேர்மனி இடைத் தேர்தலில் ஆளுங்கட்சி தோல்வி

பெர்லின், மே 16

ஜேர்மனியின் வடக்கு ரைன் வெஸ்ட்போலியா மாகாணத்தில் நடைபெற்ற இடைத் தேர்தலில் பிரதமர் எஞ்ஜெலா மொர்கல் தலைமை வகிக்கும் கிறிஸ்தவ ஜனநாயக ஒன்றியக் கட்சி தோல்வியைச் சந்தித்தது. ஆளும் கட்சிக்கு இது பெரும் பின்னடைவாகக் கருதப்படுகிறது. ஏற்கெனவே கடந்த வாரம் ஷெலிஸ்விக்-ஹோல்ஸ்டீன் பகுதியில் நடைபெற்ற தேர்தலிலும் இந்தக்கட்சி தோல்வியைச் சந்தித்தது.

வடக்கு ரைன் வெஸ்ட்போலியா மாகாணத்தில் பிரதான எதிர்க் கட்சியாகப் பிரதமரின் கிறிஸ்தவ ஜனநாயக ஒன்றியக் கட்சி விளங்கி வருகிறது. அண்மையில் நடந்த தேர்தலில் இந்தக் கட்சிக்கு ஆதரவாக 26.3 சதவீத வாக்குகளே கிடைத்தன.


நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி திலகவதி கனகசபாபதி (உசன்)

திதி :16.05.2012 புதன்கிழமை ஏகாதசி

மலர்வு 05★06★1949

உதிர்வு 01★05★2008

நாலாண்டும் எங்களுக்கு நால் பத்து ஆனதம்மா
காலாண்டும் கூட கலியுகம் ஆகுதம்மா
வான்போல் உயர்ந்து வளர்ந்த அம்மாவே!
கான் பயிர் போல் கருகிடும் நாங்கள் அம்மாவே!
உங்கள் ஆத்ம சாந்திக்காக...

''காவேரி''
உசன், மிருசுவில்.

குடும்பத்தினர்.

(C/2995)(6.7.45)

பயிலுனர் தேவை

பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றுக்கு கணக்காய்வுப் பயிலுனர்கள் தேவைப்படுகின்றனர். இதற்கான விண்ணப்பங்கள் Chartered Accountancy HNDA, AAT பயிலும் மாணவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. பயில விரும்புவோர் சுயவிவரக் கோவையுடன் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

W.S. சிறுபாட்ணம் அன்கோ பட்டயக்கணக்காளர் | 96, மணிக்கூட்டுகோபுர வீதி, யாழ்ப்பாணம்

E.mail :wsk jaff@Yahoo.com

வீடு, தோட்டக்காணி உடனடி விற்பனைக்கு உண்டு

அச்சுவேலி, தொண்டமனாறு, சந்நிதி வீதியில் $2\frac{1}{2}$ பரப்புக் காணியில் கிணற்றுடன் அமைந்துள்ள 05 அறைகள், 02 கோல் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு. தோட்டக் காணியும் பிரதான வீதியில் கிழக்கு, மேற்காக 150 மீற்றரில் (16 பரப்பு) உள்ளது.
தரகர் தேவையில்லை
தொ.பே. இல. 077 1188 707
075 7933 839

(14714) (45.6.7)

மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு 16★05★1987

இறப்பு 15★05★2009



அமரர் செல்வமோகன் ஜெனிற்றா (சுபா)

எம்மைத் தவிக்கவிட்டு தொலை தூரம்
சென்ற உடன் பிறப்பே
உன் ஆத்ம சாந்திக்காக இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்

கிராஞ்சி, சிவபுரம்

குடும்பத்தினர்

8 ஆம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 05★07★1946

உதிர்வு 16★05★2004

அமரர் முத்தையா அருமைத்துரை

( வைத்திய ஆய்வுகூட ஓய்வுபெற்ற தொழில்நுட்பவியலாளர்)

ஆறாத்துயரில் எமை ஆழ்த்தி
மீளாத்துயில்
கொண்ட எங்கள் இதயத் தெய்வமே
அப்பாவே நீங்கள் எங்களைப்பிரிந்து
எட்டாண்டுகள் ஆனாலும் உங்கள்
நினைவு எங்களை விட்டு என்றும்
அகலாது உங்கள் ஆத்ம சாந்திக்காக
அனுதினமும் அத்துளு அம்பாளை
வேண்டிப் பிரார்த்திக்கும்
உங்கள் அன்பு மனைவி,
பிள்ளைகள்: அல்லி, அகிலன்

அத்துளு அம்மன் கோவிலடி,
கரவெட்டி கிழக்கு, கரவெட்டி (021 2263632)

SAKTHI HOME SCIENCE ACADEMY யின்

மகளிருக்கான குறுகிய கால புதிய பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.



கேக் ஐசிங், மாச்சீனி மலர்கள், Fondant ஐசிங், உணவு தயாரித்தல், Glass Painting, Crystal work, Knitting ஆகிய பயிற்சிகளை பயில விரும்பும் மாணவிகள் பதிவுகளை மேற்கொள்ளவும். பயிற்சியின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

இடம் : அச்சுவேலி

தொடர்புகளுக்கு: 021-3008487


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவலைகளுக்கு விடை கொடுங்கள்

(17)

### சுனாமி கற்றுத் தந்த பாடம்

இயற்கையின் சீற்றங்களில் (புயல், வெள்ளம், வரட்சி) இருந்து மீள்கிற நம்மால் கவலைகளில் இருந்து மீள முடியாதா என்ன?

மெரினா கடற்கரை எத்தனை அமைதியாய் இருக்கிறது. இந்தப் பூனையும் பால் குடிக்குமா என்கிற மாதிரி! இதே கடல்தான் சுனாமியின் போது பேரழிவை உண்டு பண்ணியது. சுனாமி ஏற்படுத்திய இழப்புகளில் இருந்து சோகங்க ளில் இருந்து பாதிக்கப்பட்டவர்கள், தங்கள் வாழ்க்கையைப் புதுப்பித்துக் கொண்டிருக்கிறார்கள் அல்லவா! கவலைகளை நம்மால் வெற்றி கொள்ள முடியும்! ஆழிப்பேரலை நமக்கெல்லாம் கற்றுத் தந்த பாடம் இது!

'இது நடவாது' என்றோ 'கிடைக்காது' என்றோ 'முடியாது' என்றோ ஏன் கவலைப்படுகிறோம்? நமக்குள்ள மூளைத் திறனில் பத்தில் ஒன்பது பங்கைக் கூட நாம் பயன்படுத்துவதில்லை என்று அறிவியலாளர்கள் தெரிவிக்கின்றனர். அப்படித் தான் நமக்குள்ள ஆற்றலையும் நாம் முழுமையாய் பயன் படுத்துவதில்லை. வழக்கத்தைவிடக் கூடுதலாகவே அபாய நிலையிலேயே நம்முடைய ஆற்றல் வெளிப்படும். மெல்ல நடக்கிற ஒருவர் மாடு துரத்துகிறது என்றால் கனவேகத்தில் ஓட்டமெடுப்பாரில்லையா!

உங்கள் அறிவுத் திறனை,ஆற்றலை இன்னும் அதிக அளவில் பயன்படுத்துங்கள். அப்போது எதையும் உங்களால் நிகழ்த்திக் காட்ட முடியும். நீங்கள் விரும்பியதை அடைவீர்கள். பிறகு- கவலைப்படுகிற நிலை இருக்காது.

*'கொடிய இரவை*
*சீறும் புயலை*
*கடுமையான பசியை*
*முயற்சித் தடையை*
*இழிவுக்குள்ளாகும் நிலையை*
*பயங்கர விபத்தை*
*எதிர்கொள்ளும்போது*
*மரங்களையும் விலங்குகளையும்*
*நினைவில் கொள்ளுங்கள்'*

என்கிறது வால்ட் விட்மனின் கவிதையொன்று.

விலங்குகள் தங்களுக்கேற்படும் துன்பங்களை அமைதியான முறையில் எதிர்கொள்கின்றன. அவற்றுக்கு நரம்புத் தளர்ச்சியோ, வயிற்றுப்புண்ணோ வருவதில்லை. அவை ஒருபோதும் சித்த சுவாதீனத்தை இழப்பதில்லை.

### என்னதான் நடக்கும் நடக்கட்டுமே

ஒவ்வொரு நோய்க்கும் பரிகாரம் இருக்கிறது. அல்லது இல்லாமலும் இருக்கும். இருந்தால் கண்டடையுங்கள். இல்லையென்றால் கவலைப்படாதீர்கள்.

பெரிய தொழிலதிபர்கள் எப்போதும் மகிழ்ச்சியாக இருப்பார்கள் என்று சொல்வதற்கில்லை. ஆனால், தங்களைக் கவலைக்குள்ளாக்கும் நிலைகளை அவர்கள் வெகு சாமர்த்தியமாகக் கையாள்கிறார்கள். தவிர்க்க முடியாதவைகளுடன் எப்படிச் சரி செய்து கொண்டு போவது என்பது அவர்களுக்குத் தெரிந்திருக்கிறது.

கவலைப் படுவதால் எதுவும் ஆகிவிடாது. இழப்புகளை ஈடு பண்ணுவதில் அது ஒரு சதவீதமும் பயன்படாது என்பதை அவர்கள் நன்கறிவார்கள்.

கடினமான சூழ்நிலைகளை அவர்கள் எப்படி எதிர் கொள்கிறார்கள்? தங்களால் செய்யக்கூடியதைக் கட்டாயம் செய்கிறார்கள். தாங்கள் செய்யக் கூடியது எதுவும் இல்லை என்கிற நிலையில் அதை அப்படியே மறந்துவிடுகிறார்கள்.

ஹென்றி ஃபோர்டு கூறுவார். என்னால் கையாள முடியாத நிகழ்ச்சிகளை அதன் போக்கில் நான் விட்டு விடுவேன்' என்று.

'வருங்காலத்தைப் பற்றி நான் கவலைப்படுவதில்லை. வருங்காலத்தை மாற்றி விடும் சக்திகள் அநேகம் உண்டு. அவற்றை நம்மால் புரிந்துகொள்ளவோ கணிக்கவோ முடியாது' என்பார். அமெரிக்க கிறிஸ்லர் நிறுவனத்தின் தலைவர் கே.டி.கெல்லர். நம்முடைய சக்திக்கு அப்பாற்பட்டவைகளைப் பற்றிக் கவலைப்படாமல் இருந்தாலே, நாம் மகிழ்ச்சியாக இருக்க முடியும்.

### மதிப்பிடத் தவறியவர்

பெஞ்சமின் ப்ராங்ளின் (அமெரிக்கா) ஒருபன்முக ஆளுமை உடையவர். அச்சிடுகிறவர். எழுத்தாளர், பதிப்பாளர், அஞ்சல்துறைத் தலைவர்,புதுமைகளைக் கண்டுபிடிக்கிறவர் என்று பலமுகங்கள் அவருக்கு.

ப்ராங்ளின் தம்முடைய ஏழாவது வயதில் செய்த ஒரு சிறிய தவறுக்காக எழுபதுகளிலும் கவலைப்பட்டிருக்கிறார்.

அவர் சிறுவனாக இருந்தபோது 'விசில்' (ஊதும் கருவி) ஒன்றை வாங்க விரும்பினார். விளையாட்டுப் பொருள்கள் விற்கும் கடைக்குச் சென்றார். ஒரு கைக்குட்டையில் மூட்டையாய் கட்டிப் போயிருந்த நாணயங்களை அப்படியே கடைக்காரனிடம் கொடுத்து விசிலை வாங்கினார். விசில் என்ன விலை என்று கூட கடைக்காரனிடம் அவர் கேட்கவில்லை.

வீட்டுக்கு வந்ததும் விசிலை ஊதிக்கொண்டு சுற்றிச் சுற்றி வந்தார். அவருடைய மூத்த சகோதரர்களும் சகோதரிகளும் அவரைக் கேலி செய்தனர். 'இந்த விசிலுக்கு நீ கொடுத்த காசு அதிகம்' என்றனர். ப்ராங்ளின் அழலானார். அவருடைய மனவேதனை என்றும் மறையாத வடுவானது.

-சி.எஸ்.தேவநாதன் *(தொடரும்)*

# வன்செயலைக் கட்டுப்படுத்தி சிறந்த சமூகத்தை உருவாக்குவோம்

## நூல் வெளியீட்டு நிகழ்வில் இளங்கோவன்

**எமது செயற்பாடுகள் சிறப்பாக அமைவதன் மூலம் எதிர்காலத்தில் விமர்சனங்கள் இடம்பெறாது பார்த்துக் கொள்வது அவசியம். ஆசிரியர்களாகிய எங்களது செயற்பாட்டால் மாணவர்கள் உயர்வான நிலையை எட்டமுடியும்**

யாழ்ப்பாணம், மே 16

வன்செயல்களைக் கட்டுப்படுத்தி நல்ல சமுதாயம் ஒன்றை உருவாக்குவதற்கு முன்னேற்றகரமான நடவடிக்கைகள் தேவை என்று ஆளுநரின் செயலாளர் எஸ். இளங்கோவன் தெரிவித்தார்.

நெடுந்தீவு மகேஷ் எழுதிய ''தாரணி ஓர் ஆச்சரியக்குறி'' சிறுகதை நூல் வெளியீட்டு விழா கடந்த சனிக்கிழமை யாழ்.இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் 'ஆறுதல்' நிர்வாகப் பணிப்பாளர் சுந்தரம் டிவகலாலா தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே இளங்கோவன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது:-

வன்செயல்களைக் கட்டுப்படுத்தி நல்ல சமுதாயத்தை உருவாக்கும் பொறுப்பு அனைவருக்கும் உரியது. இன்று கல்வியின் நிலைபற்றி பல்வேறு விமர்சனங்கள் எழுகின்றன. இதற்குப் பொறுப்புக் கூற வேண்டியது எல்லோரதும் கடமையாகும். இதில் ஆசிரியர்கள் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

எமது செயற்பாடுகள் சிறப்பாக அமைவதன் மூலம், எதிர்காலத்தில் விமர்சனங்கள் இடம்பெறாது பார்த்துக் கொள்வது அவசியம். ஆசிரியர்களாகிய எங்களது செயற்பாட்டால் மாணவர்கள் உயர்வான நிலையை எட்டமுடியும் என்பதற்கான ஒரு காத்திரமான அடையாளமாக இந்த நூல் உள்ளது.

பலதரப்பட்ட சிந்தனைகள் உள்ள குழந்தைகளிடத்தில் ஆற்றல்களை மேம்படுத்தக் கூடியதாக ஆசிரியர்கள் பணி அமைய வேண்டும் என்பதை இந்த நூல் உறுதிப்படுத்தியுள்ளது. நல்ல கவிஞனாக, எழுத்தாளனாக கல்வித்துறையில் சிறப்பான பணியாற்றிய மகேஸ் மேலும் நல்ல படைப்புக்களை வழங்க வேண்டும்- என்றார்.

கோப்பாய் உதவி பிரதேச செயலாளரும் எழுத்தாளருமாகிய தாட்ஷாயினி, விரிவுரையாளர் லலீசன், கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் எஸ்.தனபாலன், நூலாசிரியர் நெடுந்தீவு மகேஷ்ஆகியோரும் உரையாற்றினார்கள். நூலின் முதல் பிரதியை மகேஷிடம் இருந்து ஆளுநரின் செயலாளர் இளங்கோவன் பெற்றுக்கொண்டார். (எ-7)

# வலிகாமம் கல்வி வலயத்தால் நடத்தப்பட்ட தமிழ்த்தினப் போட்டி முடிவுகள்

வலிகாமம் வலயத்தால் நடத்தப்பட்ட தமிழ்த்தினப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன. அவற்றின் விவரம் வருமாறு:-

**பிரிவு 4 - பாவோதல்**

முதலாமிடம் அ.அமிர்வர்ஜினி - மானி. மகளிர் கல்லூரி, இரண்டாமிடம் - ம.சஹானா -மகாஜனக் கல்லூரி, மூன்றாமிடம் - அ.அனுசுயா- கந்தரோடை தமிழ் கந்தையா வித்தி.

**பிரிவு 5- பாவோதல்**

முதலாமிடம் - வி.துவாரகா - யூனியன் கல்லூரி, இரண்டாமிடம் - க.சத்தியதர்சினி - ஸ்கந்தவரோதயக் கல்லூரி, மூன்றாமிடம் - கி.அர்ச்சனா - மானி.மகளிர் கல்லூரி.

**பிரிவு 1 - இசையும் அசைவும்**

முதலாமிடம் - ரா.கீர்த்தனா - யாழ்ப்பாணக் கல்லூரி, இரண்டாமிடம் - ப.டினோஜினி - அருணோதயக் கல்லூரி, மூன்றாமிடம் - அ.அனிற்றா - புன்னாலைக்கட்டுவன் சித்தி விநாயகர் வித்தி.

**பிரிவு 2 - இசை - தனி**

முதலாமிடம் - அ.கிருஷாந் - யூனியன் கல்லூரி, இரண்டாமிடம்- ப.சங்கவி - யாழ்ப்பாணக் கல்லூரி, மூன்றாமிடம் - யோ.விதுர்ஷன் - பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தி.

**பிரிவு 3- இசை - தனி**

முதலாமிடம் - இ.நிரோசா - வயாவிளான் ம.ம.வி., இரண்டாமிடம் - வ.ஜெயக்குமார் - யாழ்ப்பாணக் கல்லூரி, மூன்றாமிடம் - ஜோ.மேரிடினுஜா - இளவாலை கன்னியர்மடம் ம.வி,.

**பிரிவு - 4 - இசை - தனி**

முதலாமிடம் - சி.மேரி மடோனா - இளவாலை கன்னியர்மடம் ம.வி, இரண்டாமிடம் - வி.கல்யாணி - இணுவில் மத்திய கல்லூரி, மூன்றாமிடம் - ஸ்ரீ.ஜெனித்திரா - வயாவிளான் ம.ம.வி, மூன்றாமிடம் - சி.நிலாஜினி - இராமநாதன் கல்லூரி,

**பிரிவு 5- இசை தனி**

முதலாமிடம் - ஞா.தயூரன் - மானி.இந்துக் கல்லூரி, இரண்டாமிடம் - த.விந்துஜா - இராமநாதன் கல்லூரி, மூன்றாமிடம் - நாக சுஜித்தா - இராமநாதன் கல்லூரி.

**பிரிவு 2- நடனம் தனி**

முதலாமிடம் - சு.மோகனப்பிரியா விக்ரோறியாக் கல்லூரி, இரண்டாமிடம் - சி.பிரவீணா - இணுவில் மத்திய கல்லூரி, மூன்றாமிடம் - இ.சுரேகா - வயாவிளான் ம.ம.வி. *(தொடரும்)*

# ஜனாதிபதி விருது



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீட இரசாயனவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி குகமூர்த்தி வேலாயுதமூர்த்தி 2009 ஆம் ஆண்டுக்கான விஞ்ஞான ஆராய்ச்சிக்கான ஜனாதிபதி விருதுக்காக (Presidential Award For Scientific Research 2009) இவ்வருடம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இங்கிலாந்தின் லிவர்பூல் பல்கலைக்கழகம் (University of Liverpool, England) மற்றும் இலங்கையின் பேராதனைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் இரசாயனவியலில் மேற்கொண்ட ஆராய்ச்சிகள், சர்வதேச ஆராய்ச்சி சஞ்சிகையில் பிரசுரிக்கப்பட்டமைக்காக இந்த விஞ்ஞான ஆராய்ச்சிக்கான ஜனாதிபதி விருது இலங்கையின் ஆராய்ச்சி சபையினால் (National Research Council) இந்த விருது இவருக்கு வழங்கப்படுகிறது.

யாழ்ப்பாணம், கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இரசாயன சிறப்பு விஞ்ஞானமாணி பட்டதாரியுமான இவர், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவருமாவார்.(எ)



கோண்டாவில் வட கிழக்கு கலைவாணி சிக்கன கூட்டுறவுச் சங்கத்தின் 25 ஆவது ஆண்டு விழா கடந்த 7 ஆம் திகதி திங்கட்கிழமை சங்கக் கட்டடத்தில் சங்கத் தலைவர் நா.சந்திராதேவி தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் [illegible] செ.பரிமளம், நா.சந்திரலேகா, சோ.சரோஜாதேவி, ப.ரஜனி, எஸ்.கிருஷ்ணதேவி ஆகியோர் [illegible] யாழ். மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் சே.அருந்தவநாதன், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இந்த நிகழ்வில் கல்வி அதிகாரிகள், கிராம அமைப்புக்கள் மற்றும் சங்க உறுப்பினர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (எ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

தலைமையகம்:
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
தொலைநகல்
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

வன்னிப் பணிமனை:
ஏ-9 வீதி, கராடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
நெல்லியடிக் கிளை:
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395
சாவகச்சேரிக் கிளை:
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' -மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலெக்ரிக்ஸ்' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## இங்கும் அவசியம் உளவியல் சிகிச்சை

வடக்கு - கிழக்கில் போரில் ஈடுபட்ட படையினருக்கு உளவியல் சிகிச்சை வழங்கப்படுவது அவசியம் என்று கொழும்பில் இருந்து வெளிவரும் ஆங்கிலப் பத்திரிகை ஒன்று அரசை வலியுறுத்தியுள்ளது. கடந்த காலங்களில் தற்கொலை செய்து கொண்ட படையினரின் எண்ணிக்கையின் அடிப்படையில் இந்தப் பரிந்துரையை அந்தப் பத்திரிகை வழங்கியுள்ளது.

''2006இல் முப்படைகளையும் சேர்ந்த 52 பேரும், பொலிஸ் அதிகாரிகள் 6 பேரும் தற்கொலை செய்து கொண்டனர். 2007ஆம் ஆண்டில், பொலிஸ் அதிகாரிகள் 11 பேரும் முப்படைகளையும் சேர்ந்த 52 பேரும் தற்கொலை செய்தனர். 2008இல் பொலிஸ் அதிகாரிகள் 14 பேரும், முப்படைகளையும் சேர்ந்த 64 படையினரும் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். 2009இல் பொலிஸ் அதிகாரிகள் 6 பேரும், முப்படைகளையும் சேர்ந்த 93 பேரும் தற்கொலை செய்து கொண்டனர். 2010, 2011 ஆம் ஆண்டுகளில் முப்படையினர் மற்றும் பொலிஸார் தற்கொலை செய்தமை பற்றிய அதிகாரபூர்வ தகவல்கள் இல்லை. எனினும் இந்த இரு ஆண்டுகளிலும் தலா 100 இற்கும் அதிகமான தற்கொலைகள் இடம்பெற்றுள்ளன. அதேவேளை, கடந்த சில வாரங்களுக்குள் மட்டும் படையினருக்கு இடையில் ஏற்பட்ட சச்சரவுகளை அடுத்து, சாவகச்சேரி, திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் சக படையினர் 4 பேரைச் சுட்டுக்கொன்றுவிட்டு 3 படையினர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்'' என்று புள்ளிவிவரங்களை வெளியிட்டுள்ள அந்தப் பத்திரகை அதனடிப்படையில் படையினருக்கு உளநலச் சிகிச்சை வேண்டும் என்று தெரிவித்திருக்கிறது.

படையினர் ஏன் தற்கொலை செய்து கொள்கிறார்கள் என்பதற்கான காரணங்கள் தெரியவரவில்லை. ஆனாலும் போரின் தீவிரம் அதிகரிக்க அதிகரிக்க படையினர் தற்கொலை செய்துகொள்ளும் எண்ணிக்கையும் அதிகரித்திருக்கிறது என்பது தெளிவாகிறது. கொலை இயந்திரங்களாகப் பயிற்றப்பட்டவர்களாலேயே போரின் தீவிரத்தைத் தாங்க முடியவில்லை என்கிறபோது, அப்பாவிப் பொதுமக்களால் போரின் கொடுமைகளை, அதிலும் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களால் கண்முன்னே சாவையும் பயங்கரத்தையும் கண்ட மக்களின் நிலைமை என்ன என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

ஆனால், போரால் பாதிக்கப்பட்ட மக்களின் மனவடுக்களைக் களைவதற்குக் கடந்த மூன்று ஆண்டுகளில் அரசு கிஞ்சித்தும் நடவடிக்கை எடுக்கவில்லை. போதாததற்கு போர்க் காலத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த உளசமூக ஆற்றுப்படுத்தல் திட்டங்களையும்கூட போர் முடிந்த பின்னர் மேற்கொள்வதற்கு அரசு அனுமதிக்கவில்லை.

போரின் பின்னர் வடக்கு – கிழக்கில் மேற்கொள்ளப்பட்ட எல்லா உதவித் திட்டங்களும் பொருள் உதவிகளாக இருக்க வேண்டும் என்றே அரசு நெறிப்படுத்தியது. உளசமூக ஆற்றுப்படுத்தல் திட்டங்கள் அனைத்தும் ஜனாதிபதி விசேட செயலணியினால் நிராகரிக்கப்பட்டன.

இதன் விளைவுகளை வடக்கு – கிழக்கில் அதிகரித்துவதும் தற்கொலைகளின் எண்ணிக்கை விவரங்கள் வெளிப்படுத்துகின்றன. குறிப்பாக வன்னியில் போரிற்குள் நேரடியாக அகப்பட்டுக்கொண்ட மக்களுக்கு உள ஆற்றுப்படுத்தல்கள் அவசியம் என்று உளவியலாளர்கள் கூறுகிறார்கள். ஆனால் நடவடிக்கை எதுவும் கிடையாது. எனவே படையினருக்கு மட்டுமல்ல மக்களுக்கும் உளவியல் சிகிச்சை வேண்டியிருக்கிறது என்பதை தெற்கு ஊடகங்கள் அரசிடம் வலியுறுத்தவேண்டும்.

# வேடிக்கை மனிதரைப் போல்...

■ செந்தூரி

“இன்றிலிருந்து தொடங்குகின்றது உங்களின் அடிமைவாழ்க்கை'' என்று அடக்குமுறையின் சாசனத்தை ஒவ்வொரு தமிழனின் முதுகிலும் ரத்தக்காயங்களால் எழுதப்புறப்பட்ட அடக்குமுறையாளர்களின் 'பூரண வெற்றி', ஒத்திவைக்கப்பட்டு வந்த முப்பது வருடகால 'இனவெதிர்ப்பு சக்தி'யின் வலிமையை, வலிந்த பூச்சியத்தினுள் தள்ளி வெறுமையாக்கிய 'சிறுமை' பலருக்குரியது.

நிசப்தக் கிடங்காக இன்றைய பொழுதுகளில் பணிந்து குனிந்து நிற்கும் அந்த அலையோரக் கிராமங்களின் கடந்துபோன நாள்கள் ஆற்றாக் கொடியவை. எவராலும் பெரிதாக அறியப்படாத ஓரங்களில் தன்பாட்டுக்கு இருந்த அந்த நெய்தல் கிராமங்களின் நிலவரித் தன்மைகள் அகில உலகிற்கும் பகிரங்கப்படுத்தப்பட்ட பெயர்களாகிப் போயின.

'வெள்ள முள்ளிவாய்க்கால்', 'கரையாம் முள்ளிவாய்க்கால்', 'வலைஞர்மடம்', 'முள்ளிவாய்க்கால்' என கடலோடிய காரணப் பெயர்களைச் சுமந்த கூட்டுப் பிரதேசங்கள் தமிழ் வீரத்தின் விதைப்பையும், இனவழிப்பு இறுதி அறுவடையையும்'' ஒருசேரத் தம் நெஞ்சின் வடுக்களாகத் தாங்கி நிற்கின்றன.

நன்னீர்ச் சேகரிப்புக்குரிய கடல் நீரேரியான நந்திக்கடல், இந்து மா சமுத்திரத்தை ஆசையோடு அணைக்க முயற்சிக்கும் போதெல்லாம் தடுக்கும் நிலப் பரப்புக்களாக, இரு புறமும் நீர் சூழ தம்மிருப்பை வரிந்து கொண்ட மேற்கூறிய கிராமங்களின் ஒவ்வொரு அசைவும், அசையாப் பொருள்களிடமும் கல்லையும் கனிக்கும் கதைகள் கத்தையாய் பின்னிக் கிடக்கின்றன. நெஞ்சாடும் நீள் நினைவுகளின் சுவடுகளில், தமிழினத் தனித்துவத்தின் இறுதி மண் எல்லை வரை தம்முயிர்ப்பிடிப்பினைச் சுமந்தோடி, அவலச் சாவுகளுக்குள் தம்மை ஆழப் புதைத்துக் கொண்ட எம்அன்புக்குரிய உறவுகள் ஒவ்வொருவரும் தனித்தனி மதிப்பிற்குரியவர்கள். பல நூற்றாண்டுப் பகையை, பழிதீர்த்த நெஞ்சுரமற்ற பேடிகளின் இரும்புக் கருவிகளின் முன்னால், குழந்தையுணர்வுகளுடனும், தண்ணீர்ப் போத்தல்களுடனும், மாற்றுடைப் பொதிகளோடும் எக்காலத்திலும் சிதைத்துவிட முடியாத மாபெரும் மனவலிமையோடு எதிர்த்துப் பொருதி நின்ற எம்மினத்தின் வீரபுருஷர்களாக சிருஷ்டிக்கப்படும் தகுதிவாய்ந்தவர்கள்.

''இன்றிலிருந்து தொடங்குகின்றது உங்களின் அடிமை வாழ்க்கை'' என்று அடக்குமுறையின் சாசனத்தை ஒவ்வொரு தமிழனின் முதுகிலும் ரத்தக்காயங்களால் எழுதப்புறப்பட்ட அடக்குமுறையாளர்களின் 'பூரண வெற்றி', ஒத்திவைக்கப்பட்டு வந்த முப்பது வருடகால 'இனவெதிர்ப்புச் சக்தி'யின் வலிமையை, வலிந்த பூச்சியத்தினுள் தள்ளி வெறுமையாக்கிய 'சிறுமை' பலருக்குரியது. ஆனால் காயங்களும், கண்ணீரும், ரத்தமும் தந்த வலிகளின் பேறான புரட்சியும், திருப்பி அடித்த வல்லமையும், காரணமேதுமில்லாமல் உலகமே திரண்டு தன்னை எதிர்த்ததைக் கண்கள் பனிக்க சந்தித்ததுமான பெருமை, தனியொருவனான தமிழனுக்கேயுரியது.

தீவிர மொழிப்பற்றுக்குரிய, கலாசார மாற்றங்களை இலகுவில் தனக்குள் அனுமதித்து விடாத, தனக்கு மேலான சக்திகளைத் தெய்வங்களாக்கிப் பலமாக நம்புகின்ற, நெடுவரலாற்றுக்குரிய சரித்திரப் பின்னணியைச் சாட்சியாகவுடைய, உலகெங்கும் பரந்து வாழ்கின்ற பல்வகைமை இனப்பரம்பலுக்குரிய இனமொன்றின், வீழ்ச்சி வெகுசாதாரணமாக அனுமதிக்கப்பட்டதென்பதை இலகுவில் நம்பிவிட மறுக்கின்றன.

மேற்கூறிய ஒவ்வொரு தனித்தன்மைகளையும், தன்னினத்தின் தனியியல்புகளாகப் போற்றும் மனங்கள் நைஜீரியாவில் பட்டினிச்சாவோடு, கறுப்பினர்கள் நடத்தும் வாழ்க்கைப் போராட்டத்தை ஊடகங்களில் பார்த்து ''ஐயோ பாவம்!'' என்று எவ்வித முன்னறிமுகமுமில்லாத மனிதர்களுக்காகவெல்லாம் பச்சாதாபப்படும் இரக்க குணமுடையவர்களின் இடையபது மரணங்கள் ஏன் இவ்வளவு கொடூரமானவையாக இருந்தன?

ஈன்றவேதனையில் புரண்டு துடிக்கின்ற பசுமாட்டுக்கு சுகப்பிரசவமாகி, நாம்பன் கன்று குதிக்க வேண்டி, ஆனந்த வைரவருக்கு பொங்கல் நேர்த்தி வைக்கின்ற தாய்மார்களின், பைசுப் பிள்ளைகளின் கற்பழிந்த சாவுகளுக்கு காவல் காக்க யாருமே இல்லாது போனதேப்படி?

இதைப்பற்றித்தான் எழுதுவதென்று முடிவெடுத்துத் தொடங்கி இன்னமும் இலக்கில்லாமல் இயங்கிக் கொண்டோடும், என் பேனாவின் குமிழ் முனையினைப் போல், காற்றின் கம்பீரத்தில் கை கட்டாத வாழ்வுக்கு ஆசைப்பட்டவனின் இன்றைய இலக்கு இலகு வார்த்தைகளில் சொல்வதாயின், '' எதுவுமேயில்லை''

''சென்னையின் மெரீனாவின் கடற்காற்றில் அணைந்து விடாமல் காப்பிடப்பட்ட மெழுகு தீபங்களை ஏந்தி நிற்கும் குழந்தை வரிசைகளின் சோடிக் கண்களில் தெரிகின்ற கனிவு'', ''ஈழத்தமிழர்களை பேசுவதால், தனக்கு வாடகைக்கு வீடு கிடைப்பதில் உள்ள சிரமங்களை வாழ்க்கையின் வகுப்பறைகளாக பாடம் கற்கும் பக்குவ வார்த்தைகளை சொல்லி மெய்சிலிர்க்க வைக்கின்ற ஐயா பழ-நெடுமாறன்'', ''இரண்டுபட்டு நிற்கின்ற புலம் பெயர் தமிழ்ப் பிரிவுகளினுள் தமிழினக் கரிநாள்களின் நினைவேந்தல் எழுச்சி, உணர்ச்சியிழந்து கிடப்பாய், ஸ்கைப்பில் குரல் தளதளக்கும் டென்மார்க் அண்ணனொருவன், "சீருடையில்லாத, வேறொரு நிறவுடை தரித்த சிரிப்பில் கண்ணாடிக்குள் தெரியும் மகனைத் தடவிக் கொண்டே, அணையாத விளக்குக்கு எண்ணெய் யூற்றும் யாரோவொரு தனித்த தாய், என்கின்ற எல்லா உணர்ச்சிகளிலுமே மறைந்து நிற்கின்ற ''அந்த இனம் தெரியாத இலக்கு'', ஒத்த பண்புக் குரியதில்லையா? இன்னும் இரண்டு வருடங்கள் இழவு காத்தோமில்லை! அதன் பிறகு? இன்னும் ஐந்து வருடங்கள் நினைத்திருந்தோமில்லை! அதன் பிறகு?

''இழந்து போனவைகளையும், இப்போது அனுபவிப்பவைகளையும்'', அதிவேகமாகக் கூட்டிக் கழித்து விரைந்த முடிவொன்றுக்கு வந்து விட்ட எம்மினம் இனியும் காட்டுப்பாதைகளையும், கந்தகப்புகையையும், ஆயுதப் பயிற்சியையும், அடங்க மறுக்கும் எழுச்சியையும் சொல்லளவிலேனும் ஏற்றுக் கொள்ளத் தயார் இல்லை! 'பேஸ்புக்'கிலிருந்து வெளி வந்து புழுதியில் புரண்டு எதிரியை எதிர்க்கும் போர்ப் பயிற்சியொன்றுக்குள் தன் தலையை வலிந்து செலுத்திக் கொள்வதை இனவெழுச்சி என்று பெருமிதங்கொள்வதை தவிர்த்து, ''விளைவில்லாத விழல்'' என்றகின்ற எண்ணங்களை வளர்த்து வருகின்ற இளஞ் சமூகம், இன்னுமொரு அமைதியை கெடுக்கின்ற, அல்லோலகல்லோலப் படுகின்ற அன்றாட வாழ்வை குலைக்கின்ற கலவரமாக அடுத்த கட்ட போராட்ட நகர்வுகளைப் பீதிக் கண்ணாடி போட்டுப் பார்க்கின்ற பெற்றோர் சமூகம், எப்போதும் இப்படியே வாழ்ந்தோய்ந்து விடும், வகைக் கனவுகளோடும், எல்லாவகையான முரண்பாடுகளோடும் சமரசம் கொள்ளும் தயார்ப்படுத்தல்களோடும் சாலைகளிலேயே விண்ணாண இணையத் தளங்களில், கானொலி இணைக்கப்பட்ட செய்திகளோடு சிலிர்த்துக் கொள்கின்ற கற்றறிந்த அலுவலகச் சமூகம், கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாய் ஏதாவது கொடுங்கள், பிச்சமிருந்தால் என்கின்ற வகையறாக்களுக்குள், ''கேள்விகளையெல்லாம், வேண்டுகோள்களாய்'' மாற்றி இரந்து வாழும் பெருமைபெற்ற 'கொடிக்குரிய' அரசியல் சமூகம். இவையாவும் இன்னும் சில வருடங்கள் கழிந்த பின்னால், 'முள்ளிவாய்க்கால்' ராஜேஸ் வரி நிதியத்தினால் மணல் அகற்ற அனுமதிக்கப்படும், முல்லைத்தீவுக் கடற்கரை என்கின்ற வருமான வழி யொன்றுக்கான அடையாளத்தை தவிர மீதியனைத்தையும் துடைத்தழிக்கின்ற முற்குறிகாட்டிகள்.

இனவழிப்பை செய்த அரசின் அடக்குமுறைகளுக்குள் வாழ்வதால் தமது உணர்வுகளில் செறிந்துள்ள துன்பங்களை வெளிக்காட்ட முடியாத பயத்தோடு அஞ்சி வாழ்கின்றனர் ஈழவர்கள் என்கின்ற மூடிய கூடாரத்தினுள் நாம் போடுகின்ற வேடம் தரித்த கொண்டாட்டங்கள், உலகோரால் ஏளனத்தினால் மட்டுமே தூற்றப்படும். செத்தது அப்பனேயானாலும், முப்பதாம் நாள் காரியம் முடிய முன்னரே பூட்டிய அறைக்குள் ரீ.வியை எடுத்து வைத்து, திருமதி செல்வத்தை தவறாது தரிசிக்கும் பெண் மக்காள், நின்று போன மின்சாரத்துக்காய், சுன்னாகத்தோரை வசைபாடி, கண்ணீர் மல்கி வெளியேவரும் சம்பவங்களே இன்றைய ஈழத்தோர்க்கு சரியான உவமை.

கம்யூனிஸ்ட் பின்பற்றுநர்களில் தென்னிந்தியாவின் மூத்தவர்களான தா.பாண்டியன் டி.ராஜா, ஆர்.நல்லக்கண்ணு போன்றோரின் வரிசையில் ஈழ அனுதாபியாக அறியப்பட்டவர் சி.மகேந்திரன். எங்களுக்காக சிவப்புக் கண்ணீர் சிந்தும் தாய்த்தமிழக உறவுகளில் முன்னோடியானவர். இறங்கு தளங்களிலேயே வைத்து கிழித்தகற்றப்படுகின்ற தமிழ்த்தேசியம் சார்ந்த கட்டுரைப் பக்கங்களை இழந்த பின் இலங்கைக்குள் வருகின்ற வெகுஜன வார இதழொன்றில் தொடராக எழுதியவர் கட்டுரைகள் நூலுருப் பெற்றதால் கிடைக்க நேர்ந்தன. வாய்ப்பிருந்தால், வாழும் தமிழரெல்லாம் தம் துயரில் பங்கெடுத்த அயலவனின் உளக்குமுறலை வாசித்துத் தெரிந்திருக்க வேண்டிய தேவையுடைத்த அந் நூல்- 'வீழ்வேனென்று நினைத்தாயோ?' இறுதிப் பக்கங்களில் கண்ணீர் கோர்த்து நின்றிருந்த போது மங்கலாகத் தெரிந்த வரிகள் மனதில் நின்றன.

'' முள்ளிவாய்க்கால் அழிவற்றது;
அது, விதைப்பதை விதைத்து விட்டு,
அறுவடைக்காக காத்து நிற்கிறது!''

சொந்த நலன்களுக்கு தன்னை மீளா ஈட்டுக்கு ஒப்புக் கொடுத்து விட்டு ஓய்ந்து தூங்கும் கும்பல் ஒன்றின் சார்பில் தங்களின் 'வீழ்வேனென்று நினைத்தாயோ?' எனும் கேள்விக்கு, உரத்துப் பதிலளிக்க தோன்றுகின்றது ''எழுவோமென்ற எண்ணமில்லை தோழரே!''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MEDICAL EXHIBITION


## சுக வாழ்வை நோக்கி - 2012

# சுவாசத்தொகுதி காட்சிக் கூடம்

21.05.2012 26.05.2012

"சுகவாழ்வை நோக்கி மருத்துவக் கண்காட்சி 2012 இன் சுவாசத் தொகுதி தொடர்பான அலகிற்கு பொறுப்பாக உள்ள குழுவினராகிய நாம் எமது காட்சி மையம் (stall) தொடர்பாக சிறு முன்னோட்டத்தை சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

சுவாசத் தொகுதியானது மூக்குக் குழியில் ஆரம்பித்து தொண்டை, வாதனாளி, வலது, இடது சுவாசக் குழாய்கள், சுவாசச்சிறுகுழாய்கள் ஊடாக சுவாசப்பையில் முடிவடைகின்றது. உட்சுவாசத்தின் போது மூக்குக்குழியை அடையும் வளியானது சுவாசத்துணிக்கைகள் அகற்றப்பட்டு உடல் வெப்ப நிலைக்கு உயர்த்தப்பட்டு நுரையீரலுக்குக் கடத்தப்படுகின்றது. சுவாசப்பையை அடையும் ஒட்சிசன் வாயுவானது சுவாசப்பையிலுள்ள குருதிமயிர்க்குழாய்களுக்குப் பரிமாற்றப்படுவதுடன், குருதி மயிர்க்குழாய்களிலுள்ள இரத்தத்தில் கரைந்துள்ள $CO_2$ வாயுவானது மீண்டும் நுரையீரலினுள் பரிமாற்றப்பட்டு வெளிச்சுவாசத்தின் மூலம் வெளியகற்றப்படுகின்றது.



(a) The respiratory system

பரிமாற்றப்பட்ட ஒட்சிசன் வாயுவானது உடற்கலங்களின் செயற்பாட்டுக்கு அவசியமான சக்தியை உற்பத்தி செய்ய அத்தியாவசியமாகின்றது. எனவே சுவாசத் தொகுதியின் எப்பகுதியில் ஆயினும் ஏற்படும் நோய்நிலைமையானது இறுதியில் உடற்கலங்களின் செயற்பாட்டைப் பாதிப்படையச் செய்கின்றது.

இக் கண்காட்சியானது பெரும்பாலும் பாடசாலை மாணவர்களை இலக்காகக் கொண்டு நடத்தப்படுவதால் அவர்களது பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டே எமது பதாதைகள் (Banners) வடிவமைக்கப்பட்டுள்ளன. எனவே பாடசாலை மாணவர்கள் இக்கண்காட்சியில் பங்குபற்றுவதன் மூலம் விஞ்ஞானம் மற்றும் உயிரியல் பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள சுவாசத்தொகுதியின் மொத்தக்கட்டமைப்பு, இழையவியல் கட்டமைப்பு, சுவாசப் பொறிமுறையின் கட்டுப்பாடு பல்வேறு சூழல் நிலைமைகளிற்கு சுவாசத் தொகுதியில் இயைபாக்கம் தொடர்பான அறிவினைப் பெற முடியும். இதனைத் தவிர சுவாசத்தொகுதி சார் நோய்கள் தொடர்பான அடிப்படை அறிவைப் பெற இக்கண்காட்சி வழிவகுக்கின்றது. பொதுவான சுவாசநோய்களான ஆஸ்துமா, நியூமோனியா, COPD போன்ற நோய் தொடர்பாகவும் விளக்கங்கள் அளிக்கப்பட இருப்பதால் பொதுமக்களுக்கு இது ஒரு சிறந்த கண்காட்சியாக அமையும். இந்நோய்களுக்கான அறிகுறிகள், காரணங்கள், சிகிச்சைகளைப் பின்பற்றும் முறை, தடுப்புமுறை தொடர்பாக ஒரு சிறந்த அறிவினை இக் கண்காட்சி மக்களுக்கு ஊட்டும் என்பதில் ஐயமில்லை.

சுவாசநோய்களைத் தவிர்ப்பதற்குரிய வழிமுறைகள் தொடர்பாகவும் இக்கண்காட்சியில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருப்பதுடன் புகைத்தலின் நச்சுவிளைவுகள் மற்றும் பாதிப்புக்கள் தொடர்பாகவும் அறிவுறுத்தப்படவுள்ளது. COP.D மற்றும் சுவாசப்புற்று நோய்களுக்கு முக்கிய காரணியாக புகைத்தலே விளங்குகின்றது. ஆனால் இது தொடர்பான போதிய எச்சரிக்கை இளைய சமுதாயத்தினிடையே ஏற்படுத்தப்படாமையால், புகைத்தலிற்கு அடிமையாகும் இளைஞரின் தொகை அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. எனவே இதற்குரிய விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடிய வகையிலே புகைத்தல் தொடர்பான எமது காட்சிமையம் வடிவமைக்கப்பட்டுள்ளது. புகைத்தலிற்கு அடிமையாகிய நிலையில் விடுபடமுடியாது. தவிர்ப்பவர்களுக்கு புகைத்தலில் இருந்து எவ்வாறு விடுபடலாம் என்பது தொடர்பான ஆலோசனைகளும் வழங்கப்படவுள்ளது.

எமது கண்காட்சிமையமானது சுவாசத்தொகுதிசார் நோய்களுக்கு மேலதிகமாக காது, மூக்கு, தொண்டை தொடர்பான நோய்களுக்குரிய விளக்கங்களை அளிக்கும் பகுதிகளையும் உள்ளடக்கியுள்ளது.

எனவே எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை மருத்துவ பீட வளாகத்தில் நடைபெறவுள்ள இக்கண்காட்சியைத் தவறவிடாது பார்வையிட்டுப் பயன் பெறுங்கள்.


என்.ஆர்.ராஜ்குமார்
4ஆம் வருட மருத்துவ மாணவன்

ஊடக அனுசரணை: உதயன்

---

இலங்கையில் ஜனநாயகத்துக்கான பத்திரிகையாளர்கள் அமைப்பின் உருவாக்குநர்களில் ஒருவரான பாஷண அபேயவர்த்தன, ''இலங்கையில் தண்டிக்கப்படாத போர்க்குற்றங்கள்'' ஆவணப்படத்துக்கு வலுவான ஆதாரங்களை வழங்கிய ஒருவராக கருதப்படுகிறார். அதனால் நேர்ந்த அச்சுறுத்தலினால் தற்போது அஞ்ஞாதவாசம் இருக்கும் அவர், தமிழக இதழ் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் இருந்து ஒரு சிறு பகுதி இங்கு பிரசுரமாகிறது.

# சாட்சியாய் இருக்கிறேன்



மே 2009 இல் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பான உங்களது எதிர்வினை என்ன? அப்பொழுது நீங்கள் எங்கே இருந்தீர்கள்?

இப்போது போலவே போரின் கடைசிக் காலங்களில் நான் தலைமறைவாகவே இருந்தேன். இதனால் 2006 ஆம் ஆண்டு மார்கழி மாதம் நாட்டை விட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டேன். நான் நாட்டைவிட்டு மிகத் தூரத்தில் வாழ்ந்த போதும், இலங்கைக்குள் ஊடக வேலை செய்யும் என்னுடைய சக நண்பர்கள் பலரைவிடக் குறிப்பிட்ட சூழ்நிலை மற்றும் சம்பவங்கள் தொடர்பாகப் பல தகவல்களை நன்றாகப் பெற்றுக் கொள்ளும் ஒரு நிலையிலேயே எப்பொழுதும் இருக்கிறேன். இக்காரணத்திற்கான பின்னணி, மற்றவர்களைவிட எனக்கு அக்கறை அதிகம் என்பதல்ல. மாறாக இலங்கையில் இருக்கின்ற பல்வேறு தடைகள் காரணமாக அங்கு செயல்படுகின்ற ஊடகவியலாளர்களுக்கு இல்லாத சலுகை எனக்கு இருக்கிறது. அதாவது அனைத்து மூலாதாரச் சக்திகளுடன் தொடர்பு கொண்டு எல்லா வகையான தகவல்களையும் எந்தத் தடைகளும் இல்லாது பெற்றுக் கொள்வதற்கான வழிகள் எனக்கு இருக்கின்றன. இந்த ஓர் உண்மையாலும், தலைமறைவாக இருந்த போதும், நான் எழுதுவதைப் பிரசுரிக்கப் பத்திரிகைகள் இருக்கின்றமையாலும் எனது பத்திரிகையாளர் தொழிலைத் தொடர முடிகிறது.

எனது தலைமறைவு வாழ்க்கையின் முதல் மூன்று வருடங்களும் நான் தொடர்ச்சியாக ஒன்றிரண்டு சிங்களப்பத்திரிகைகளுக்குப் பத்திகளும் ஆய்வுக் கட்டுரைகளும் எழுதிவந்துள்ளேன். என்னைப் போன்றவர்களின் குரல்களும் வெளிவருவதற்கு ஓரளவான ஜனநாயக வெளியை வைத்திருப்பதற்கு இந்தப் பத்திரிகைகள் முயல்கின்றன. இவற்றில் ஒவ்வொரு கிழமைமையும் வன்னியில் என்ன நடக்கிறது எனபதையும் அந்த அழிவுகளையும் கொடூரங்களையும் எழுதினேன். இவை வெறுமனே தமிழ் மக்களை என்ன செய்கிறார்கள் என்பதை வெளியிடும் கட்டுரைகளல்ல. மாறாக என் மக்களின் தார்மீக அறத்தை உயிர் வாழ்வைப்பதற்கான அவாவினாலான ஒரு போராட்டமே. இந்த இடத்தில் நான் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

தென்பகுதியில் நடைபெற்ற தொடர்ச்சியான முடிவற்ற வன்முறைக் காலச் சுழல்களில் வளர்ந்த தலைமுறையைச் சேர்ந்தவன் நான். பயங்கரமான காலங்களினூடாக வாழ்ந்திருக்கிறேன். மிகவும் கோரமான, காட்டுமிராண்டித்தனமான சம்பவங்களின் சாட்சியாக நான் இருக்கிறேன். ஆனால் 2009 விதிவிலக்கானது. என்னுடைய வாழ்க்கையில் மிகவும் நிம்மதியிழந்த மனச் சோர்வடைந்து வாழ்ந்த காலங்கள் அவை. அப்பொழுது மனிதர்களுக்கு நடந்த பயங்கரமான துன்பங்களும் சோகங்களும் அழிவுகளின் அளவுகளும், கணக்கிடவோ கற்பனை செய்யவோ முடியாதவை. இந்தப் பேரழிவுகளினதும் இன அழிப்பினதும் தினசரிச் செய்திகள் உள்வாங்கவோ கூறவோ முடியாதளவிற்கு மோசமானவையாக இருந்தன. ஆனால் இவற்றைப் பற்றித்தெற்கில் இருந்த அறியாமைக்கும் அவற்றைப் புரிந்து கொள்ள முடியாதளவிற்கு உணர்வில்லாதவர்களாக இருந்ததற்கும் சாட்சியாக இருந்தமை என்னை மிகவும் பாதித்தது. மிலேச்சத்தனமான வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்களாக நீங்கள் இருக்கும் போது குறிப்பிடத்தக்களவு தார்மீக அறத்தை உணரக்கூடியவர்களாக நீங்கள் இருப்பீர்கள். ஏனெனில் என்ன நடந்திருக்குமென உங்களுக்குத் தெரியும். நீங்கள் எந்தவிதமான மனப்பாதிப்பில் இருந்த போதும், அழிவானது உடல்ரீதியாக இருப்பின் உங்களது விதியை நீங்களே காணக்கூடியவராக இருப்பீர்கள். ஆனால் மோசமான போர் வன்முறை மற்றும் பாலியல் குற்றங்களைப் புரிந்தவர்களினூடான ஒரு சமூகத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துபவராக நீங்கள் இருக்கும் போது, உங்களது சமூகத்தின் கூட்டு ஆன்மாவானது இவ்வாறான மிருகத்தனமான, பயங்கரமான போர்க்குற்றங்களைப் புரிந்தவர்களால் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற போது, இவ்வாறான போர்க்குற்றங்கள் புரிந்தவர்களின் உணர்ச்சிகளைப் பகிர்ந்தும் பகிராததற்கும் அப்பால், அவர்களின் குற்றங்களைக் கூட்டாக நியாயப்படுத்தும் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற போது, நீங்கள் தார்மீக அறந் தொடர்பான அதல பாதாளப் படுகுழியில் வீழ்வீர்கள். ஏனெனில் நீங்கள் உங்கள் தோலை உரித்துக் கொண்டு எவ்வாறு வெளியில் வர முடியாதோ, அப்படித் தான் சமூகத்தின் கூட்டு அடையாளத் திலிருந்தும் நீங்கள் உடனடியாகப் பாய்ந்து வெளிவர முடியாது.

நாம் எந்தவிதமான குறிப்பிடத்தக்க எதிர்ப்புகளையும் காட்டாது இருந்தமையானது இவ்வாறான அழிவுகள் நடைபெறுவதற்கு நாமும் உடந்தையாக இருந்தமையையே காட்டுகின்றது. சுய சீரழிவு நமக்குள் ஏற்படுவதற்கு இந்த நிலை காரணமாக இருக்கின்றது. இது தார்மீகம், அறம் தொடர்பானது. ஆகவே வெளியே தெரியாது. இவ்வாறான இனப் படுகொலையும் அழிப்பும் போர்க் குற்றங்களும் நடப்பது தொடர்பான சிறிதளவான அக்கறைகூடக் காட்டாமல் விட்டமையால், நாம் கூட்டுச் சமூகமாக இருக்கிறோம் என்பதை கூறுவதற்கான தார்மீக அடிப்படையைக் கூட நாம் இழந்துள்ளோம். எங்களுடைய குற்றவுணர்வானது எங்களது ஆன்மாவை முடமாக்கியுள்ளது. அது நமது ஆன்மாவை உள்ளிருந்தே அரிக்கிறது. ஒரு சிங்களவராக நான் பெற்ற அனுபவம் இதுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதத்தின் பெயரால் சண்டையிடும் குருமார்

அது ஒரு பைத்தியக்கார ஆஸ்பத்திரி. ஓரளவு மனநிலையால் பாதிப்படைந்த மூன்று நபர்கள் ஒரே அறையில் தங்கி இருந்தனர். ஒருநாள் காலை கண்விழித்த முதல் பைத்தியம் தன் தலைத் தொப்பியைக் காணாமல் அங்கும் இங்கும் பரபரப்பாகத் தேடியது. அதைப் பார்த்து இரண்டாம் பைத்தியம் 'ஹி...ஹி..ஹி...' என்று கையைத் தட்டி பல்லைக் காட்டி குதித்துக் குதித்து இளித்தது. ''ஏன் சிரிக்கிறாய்?'' என்று மூன்றாம் பைத்தியம் கேட்டபோது ''நான்தானே தொப்பியை ஒளித்து வைத்திருக்கிறேன்'' என்று குதித்தது இரண்டாம் பைத்தியம்.

அன்று இரவு தூங்கும்போது தொப்பியை இழந்த முதல் பைத்தியம், தொப்பியை ஒளித்து வைத்த இரண்டாம் பைத்தியத்தின் தலையை அரிவாளால் வெட்டி ஒளித்து வைத்தது. அதைப் பார்த்துக் கொண்டே இருந்த மூன்றாம் பைத்தியம் ''ஹி..ஹி..ஹி..'' என்று கையைக் கொட்டியபடி ''நேற்று நீ தொப்பியைத் தேடியதைப் போன்று இவன் நாளைக்கு எழுந்ததும் தலையைக் காணவில்லை என்று தேடப் போகிறானே ஹை... தேடப் போறானே'' என்று எகிறிக் குதித்தது. கதை எப்படி! இதுதான் இன்று உலகம் முழுவதும் நடக்கிறது.

ஆனால் இந்தப் பைத்தியக்காரர்களை, மதத் தலைவர்களை, மதகுருமார்களை, இறைவன் அருள் பரப்புகிறவர்கள் என்று கூட்டம் கூட்டமாகப் பைத்தியங்கள் கொண்டாடுவதுதான் ஆச்சரியமாக இருக்கிறது. மதங்களின் பெயரால் கடவுளின் பெயரால் பல லட்சம் மக்கள் பல காலமாகக் கொல்லப் பட்டிருக்கிறார்கள். கடவுளைக் காப்பாற்றுவதற்காகத் தாங்கள் போர் புரிவதாக மதகுருமார்கள் ஓயாமல் உளறுகிறார்கள். சர்வ வல்லமை பொருந்திய கடவுள் பலவீனமாக இந்த மதகுருமார் களை நம்பியா உயிர் வாழ்கிறார்? இவர்கள் காப்பாற்றாமல் போனால் பாவம் அந்தக் கடவுள் செத்துப் போய்விடுவாரா? கடவுளைக் காப்பாற்றுவோம் என்று இந்தப் பைத்தியங்கள் உளறுவதும் அதைக் கேட்டு பல பைத்தியங்கள் கைதட்டுவதும் வேடிக்கையாக இருக்கிறது. அதேசமயம் வேதனையாக இருக்கிறது.

சண்டைகள், மரணங்கள், மரணத்துக்கான பழிவாங்குதல்கள், பழிக்குப் பழி, என்று வெட்டிச் சாய்க்கும் இந்தக் கொடூரம் கடவுளின் பெயரால் நடக்கலாமா? இதற்கெல்லாம் மூலகாரணம் கடவுளுடன் தொடர்புடையவர்கள் தாங்கள் மட்டுமே என்று நம்பும் மூட, மூர்க்க மதகுருமார்களே. இவர்களை விட்டு மக்கள் விலகி நிற்க வேண்டும். ஆழ்ந்த படிப்பறிவும் உண்மை மெய்யுணர்வுமிக்க எந்த ஞானியும் இந்த மதகுருமார்களின் அராஜகச் செயலை ஆதரிக்க முடியாது. போலிக் குருமார்கள், தங்களை நிலை நாட்டிக் கொள்ள கடவுள் தங்களை நம்பி பூமியில் காலூன்ற விரும்புவது போல் காட்டிக் கொள்கிறார்கள்.

இந்துக்களின் கடவுளர்கள், இஸ்லாமியரின் கடவுள், கிறிஸ்தவரின் கடவுள் என்று நிஜமாகவே ஏழெட்டுக் கடவுள்கள் இருக்க முடியுமா? இந்த உலகம் உண்மையில் தங்களில் யாருக்கு உரியது என்று மனிதர்களைச் சண்டையிடச் செய்து அந்தக் கடவுள்களெல்லாம் நிலைநாட்ட விரும்புவார்களா? கடவுளைக் காப்பாற்ற மனிதர்கள் சாக வேண்டுமா? ஏன் இது குறித்துப் பலர் சிந்திப்பதே இல்லை.

உலகிலுள்ள எல்லா மதங்களும் சொல்லும் கடவுள் ஒன்றுதான் என்கிற அறிவே மூட மதகுருமார்களுக்கு வரவே வராதா? கடவுளின் பெயரால் மனிதனைக் கொம்பு சீவிவிடும் மதத் தலைவர்களைப் புறக்கணிக்கும் தெளிவு நம் மக்களுக்கு வரக் கூடாதா? உலகப் படைப்பின் தந்தை அம்மையப்பன் பிதா ஒன்றே என்பதை உணராமல் ஏன் சண்டைகள்?

ஒரு வீட்டு வாசலில் இரண்டு பேர் கூச்சல் போட்டு சட்டையைக் கிழித்தபடி அசிங்கமாகச் சண்டை போட்டுக் கொண்டிருந்தனர். பத்து வயதுச் சிறுவன் பரிதாபமாக இருவரையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தான். அந்த வழியாகச் வந்த பெரியவர் ஒருவர் அந்தப் பையனைப் பார்த்து ''அங்கே யார் சண்டை போடுபவர்கள்?'' என்றார். ''எனது அப்பா'' என்றான் சிறுவன். ''அதில் யார் உன்னுடைய அப்பா?'' என்றார் பெரியவர். ''அதுதான் சண்டைக்குக் காரணமே'' என்றான் சிறுவன். அப்பா பெயர் தெரியாத இந்தப் பையனுக்கும் சண்டையிடும் மதகுருமார்களுக்கும் வித்தியாசமே இல்லை. அப்பன் பெயர் தெரியாத அநாதையின் நிலையில் உலகத்தை நிறுத்திச் சண்டை போடும் மதகுருமார்களை, ''கடவுளே.. மன்னிக்காமல் தண்டிக்க வேண்டுகிறோம்'' ஓம் ஆமென் ஆமின்.. அட எல்லாம் ஒரேமாதிரி ஒலிக்கின்றன.



சுகி.சிவம்

# குடாநாட்டில் பால் உற்பத்தியை அதிகரிக்க உதவ யாழ்கோ

லக்ஸ்மன்



அபிவிருத், கிராம மட்டத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற நோக்குடன் யாழ்ப்பாணத்தில் 'பால் உற்பத்தியாளர் நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கம்' என்னும் பெயருடன் 1963 இல் ஆரம்பிக்கப்பட்டது. பால் சேகரித்து விற்றல் செயற்பாட்டை நடைமுறைப்படுத்தி வந்த இச்சங்கமானது குடாநாட்டில் மக்கள் பால் உற்பத்தியில் ஈடுபட முக்கிய ஒரு காரணியாக விளங்கியது. இது பின்னர் 1976 இல் 'நல்லூர் தொகுதி அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்' பதிவு எண் ஜே/1639. என பெயர் மாற்றம் செய்யப்பட்டு பதிவுசெய்யப்பட்டது.

அரசு இலங்கையில் உள்ள 24 மாவட்டங்களிலும், 1985 இல் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களை ஆரம்பித்த போது நல்லூர் தொகுதி அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் என்ற பெயர் யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டு அதன் நடவடிக்கைகளுக்கான எல்லை யாழ்.மாவட் டம் எனவும் வகுக்கப்பட்டது. இந்த மாற்றத்தின் பின்னர் யாழ்.கோ (YARLCO) என சுருக்கப் பெயரில் கூறப்பட்டது.

குடாநாட்டில் பால் உற்பத்தியை அதிகரித்து பால் பொருள்கள் தட்டுபாடற்ற வகையில் மக்களுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும் என்பதில் அபிவிருத்திச் சங்கம் முழுமையான கவனம் செலுத்தியது. சங்கத்தின் உறுப்பினர்களாக தற்போது 4 ஆயிரத்து 800 பேர் வரை இருந்த போதும், பால் வழங்குபவர்களின் தொகை 650 மட்டுமே எனத் தெரிகின்றது. பால் உற்பத்தியாளர்கள் மனம் வைத்து சங்கத்திற்கு தமது உற்பத்தியை முழுமையாக வழங்கினால் சங்கம் யாழ்.குடாநாட்டுடன் மட்டுமன்றி மேலும் தனது வர்த்தக நடவடிக்கை களை விஸ்தரிக்கக் கூடியதாக இருக்கும் என்பது அந்தச் சூழலில் உள்ளவர்களின் கருத்தாக இருக்கின்றது.

பால் உற்பத்திச் சங்கத்தின் செயற்பாடுகளில் தென்பகுதியில் இயங்கி வரும் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கால்நடை கிராமிய அமைச்சு செய்து கொடுக்கும் வசதிகள் வாய்ப்புகள் இங்கே வழங்கப்படுவதில்லை போலத் தெரிகின்றது. சௌமியமூர்த்தி தொண்டமான் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சராக இருந்த சமயம் இரண்டாயிரம் லீற்றர் பாலைச் சேகரித்து பழுதடையாது பாதுகாப்பாக வைக்கக்கூடியதாக குளிரூட்டிகளை (FARM TANK) வழங்கியுள்ளதாக கூறப்படுகின்றது. இந்தக் கொள்கலன்கள் கிடைத்ததால் கிளிநொச்சியில் இருந்து பாலைக் கொள்வனவு செய்து யாழ்.குடாநாட்டு மக்களுக்கும் தட்டுப்பாடின்றி பால் கிடைக்க சங்கம் உரிய ஒழுங்குகளை மேற்கொண்டது.

கால்நடை வளர்ப்போருக்கு குறிப்பாக பால் உற்பத்தியாளர்களின் தேவைகருதி கால்நடைத் தீவனம்தயாரிக்கும் தொழிலையும் முன்னெடுத்தது. யாழ்.செயலகத்தினால் மனித பாவனைக்கு உதவாத அரிசி, மா, பருப்பு வகைகளையும் பிறமாவட்டங்களிலும் கொழும்பிலும் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஏனைய மூலப் பொருள்களுடனும் தரமான கால் நடைத் தீவனம் தயாரிக்கப்பட்டு பால் உற்பத்தியாளர்களுக்கு மிகவும் குறைந்த விலையில் வழங்கியது. அத்துடன் இந்தத் தயாரிப்புகளை ஏனைய இடங்களிலும் சந்தைப்படுத்தி வந்துள்ளது. கால்நடை வளர்ப்பை ஊக்குவிக்கும் வகையில் கடன் திட்டம் ஒன்றையும் ஆரம்பித்து ஆரம்பகாலத்தில் ரூபா பத்தாயிரம் கடன் உதவியாக வழங்கி வந்தது. பால் வழங்குநருக்குரிய இக்கடன் தொகை தற்போது ரூபா 25 ஆயிரமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

**கால்நடை வளர்ப்பை ஊக்குவிக்கும் வகையில் கடன் திட்டம் ஒன்றையும் ஆரம்பித்து ஆரம்பகாலத்தில் ரூபா 10 ஆயிரம் கடன் உதவியாக வழங்கி வந்தது. பால் வழங்குநருக்குரிய இக்கடன் தொகை தற்போது ரூபா 25 ஆயிரமாக அதிகரிக்கப் பட்டுள்ளது.**

பால் உற்பத்தி அதிகரிப்பினால் மில்க்லொலி, யோக்கட் பட்டர், தயிர், நெய், சுவைப்பால் (ஆடை நீக்கிய பாலில் இருந்து தயாரிக்கப்படும் கறி சமைப்பதற்கான ஒரு தயாரிப்பு )மில்க் டொபி போன்றவை தயாரிக்கப்படுகின்றன. கிடைக்கும் ஓடர்களுக்கேற்ப சர்பத்தும் தயாரித்து வழங்கப் படுவதாக முகாமையாளர் திருமதி தயாளினி புஸ்பராஜா கூறினார். நோயாளர்களின் தேவை கருதி ஆடைநீக்கிய பாலும் விற்பனையில் உள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது. குடாநாட்டில் இந்தப் பொருள்களை முதலில் அறிமுகப்படுத்தியதும் யாழ்.கோவே(YARLCO)

சங்கத்தின்வளர்ச்சியில் யூ.என்.டி.பி., யூ.என்.எச்.சி.ஆர் அமெரிக்க நிறுவனமான லான்டோலெக், கூட்டுறவுத் திணைக்களம் என்பன உதவியுள்ளன. தேவைகளை ஆராய்ந்த யூ.என்.டி.பி.கோழித் தீவன குளிகை செய்யும் 2 இயந்திரங்களையும் பால் பதனிடும் இயந்திரங்களையும் வழங்கியுள்ளது.

அரச சார்பற்ற நிறுவனங்கள், கூட்டுறவுத் திணைக்களம், திட்டமிடல் அமைச்சின் மானிய உதவிகள் என நிதி, குளிச்சாதனப் பெட்டிகள், வாகன வசதிகள், பாத்திரங்கள் போன்றவை கிடைத்தாலும் சில முக்கிய தேவைகள் கிடைக்கப் பெறாமை யால் முக்கியமான திட்டங்களை நடைமுறைப்படுத்த வாய்ப்பில்லாமல் போகின்றது. போதிய பால் வளம் இருக்கும் சமயம் அவற்றில் இருந்து பால் பவுடர் தயாரிக்கக் கூடிய வசதி கள் இல்லை கொழும்பில் இருந்து பொருள்களைப் பாதுகாப்பாகக் கொண்டு வரக்கூடிய லொறி வசதிகள் தேவையாக உள்ளன.


கிளிநொச்சி மற்றும் பிற பகுதிகளுக்கு பால் மற்றும் பால் பொருள்களை எடுத்துச் செல்லக் கூடியதாக கூலர் வாகன வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது அமைச்சினதும் அதிகாரிகளினதும் பொறுப்பாகும். தற்போது நாளொன்றிற்கு 3 ஆயிரம் லீற்றர் பால் விற்பனையாகிறது. மாவட்டத்தின் 24 கிளைகளில் பால் கொள்வனவு விற்பனை என்பன இடம் பெறுகின்றன. மாதம் ஒன்றுக்கு ஒரு லட்சம் லீற்றருக்கு அதிகமாக பால் கிடைக்கின்றது.

தற்போது 35 நிரந்தர ஊழியர்களும் தற்காலிக ஊழியர்களாக முப்பது பேரும் ஒப்பந்த அடிப்படையில் 3 பேருமாக 68 பேர் பணியில் உள்ளனர். இயக்குநர் சபையில் கூட்டுறவு உதவி ஆணையாளரின் நியமனத்தில் மூவரும் தெரிவு செய்யப்பட்ட 6 பேருமாக 9 பேர் உள்ளனர். சங்கம் சொந்தக் கட்டடத்தில் இயங்குகின்றது. அதே போன்று கிளைகளுக்கும் சொந்த இடம் தேவையாகவுள்ளது. 24 கிளைகள் இருந்த போதும் பெரியளவிலான கொள்முதலாக உரும்பிராய், திருநெல்வேலி, இணுவில், சுன்னாகம் பகுதிகளிலேயே கூடுதலான பால் பெறப்படுகின்றது. சங்கம் பண்ணை ஒன்றும் நடத்தி வந்தது. தற்போது அது இல்லை. வயது முதிர்ந்த மாடுகள் என்பதால் பால் உற்பத்தி குறைவாகக் காணப்பட்டதுடன். சுகாதார மற்ற சூழல் தென்படுவதால் பொது சுகாதார பரிசோதகர்கள் பண்ணைத் தொழிலை நிறுத்துமாறும் தெரிவித்தனர். அத்துடன் பாராமரிப்புக்கென உரிய ஆளணிகளும் இல்லாததால் பண்ணையை தொடரக் கூடியதாக இல்லை.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலரிப்பால் மக்கள் அச்சம் ஒலுவில் மீனவர்கள் பாதிப்பு



ஒலுவில்,மே16

ஒலுவில் துறைமுகத்தை அண்மித்த கடற்கரை பகுதி கடந்த சில வாரங்களாக கடலரிப்புக்குள்ளாகி வரு கின்றமை பிரதேச மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

துறைமுகப் பிரதேசத்தை அண்மித்த பகுதி கடலரிப்புக்குள்ளாகி வந்தபோதும், கடந்த சில வாரங்களாக கடலரிப்பின் வேகம் மிக அசுரத்தனமாக உள்ளது என்று மக்கள் தெரிவிக்கின்றனர். இதனால், கடற்கரையை அண்மித்த மீனவர்களின் வாடிகள் மற்றும் சில வர்த்தக நிலையங்கள் அழிவடைந்துள்ளன.

கடலரிப்பின் காரணமாக, தற்போது கடற்கரை வீதி வரை கடல் உள்நுழைந்துள்ளது. இந்த வீதியும் சேதமடையும் பட்சத்தில் மக்கள் குடியிருப்புக்களுக்குள் கடல் நுழைந்து விடும் அச்சுறுத்தல் உள்ளதாக அப்பகுதியைச் சேர்ந்த மீனவர் ஒருவர் தெரிவித்தார். இதேவேளை துறைமுக வெளிச்ச வீட்டின் அடித்தளப் பகுதியும் கடலரிப்பால் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

ஒலுவில் துறைமுகத்தை அண்மித்த பகுதிகளில் ஏற்பட்டுவரும் கடல் அரிப்பைத் தடுப்பதற்காக துறைமுக நிர்வாகத்தினரால் பாறாங்கற்கள் கடலினுள்ளும், கரைப் பகுதியிலும் ஆங்காங்கே கொட்டப்பட்டு வருகின்ற நிலையில் வேறு பகுதிகளில் இவ்வாறு கடலரிப்பு ஏற்பட்டு ஏற்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# தோட்டத்தில் வேலை கேட்டு இளைஞர்கள் ஆர்ப்பாட்டம்

நுவரெலியா,மே16

நுவரெலியா ஹொலிப்பண்ட் தோட்டத்தில் வேலை வாய்ப்பு அற்ற 30 இற்கும் மேற்பட்ட இளைஞர்கள் தோட்ட அலுவலகத்துக்கு முன்பாக நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட இளைஞர்கள் தெரிவித்ததாவது:-

ஹொலிப்பண்ட் தோட்டத்தில் வசித்துவரும் சுமார் 100 இற்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளை பெற்றுக் கொடுப்பதில் எந்தப் பிரிவினரும் அக்கறை காட்டவில்லை.

இந்தத் தோட்டத்தில் வேலைவாய்ப்பு அற்ற நிலையில் உள்ள இளைஞர்களில் சுமார் 30 பேருக்கு ஒப்பந்த அடிப்படையில் தேயிலைக் கன்றுகள் நடும் வேலையை கடந்த மாதம் வழங்கியிருந்தது. தோட்ட முகாமைத்துவம். இந்த வேலை முடிவடைந்ததும் தோட்டத்தில் நிரந்தர வேலை வழங்கப்படும் என்றும் உத்தரவாதம் அளித்திருந்தது.

இந்தநிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை வேலைக்குச் செல்ல ஆயத்தமான இளைஞர்களிடம் வழங்கப்பட்ட உபகரணங்களை மீளப்பெற்றுக்கொண்டதுடன், இனிமேல் வேலை இல்லை எனவும் தோட்ட முகாமைத்துவம் அறிவித்துள்ளது. அதனாலேயே நாம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோம்.- என்றனர். (ச)

# பத்மநாபா அணியின் தீர்மானத்தை வரவேற்கிறார் சிவசக்தி ஆனந்தன்

கிழக்கு மாகாணசபை உறுப்பினரும் எமது கட்சியின் முன்னாள் உறுப்பினருமான இரா. துரைரெத்தினம் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எவ். பத்மநாபா அணி மீண்டும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியுடன் இணைந்து செயற்பட முன்வந்ததையிட்டு எமது மகிழ்ச்சியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

- இவ்வாறு சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையில் இயங்கும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் அரசியல்பீட உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ந.சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில்அவர்மேலும் தெரிவித்திருப்பதாவது:-

"பிரதேசங்கள் கடந்து தமிழ் மக்கள் ஒன்றாக இணைந்து ஒரே முனையில் நின்று செயற்படுவதன் மூலம் மாத்திரம்தான் தமிழ் மக்களுக்கான விமோசனத்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்று துரைரெத்தினம் தெரிவித்திருப்பதானது வரவேற்கப்பட வேண்டிய விடயம்.

வடக்கு, கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேற்கொள்ளும் சகல ஆக்கபூர்வமான நடவடிக்கைகளிலும் அவர் திறம்பட கடமையாற்றுவார் என்று எதிர்பார்க்கிறோம்'' - என்றார்.

மட்டு. சந்தணமடு ஆற்றில் பணிபுரியும்

# மண்அகழ்வு தொழிலாளர்கள் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு


சந்தணமடு ஆற்றில் மண் அகழ்வு தொழிலை மேற்கொள்வதன் மூலம் 1500 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பல பிரச்சினைகளை எதிர் நோக்கி வந்துள்ளனர்

மட்டக்களப்பு,மே16

சந்தணமடு ஆற்றில் மண் அகழ்வு தொழிலாளர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைக்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தனின் முயற்சியால் நிரந்தரத் தீர்வு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு, சந்தணமடு ஆற்றில் மண் அகழ்வு தொழிலை மேற்கொள்வதன் மூலம் 1500 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பல பிரச்சினைகளை எதிர் நோக்கி வந்துள்ளனர். இவர்கள் மண் அகழ்வில் ஈடுபடுவதற்கு பல கட்டுப்பாடுகளும் தடைகளும் விதிக்கப்பட்டு வந்துள்ளன. இவர்கள் தமது பிரச்சினையை கிழக்கு மாகாண முதலமைச் சரின் கவனத்துக்குக் கொண்டு வந்ததை அடுத்து அவர் குறித்த தொழிலாளர்களைச் சந்தித்து அவர் களின் பிரச்சினைகள் குறித்து கேட்டறிந்துள்ளார்.

இந்தப் பிரச்சினை தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனத்துக்கும் கொண்டு சென்றுள்ளார். இந்த நிலையில் உயர் அதிகாரிகள் பலர் நேற்று முன்தினம் திங்கட்கிழ்மை இந்தப் பிரதேசத்துக்குச் சென்று தொழிலாளர்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து எந்தவித கட்டுப்பாடுகளும் இன்றி மண் அகழ்வில் ஈடுபடமுடியும் என்ற தீர்வை வழங்கியுள்ளனர். (ச)



750 ஏக்கருக்கு நீர் பாய்ச்சும் அம்பாறை மாவட்ட அக்கரைப்பற்று ஆனைவிழுந்தான் அணைக்கட்டு பல வருடங்களாக எவ்வித புனரமைப்பும் இன்றி உடைந்து காணப்படுகிறது. (31)

# வாகனங்களை திருடி விற்பனை செய்தோர் கைது

நுவரெலியா,மே16

வாகனங்களைத் திருடி பதிவு இலக்கங்களை மாற்றி விற்பனை செய்து வந்த கும்பலொன்றின் இரண்டு சந்தேகநபர்களை மத்திய மாகாண பிரதி பொலிஸ் மா அதிபர் அலுவலகம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கைது செய்துள்ளது.

இந்த நபர்கள் திருடி விற்பனை செய்த மூன்று வாகனங்களையும் பொலிஸார் மீட்டுள்ளனர். குறித்த சந்தேக நபர்கள் கம்பளை மற்றும் பொத்துஹர ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மத்திய மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் அலுவலகம் மேற்கொண்டு வருகின்றது. (ச)

# யானையில் சவாரி; தவறி விழுந்து பிரான்ஸ் வாசி காயம்

ஹபரணை,மே16

தம்புள்ள, ஹபரணைப் பிரதேசத்தில் யானையின் மீது சவாரி செய்ய முயற்சித்த பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த சுற்றுலாப் பயணி ஒருவர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலை யானை மேலிருந்து விழுந்ததில் காயங்களுக்கு இலக்கானார். இவர் தற்போது தம்புள்ள வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யானைகள் மீது சவாரி செய்யும் நிகழ்வு ஹபரணைப் பிரதேசத்தில் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்துள்ள அதேசமயம் சுமார் ஒன்றரை கிலோ மீற்றர் சவாரிக்கு 2500 ரூபா அற விடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# மலையக தமிழ் அரசியலை பலப்படுத்த சிவில் சமூகத்தின் பங்களிப்பு அவசியம்

தொ.தே.சங்கத்தின் தேசிய அமைப்பாளர் தெரிவிப்பு

நுவரெலியா,மே16

மலையகத் தமிழர்களின் இருப்பை உறுதி செய்து கொள்வதற்கு மலையகத்தில் சிவில் சமூகத்தின் பங்களிப்பு முக்கியமானது என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தேசிய அமைப்பாளர் எஸ்.ஸ்ரீதரன் தெரிவித்தார்.

மனித உரிமைகள் மற்றும் சமூக நீதிக்கான சிவில் சமூக ஒன்றியத்தின் ஏற்பாட்டில் ஹற்றன் சீடாவள நிலையத்தில் நடைபெற்ற செயலமர்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மலையகத்தில் தொழிற்சங்க கட்டமைப்புக்குள் தொழிலாளர்கள் ஒன்றிணைந்து செயற்படுவதன் காரணத்தினாலேயே உள்ளூராட்சி சபைகளிலும், மாகாணசபைகளிலும், நாடாளுமன்றத்திலும் மலையகத் தமிழ் மக்கள் சார்ந்த அரசியல் பிரதிநிதித்துவம் ஓரளவு தக்கவைக்கப்பட்டு வருகின்றது. எனினும், இந்த அரசியல் பிரதிநிதித்துவம் கடந்த காலங்களைவிட குறைந்து வருகின்ற போக்கானது மலையகத்தின் அரசியல் இருப்பு கேள்விக்குறியாகியுள்ளது. அண்மைக்கால தேர்தல்களில் மலையகத்தில் தமிழ் மக்கள் சார்ந்த சிவில் சமூகத்தின் அக்கறையின்மை காரணமாக கண்டி, பதுளை, இரத்தினபுரி போன்ற மாவட்டங்களில் மலையகத்தமிழ் மக்களின் நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் மற்றும் மாகாணசபை பிரதிநிதித்துவத்தில் இழப்பு ஏற்பட்டுள்ளதை அவதானிக் கக் கூடியதாகவுள்ளது.

தொழிற்சங்க கட்டமைப்பு உள்ள நுவரெலியா மாவட்டத்தில் தமிழ் அரசியல் பிரதிநிதித்துவம் உறுதி செய்யப்பட்டு வருகின்றது. எனவே, தொழிற்சங்க கட்டமைப்பு இல்லாத மாவட்டங்களில் சிவில் சமூகத்தின் பங்களிப்பு மூலமாகவே மலையகத் தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை தக்கவைத்துக் கொள்ள வேண்டியதாகவுள்ளது.

மொழியுரிமை, அரசதுறை நியமனங்கள், மலையகத் தமிழ் மக்கள் நலன் சார்ந்த எல்லை மீள் நிர்ணயம், புதிய கிராம சேவகர் பிரிவுகள், புதிய பிரதேச செயலகப்பிரிவுகள், வாக்காளர் இடாப்பு பதிவு தொடர்பாக அதீத அக்கறை, தேர்தல் கால வியூகங்கள், சிவில் சமூகத்தில் பலப்படுத்தல் போன்றன மூலமாகவே மலையகத்தமிழ் மக்கள் சார்ந்த அரசியல் பிரதிநிதித்துவத்தைத் தக்கவைத்துக் கொள்ள முடியும். அத்துடன் எமது சமூகம் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை அதிகார தரப்பிடம் முன்கொண்டு சென்று தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும்- என்றார். (ச)

# கட்டாக்காலி மாடுகள் பொலிஸாரால் பிடிப்பு



மட்டக்களப்பு - வந்தாறுமூலைப் பகுதிகளில் வீதிகளில் அலைந்து திரிந்து மக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தி வந்த 30 கட்டாக்காலி மாடுகளை ஏறாவூர் பொலிஸார் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பிடித்துள்ளனர்.

வீதிகளில் திரியும் மாடுகளால் பாதசாரிகளும் வாகன ஓட்டுநர்களும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருவதாக பொலிஸாருக்கு தெரிவித்த முறைப்பாட்டை அடுத்து இந்தக் கட்டாக்காலி மாடுகள் பிடிக்கப்பட்டுள்ளன.

ஏறாவூர் பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் ஜீ.பி.எச்.எச். சனத்குமார பண்டாரவின் உத்தரவின் கீழ் பொலிஸ் பரிசோதகர் ஏ.கே. மோகோட்டின் [illegible] குழுவினரும் ஏறாவூர்ப்பற்று பிரதேச சபை [illegible] இணைந்து இந்தக் கட்டாக்காலி மாடுகளைப் பிடிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். நீதிமன்ற உத்தரவின் பேரில் ஒரு கட்டாக்காலிக்கு 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

**மேடம்:** கடமைகள், பொறுப்புகள் கூடும். பணிகளை விரைவாக முடிக்க வேண்டிய நிர்ப்பந்தங்கள் ஏற்படும். பற்றாக்குறையான வரவுகள் இருந்தபோதும், சாதுரியமாகச் சமாளிப்பீர்கள். ஒரு சில விடயங்களுக்காக சிலரின் நட்புகளை வலுப்படுத்திக் கொள்வீர்கள். அலுவலகப் பணிகளில், சக ஊழியர்களின் குறைகளைப் பெரிதுபடுத்திக் கொள்ளாதீர்கள்.

**இடபம்:** ஒவ்வொரு காரியங்களிலும் கூடுதலான முயற்சி மேற்கொள்வீர்கள். தொழில் தொடர்பான நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துவீர்கள். உடல் நிலையில், கவனம் தேவை. குடும்ப குழப்பங்களுக்குத் தீர்வு கிடைக்கும். உடன்பிறப்புகளின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

**மிதுனம்:** எதிர்பாராத தொந்தரவுகள் ஏற்பட்டு விலகும். சகோதர வகையில், சிறு சிறு சச்சரவுகள் ஏற்பட்டு விலகும். அலுவலகப் பணிகளில், சில மாற்றங்களை எதிர்கொள்வீர்கள். தாயாரின் ஆரோக்கிய குறைவுக்காக, மருத்துவ ஆலோசனை மேற்கொள்வீர்கள். தொழிலில், புதிய தொடர்புகள் ஏற்படும்.

**கடகம்:** மன நிலையும், சூழ்நிலையும் ஒத்துழைக்கும். காரியங்களை விரைவாகச் செய்து முடிப்பீர்கள். உறவினர் ஒருவரின் தொடர்பு தேவையற்ற மனச் சஞ்சலத்தை ஏற்படுத்தும். உத்தியோக ரீதியாக எதிர்பார்க்கும் தகவல்கள் சற்றுத் தாமதமாகும். குழந்தைகளால் செலவுகள் கூடும்.

**சிங்கம்:** நீங்கள் எடுக்கும் ஒவ்வொரு முயற்சிகளுக்கும் தகுந்த வெற்றி கிடைக்கும். மன நிலையில் உற்சாகத்தை கூடுதலாக்கும். வரவுகள் சந்தோஷம் தந்த போதும் செலவுகள் சிந்திக்க வைக்கும். குடும்பத்தில் கோபதாபங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். புதிய தொழில் முயற்சிகளில் கூடுதல் கவனம் இருக்கட்டும்.

**கன்னி:** சில காரணங்களால் மன அமைதி குறையும். எந்த ஒரு விடயத்தையும், மீண்டும் மீண்டும் யோசிப்பதால் தீர்வு கிடைக்காது. காலங்கள் வரும்வரை பொறுத்திருங்கள். இல்லறத் துணையின் யோசனைகள், பெருமை கொள்ளச் செய்யும். தொழில் மற்றும் வியாபாரத்தில் சீரற்ற போக்கு நிலவும். பிறருக்காக மேற்கொள்ளும் பணிகளில் கவனம் தேவை.

**நாளை**

வைகாசி 04 வியாழக்கிழமை 17.05.2012
திதி: துவாதசி மு.இ 12.00 வரை
நட்சத்திரம்: ரேவதி பி.இ 05.31 வரை
சுபநேரம்: 07.23- 08.53 வரை
ராகு காலம்: 01.23- 02.53 வரை

**துலாம்:** எதிலும் வெறுப்பு சற்று அதிகமாகவே காணப்படும். மன நிலையை ஒரு நிலைப்படுத்திக் கொண்டீர்களேயானால், குழப்பங்களுக்குத் தீர்வு காண்பீர்கள். நட்பு மற்றும் உறவு வகையில் ஆறுதலான வார்த்தைகள் கிடைக்கப் பெறுவீர்கள். பணிநிலையில், நெருக்கடிகளை சாதுரியமாகச் சமாளிப்பீர்கள்.

**விருச்சிகம்:** மன நிலையில் நிலவும் மாற்றமான சிந்தனை அமைதியை ஏற்படுத்தும். சில காரியங்களை சிந்தித்து செயல்படவும் வழிவகுக்கும். வெளிவட்டாரப் பழக்க வழக்கங்களில், பெரியளவிலான பயனை எதிர்பார்க்க முடியாது. வாகனச் செலவுகள் ஏற்படும். சிறு பயணம் ஒன்று ஏற்படும்.

**தனுசு:** புதிய முயற்சி ஒன்றுக்காக அலைச்சல் இருக்கும். தேவைப்பட்ட நேரத்தில், தேவைப்பட்ட உதவிகள் கிடைக்கும். நண்பர் ஒருவரின் சந்திப்பு, சில வகையில் பயனுள்ள தகவல்கள் கிடைக்கப்பெறும். பெற்றோருக்காக மருத்துவச்செலவு ஏற்படும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும்.

**மகரம்:** நீங்கள் எதிர்நோக்கி இருக்கும் பிரச்சினைகளுக்கு, உங்களின் புத்திசாலித்தனத்தால் எளிதான தீர்வு காண்பீர்கள். தொழில் வகையில், திடீர் மாற்றங்களை ஏற்படுத்துவீர்கள். நட்புகளின் உதவிகள் மிகுந்த பயன் தரும். புதிய வேலைவாய்ப்புக்கான முயற்சிகள் வெற்றி தரும். சகோதர வகையில், ஏற்பட்ட சச்சரவுகள் தீர்வு ஏற்படும்.

**கும்பம்:** எண்ணங்கள் வெற்றிபெறும், எதிர்பார்த்த வரவுகள் வரும். குடும்பத்தில், கோப தாபங்களுக்கு இடையில் மகிழ்ச்சியும் நிலவும். அலுவலகப் பணியில் தடங்கல்கள், தாமதங்கள் ஏற்பட்டபோதும் விடா முயற்சியோடு செய்து முடிப்பீர்கள். சொத்து சம்பந்தப்பட்ட வகையில் ஆதாயம் கூடும்.

**மீனம்:** சிலரின் பாராட்டு கிடைக்கப்பெறுவீர்கள். மன நிலையில் உற்சாகம் ஏற்பட்ட போதும், மனதில் பயம் இருக்கத்தான் செய்யும். குடும்ப நலனில் அக்கறை கூடும். புதிய அறிமுகங்கள் ஓரளவுக்கு பயன் தரும். தொழிலில், நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதற்காக முயற்சிகள் மேற்கொள்வீர்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | | | 6 | 9 | | |
| 2 | | | 3 | 4 | | 1 | 5 | |
| 6 | | 4 | | 5 | 7 | | 3 | |
| | | | 8 | | 4 | 6 | | 3 |
| | 8 | | | | | | 1 | |
| 4 | | 2 | 9 | | 1 | | | |
| | 2 | | 6 | 3 | | 7 | | 8 |
| | 4 | 3 | | 9 | 8 | | | 1 |
| | | 7 | 4 | | | 3 | | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 6 | 1 | 9 | 8 | 3 | 4 | 5 | 7 |
| 9 | 8 | 3 | 7 | 5 | 4 | 2 | 6 | 1 |
| 7 | 5 | 4 | 1 | 6 | 2 | 9 | 3 | 8 |
| 1 | 7 | 8 | 2 | 3 | 9 | 6 | 4 | 5 |
| 3 | 4 | 9 | 6 | 7 | 5 | 8 | 1 | 2 |
| 6 | 2 | 5 | 8 | 4 | 1 | 3 | 7 | 9 |
| 8 | 3 | 7 | 5 | 2 | 6 | 1 | 9 | 4 |
| 4 | 1 | 2 | 3 | 9 | 7 | 5 | 8 | 6 |
| 5 | 9 | 6 | 4 | 1 | 8 | 7 | 2 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தட்வைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.





Let's Experience and Promote
Your Professional Skills through English
A skills integrated, learner centered participatory English Course for Adults
Classes will start on 19.05.2012 Saturday at 10.30 am



GATEWAY CfiCT
ICDL International Computer Driving Licence
Just 8,500/= ONLY
e - Citizen
Just 3,500/= ONLY
Gateway – The leading ICDL and e-Citizen trainer in South Asia
Available @ Jaffna, Nelliady & Chavakacheri Branches

Ps Photoshop CS5
A Job oriented Course for Job Seekers



Classes will start on 19.05.2012 Saturday at 03.30 pm
For more details :
Gateway Language & ICT Centre
347, Kasthuriyar Road, Jaffna
Phone : 021 567 5555 Fax : 021 222 7967
E - mail : gatewayjfn@sltnet.lk
Branches :
01, New Market Building, Chavakacheri.
Phone : 0215 567 0266 / 021 227 0323
Pointpedro Road, Nelliady (Near HNB).
Phone : 0215 567 7606 / 021 226 2395






திக்கம் அல்வாய் வடமேற்கைச் சேர்ந்த
திரு.திருமதி பரராஜசேகரம் தம்பதிகளின்
புதல்வன் சுரேந்திரன்
அவர்களும்
புதுவளவு இடைக்காட்டைச் சேர்ந்த
திரு.திருமதி குகதாசன் நிர்மலா தம்பதிகளின்
புதல்வி விநோதினி
அவர்களும் 16.05.2012 இன்று ஆவரங்கால் சிவசக்தி மண்டபத்தில்
திருமண பந்தத்தில் இணைவதையிட்டு வாழ்த்துகின்றோம்..
வாழ்த்துவோர்
திரு. வன்னிமரம் அரவிந்தன்
B.A.(Hon) 2nd Upper
POLITICAL SCIENCE SPECIAL
M.A. (R) Pub.Ad.
திருமதி அரவிந்தன் சமீரா
திரு. இரா. அகிலன்
திருமதி அ. நிஷல்யா
மகள் அ. அபிக்குட்டி.
(6,7,10)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய ஆசிரியர்களுக்கு இலங்கையில் வேலை

## அரசின் நடவடிக்கைக்கு கடும் எதிர்ப்பு

கொழும்பு,மே16

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆசிரியர்களை அழைத்துவர இலங்கை அரசு எடுத்துள்ள தீர்மானத்தை ஒன்றிணைந்த வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் கண்டித்துள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு உள்ளிட்ட நாட்டின் ஏனைய பகுதிகளில் தமிழ் பட்டதாரிகள் வேலையற்று இருக்கும் நிலையில் இந்தியாவில் இருந்து ஆசிரியர்கள் வரவழைக்கப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று அந்த சங்கத்தின் ஏற்பாட்டாளர் தம்பிக்க முனசிங்க தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு மற்றும் கிழக்கு உள்ளிட்ட நாட்டின் ஏனைய பகுதிகளில் தமிழ்ப் பட்டதாரிகள் வேலையற்று இருக்கும் நிலையில் இந்தியாவில் இருந்து ஆசிரியர்களை அழைத்துவந்து வேலைவாய்ப்புக் கொடுக்க தற்போதைய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.3000 ஆசிரியர்கள் இந்தியாவில் இருந்து இரகசியமாக அழைத்து வரப்படவுள்ளனர். யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, நுவரெலியா உள்ளிட்ட மாவட்டங்களில் தற்போது 7000 இற்கும் மேற்பட்ட பட்டதாரிகள் வேலையற்று இருக்கும் நிலையில் அரசின் இந்தச் செயற்பாடு ஏற்கத்தக்கதல்ல. அண்மையில் வழங்கப்பட்ட பட்டதாரிகளுக்கான நியமனத்தில் தமிழ்ப் பட்டதாரிகளுக்கு அநியாயம் இழைக்கப்பட்டுள்ளது. கிழக்கில் எவருக்கும் நியமனம் வழங்கப்படாத நிலையில் யாழ்ப்பாணத்திலும் அப்படியே நிகழ்வது கவலையளிக்கிறது. எனவே இந்தியாவில் இருந்து ஆசிரியர்கள் வரவழைக்கப்படுவதை உடன் நிறுத்தி உள்நாட்டில் உள்ள தமிழ்ப் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்க வேண்டும்.- என்றார். (ச)




சி.ஏ.சந்திரபிரேமவினால் எழுதப்பட்ட "கோத்தாவின் போர்" என்ற நூல் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை கொழும்பு வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

# சிறுவர் மீது பெற்றோர் கவனம் செலுத்தவும்

## வடக்கிலுள்ளோருக்கு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திமதி

கொழும்பு,மே16

வடக்கு, கிழக்கு பகுதிகளில் சிறுவர்கள் மர்மப் பொருள்களை கையாள்வதைத் தடுப்பது தொடர்பாக பெற்றோர் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அண்மைக் காலமாக வடக்கு, கிழக்கு பகுதிகளில் சிறுவர்கள் நிலத்திலிருந்து கண்டெடுக்கும் பொருள்களைக் கையாள முற்பட்டபோது இடம்பெற்ற வெடிச் சம்பவங்களில் உயிரிழப்புக்களும் ஏற்பட்டுள்ளன.

இத்தகைய சம்பவங்கள் சாவகச்சேரி, வவுனியா, புளியங்குளம், அம்பாறை போன்ற பிரதேசங்களில் அதிகம் இடம்பெற்றுள்ளன.

போரால் அதிகம் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த பெற்றோர் இந்த விடயம் தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண் டும்.

**இரும்புப் பொருள்கள் மற்றும் மர்மப் பொருள்களை கையாள வேண்டாம் என சிறுவர்களை அறிவுறுத்த வேண்டியது பெற்றோரின் கடமை.**



சிறுவர்கள் விளையாடும் இடங்களை சுத்தமாக வைத்திருப்பதுடன் நிலத்திலிருந்து எடுக்கப்படுகின்ற இரும்புப் பொருள்கள் மற்றும் மர்மப் பொருள்களை கையாள வேண்டாம் என சிறுவர்களை அறிவுறுத்த வேண்டியது பெற்றோரின் கடமை.

அவ்வாறான பொருள்கள் கிடைத்தால் அதற்கு சேதம் விளைவிக்க முற்படாது, பெரியவர்களுக்கு தெரியப்படுத்துமாறு சிறுவர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட வேண்டும்.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு அறிக்கையில் பொலிஸார் தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை செயற்படுத்துவது குறித்து விசாரணையில் கவனம் செலுத்தப்படும். என்றார். (ச)

# விடைத்தாள் திருத்தும் பணியை பகிஷ்கரிக்க ஆசிரியர் தீர்மானம்

கொழும்பு,மே16

ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களுக்கு புள்ளியிடுதல் தொடர்பான பணிகளை பகிஷ்கரிக்கப் போவதாக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை தெரிவித்தனர்.

தமது பிள்ளைகளின் பாடசாலை அனுமதி தொடர்பாக கல்வி அமைச்சின் செயலாளரை சந்திக்கச் சென்ற பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் வெளியேற்றப்பட்ட சம்பவம் தொடர்பில் பொலிஸ் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள பின்னணியிலேயே இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் குறித்து தனக்கு அக்கறை இல்லை என்று கல்வி அமைச்சின் செயலாளர் அண்மையில் தெரிவித்தார்.

எனவே நாமும் பாடசாலை விடயங்களிலிருந்து விலகத் தீர்மானித் திருக்கின்றோம் என்று பல்கலைக்கழக ஆசிரிய சங்கங்களின் சம்மேளனத்தின் தலைவர் நிமல் ரஞ்சித் தேசசிறி தெரிவித்தார்.

கலைத்திட்டம், புள்ளியிடல் மற்றும் மேற்பார்வை ஆகிய பாடசாலையுடன் தொடர்புடைய வேலைகளில் நாம் ஈடுபடமாட்டோம் என்று அவர்தெரிவித்தார். (ச)

## இலங்கையில் இருந்து சோளம் ஏற்றுமதி

கொழும்பு,மே16

இலங்கையிலிருந்து உலக நாடுகளுக்கு முதல் தடவையாக சோளம் ஏற்றுமதி செய்யப்படவுள்ளது.

முதல் கட்டமாக ஆயிரம் மெற்றிக் தொன் சோளம் எதிர்வரும் 22 ஆம் திகதி ஏற்றுமதி செய்யப்படவுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தலைமையில் இதன் உத்தியோகபூர்வ நிகழ்வு நடைபெறவுள்ளது.

வருடத்துக்கு 10 ஆயிரம் மெற்றிக் தொன் சோளத்தை ஏற்றுமதி செய்ய இணக்கம் காணப்பட்டுள்ளது. (ச)

# பிலிப்பைன்ஸுக்கு நேரடி விமான சேவை

கொழும்பு,மே16

இலங்கையிலிருந்து பிலிப்பைன்ஸுக்கு நேரடி விமான சேவை ஆரம்பிக்கப்படும் என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இலங்கைக்கு வந்துள்ள பலிப்பைன்ஸ் நாட்டின் வெளிவிவகாரப் பிரதிச் செயலாளர் பெசிலியோ அமைச்சர் பசில் ராஜபக்ஷவை நேற்று முன்தினம் திங்கட்கிழமை சந்தித்தார். இந்தச் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

### பஸில் தகவல்

கொழும்பில் பிலிப்பைன்ஸ் நாட்டின் வதிவிட தூதரக அலுவலகம் விரைவில் அமைக்கப்படும் என்று பிலிப்பைன்ஸ் நாட்டின் வெளிவிவகாரப் பிரதிச் செயலாளர் எர்லிந்தா எப் பெசிலியோ தெரிவித்தார்.

ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்தின் ஊடாக வெகு விரைவில் பிலிப்பைன்ஸுக்கு நேரடி விமான சேவை ஆரம்பிக்கப்படும். இதனூடாக இரு நாடுகளுக்கு மிடையிலான பொருளாதாரத் தொடர்பாடல் மேம்பாடு அடையும் என்று அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார். (ச)

## பொலிஸ் முறைப்பாட்டு மூலப் பிரதிகளை பெற்றுக்கொள்ளலாம்

பொலிஸ் முறைப்பாட்டின் மூலப் பிரதிகளை பெற்றுக்கொள்ளும் வசதியை உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் பொலிஸ் திணைக்களம் அறிமுகப் படுத்தியுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்தார். தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், மோட்டார் வாகனத்துடன் தொடர்பான அனுமதிப்பத்திரம்.

விபத்துக்கள் குறித்த முறைப்பாட்டு பிரதிகள் என்பன தொடர்பான முறைப்பாட்டுப் பிரதிகளை இவ்வாறு பெற்றுக் கொள்ளலாம் என்று அவர் கூறினார். இந்தப் பிரதிகளைப் பெறுவதற்கு 25 ரூபா கட்டணம் அறவிடப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# லிங்கத்தைப் புரட்டிப் புதையல் தோண்டியமை இந்து மதத்தின் தொன்மையை அழித்துள்ளது

## பொலன்னறுவைச் சம்பவம் குறித்து யோகேஸ்வரன் எம்.பி.

கொழும்பு,மே16

இந்து சமயத்தின் தொன்மையை அழித்து பௌத்த ஆதிக்கத்தை ஏற்படுத்துவதாக பொலன்னறுவை புராதன சிவன் கோயில் கருவறை சிதைக்கப்பட்டு புதையல் தோண்டிய சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் இந்துக்களின் பூர்வீகம் அழிக்கப்படும் செயற்பாடும், பௌத்த விகாரைகள் இந்து ஆலயத்துக்கு அண்மையில் திட்டமிட்டு அமைக்கப்படும் செயற்பாடும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இவ்வாறான சம்பவங்கள் இந்துக்கள் அனைவரையும் வேதனைப்படுத்தியுள்ளதுடன், மதரீதியாக சிறுபான்மை மக்களுக்கு எதிரான பயங்கரவாத நடவடிக்கையாகவே கருதவேண்டியுள்ளது. பொலன்னறுவை சிவன் ஆலயம் இந்துக்களின் பூர்வீகச் சொத்துக்களில் ஒன்றாகும்.

இந்த ஆலயத்தின் அனைத்து சூழலும் சிங்கள மக்களின் வாழ்விடமாகியுள்ளது. இவ்வாறான ஒரு சூழலில் ஆலயத்தின் சிவலிங்கத்தை அகற்ற எடுத்த முயற்சியானது. ஒரு திட்டமிட்ட செயற்பாடாகும்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்களை விசாரணை செய்வது அவசியமானது.

வடக்கு, கிழக்கு பகுதிகளில் இந்துக் கோயில்கள் உடைக்கப்பட்டு பௌத்த விகாரை அமைப்பது குறித்தும், இந்துக்களின் பூர்வீகச் சின்னங்களை அழிப்பது தொடர்பிலும் இதுவரை அரசு விசாரணைகளை மேற் கொள்ளாதது இந்துக்களுக்கு பெரும் சந்தேகத்தை தோற்றுவித்துள்ளது.

எனவே இலங்கையில் இந்துக்களின் பூர்வீக வணக்கத்தலங்கள், பூர்வீகச் சின்னங் கள் அழிக்கப்படுவதை தடுக்கும் வகையில் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்தச் சம்பவங்களுக்கு



நடவடிக்கை எடுக்காது விட்டால் இந்துக்களின் மதஉரிமை பாதுகாப்பை முன்னிட்டு சர்வதேச உதவியை நாடுவது தவிர்க்க முடியாது- என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Van For Sale

Toyata CR 41 NOAH (HIGH Roof) வான் விற்பனைக்கு உண்டு. Np Gp - xxxx
தொடர்பு: 077 3575 453

## காணி விற்பனைக்கு

மன்னார் கீரி ஐஸ் பக்ரரிக்கு அருகில் 125 பேர்ச் காணி விற்பனைக்கு உண்டு. கடைகளும் கட்டலாம்
தொடர்புக்கு: 0755732271

## கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2 Kg மேல் வளர்ச்சியடையக்கூடிய நம்பர்-1 BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் இன்று 16.05.2012 விநியோகிக்கப்படும். விலை - 80/=

றாஜீவ், நாவலி வீதி,
ஆனைக் கோட்டை.

## தவறிவிட்டது

சரசாலை வடக்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் சுதாகரன் தே.அ.அட்டை (832833363V) சாரதி அனுமதிப்பத்திரம் என்பன சரசாலைக்கும், சாவகச்சேரிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சாவகச்சேரி குறிஞ்சி புடைவைக் கடையில் ஒப்படைக்கவும்.

சன்மானம் வழங்கப்படும்
தொ.பே.இல. 077 3620789

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்யப்பட்டு விற்பனையாகின்றது. சுத்தம் செய்யப்பட்ட புறொயிலர் இறைச்சி ரூ.450 மட்டுமே. தினமும் காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணி திறக்கப்படும்.

நல்லூர் பாம் சென்ரர்,
#. 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்,யாழ்ப்பாணம்.

## வைத்திய ஆலோசனை

✓ஆண்மைக்குறைவு ✓வீரியம் அதிகரித்தல்
✓பாலியல் குறைபாடு ✓குழந்தையின்மை
✓ஆண், பெண் உடல் பருமன் குறைத்தல்
✓கருமை நிறம் போக்க ✓உடல் வலு அதிகரித்தல்

இலங்கை - இந்திய தனியார் வைத்தியசாலைக்கு செல்ல ஆலோசனைக்கு அழையுங்கள்.

0750252141

## நாவன்மைப் போட்டி

சரசாலை நுணாவில் சிதம்பர விநாயகர் ஆலய பரிபாலான சபையினரும் சாரசாலை இந்து இளைஞர் மன்றத்தினரும் இணைந்து பாலர் வகுப்பு தொடக்கம் தரம் 13 வரையான மாணவர்களுக்கிடையிலான சைவ அறிவு நாவன்மைப் போட்டிகளை நடாத்தவுள்ளனர்.

எதிர்வரும் 20 ஆம் திகதி முற்பகல் 9 மணி தொடக்கம் ஆலய முன்றலில் போட்டிகள் நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(வ-9)

## கோழிக்குஞ்சு விற்பனை

தடுப்பு மருந்து போடப்பட்ட 'A' தரமான பிறிமா புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் மற்றும் சிவப்பு சேவல் குஞ்சுகள் ஒவ்வொரு வெள்ளிக் கிழமைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். முன் கூட்டியே பதிவு செய்யவும்

தொடர்பு:

நல்லூர் பாம் சென்ரர்
#19, முருகேசர் ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம்
தொ.பே: 021 2226944

நல்லூர் பாம் சென்ரர்
கனகபுரம் வீதி,
கிளிநொச்சி
தொ.பே: 077 6225944

சுட்டி பாம் சென்ரர்
வட்டுக்கோட்டை
தொ.பே: 077 8996085

## Annual General Meeting

The Council Members have decided to have the Annual General Meeting to elect new members on 01 st June 2012 Friday at 11.00 am at the NTS Lecture hall.

The Office bearers Will be elected.
All the Members and Doctors are cordially invited

Teaching Hospital,
Secretary JMA,
Jaffna.

## கேள்வி கோரல்கள்

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு துறைமுகங்கள், பெருந்தெருக்கள் அமைச்சு, வீதி அபிவிருத்தி அதிகாரசபை,
யாழ்ப்பாணம்.

### யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள வீதிகள் புனர் நிர்மாணம் செய்வதற்கான கேள்வி கோரல் அறிவித்தல்

### பெருந்தெருக்கள் அமைச்சின் நிதியின் மூலம் உள்ளூர் போட்டிக்குரிய கூறுவிலை கோரல்கள்

1) பின்வரும் புனர் நிர்மாண வேலைகளிற்கான மூடிய கேள்வி கோரல்களை பிரதம பொறியியலாளர், கேள்விச் சபையின் சார்பாக பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் பெற்றுக்கொள்வார்.

| வேலை விவரம் | கேள்வி பாதுகாப்பு பணம் | ஒப்பந்தகாரர் தரம் ICTAD |
|---|---|---|
| 1. கல்லிட்டு தாரிடல், குலானை 2ம் ஒழுங்கை, அராலி 0.00-0.30 கி.மீ (யாழ்ப்பாணம்- பொன்னாலை- பருத்தித்துறை வீதி) | 30,000.00 | C 7 |
| 2. கல்லிட்டு தாரிடல், குலானை 2ம் ஒழுங்கை, அராலி 0.30-0.60 கி.மீ (யாழ்ப்பாணம்- பொன்னாலை- பருத்தித்துறை வீதி) | 30,000.00 | C 7 |
| 3. கல்லிட்டு தாரிடல், குலானை 1ம் ஒழுங்கை, அராலி 0.00-0.375 கி.மீ | 30,000.00 | C 7 |
| 4. கல்லிட்டு தாரிடல், குலானை 3ம் ஒழுங்கை, அராலி 0.00- 0.25 கி.மீ | 21,000.00 | C 7 |
| 5. கல்லிட்டு தாரிடல், அமெரிக்கன் மிஷன் பாடசாலை வீதி, அராலி 0.0-0.25 கி.மீ | 27,000.00 | C 7 |
| 6. கல்லிட்டு தாரிடல், குலானை 4ம் ஒழுங்கை, (குறுக்கு வீதி) அராலி 0.00- 0.20 கி.மீ | 17,000.00 | C 7 |

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் நடைமுறை 30.05.2012 அன்று முற்பகல் 10.00 மணியுடன் முடிவடையும். கேள்விப்பத்திரங்கள் 30.05.2012 அன்று மு.ப 10.00 மணிக்கு பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் திறக்கப்படும்.

கேள்விப்பத்திரங்களை தயாரிப்பதற்குரிய படிவங்களை பிரதம பொறியியலாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை யாழ்ப்பாணம், காரியாலயத்தில் பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

கேள்விப்பத்திர ஆவணங்கள் 17.05.2012 தொடக்கம் 29.05.2012 பிற்பகல் 2 மணி வரை மீளளிக்க முடியாத வைப்புத்தொகையான 750/= + பெறுமதி சேர் வரி 12% செலுத்திப் பெற வேண்டும்.

2) தகுதி வாய்ந்த கேள்வி கோரல்கள் கோருபவர்கள் பின்வரும் தகைமைப் பிரமாணங்களுக்கு இணங்குதல் வேண்டும்.

அ) கேள்வி கோரல் கோருபவர் தன்னை இக்ரட் (ICTAD) நிறுவனத்தில் வீதி நிர்மாணித்தல் துறையில் மேற்குறிப்பிட்ட தரத்திற்கமைய பதிவு செய்திருத்தல் வேண்டும்.

03. கேள்வி கோரல் ஆவணங்கள் பிரதம பொறியியலாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம் அலுவலகத்தில் இலவசமாகப் பார்வையிட முடியும்.

04. முன் கேள்வி கோரல் கூட்டம் 28.05.2012 அன்று மு.ப 10 மணிக்கு பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாண அலுவலகத்தில் நடைபெறும்.

05. கேள்விப்பத்திர ஆவணங்கள் கேள்வி கோரல் முடிவு திகதியில் இருந்து 120 கலண்டர் நாள்கள் வரை செல்லுபடியாக இருக்கும். (17.10.2012).

06. மேலே குறிப்பிடப்பட்ட கேள்விப்பாதுகாப்பு பணத்தொகை அவற்றிற்குரிய பாதுகாப்பு பத்திரம் ஒவ்வொரு கேள்விப்பத்திர ஆவணத்துடன் இணைத்திருத்தல் வேண்டும். ஏற்றுக்கொள்ளக் கூடிய பாதுகாப்பு பத்திரம் இல்லாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

07. மூடி ஒட்டப்பட்ட கேள்விப்பத்திர ஆவணங்கள் பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாண காரியாலயத்தில் மேற்குறிப்பிட்ட முடிவு காலத்திற்கு (30.05.2012 மு.ப 10.00) முன் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

08. கிடைக்கப்பெற்ற கேள்விப்பத்திரங்கள் குறிப்பிடப்பட்ட முடிவுறும் நேரத்தின் பின் உடனடியாக பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கடற்கரை வீதி, யாழ்ப்பாண அலுவலகத்தில் திறந்து பார்க்கப்படும்.

கேள்வி கோரல் கோருபவர்கள் அல்லது அவரது பிரதிநிதிகள் கேள்விப்பத்திரம் திறக்கும் நேரம் பிரசன்னமாக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

09. மேலதிக விவரங்கள் பின்வரும் அலுவலகத்தின் தொலைபேசி இலக்கத்துடன் தயவு செய்து தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளவும்.

**அலுவலகம்:**
பிரதம பொறியியலாளர்,
வீதி அபிவிருத்தி அதிகாரசபை,
யாழ்ப்பாணம்.

**தொலைபேசி இலக்கம்:**
021- 222- 2968.


மாகாணப்பணிப்பாளர் (வ)
வீதி அபிவிருத்தி அதிகாரசபை,
கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.

பிரதம பொறியியலாளர்
வீதி அபிவிருத்தி அதிகாரசபை,
கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் வீட்டுக் கிருத்திய அழைப்பு

தோற்றம் 07 * 02 * 1956



மறைவு 16 * 04 * 2012

அமரர்
### கணபதிப்பிள்ளை செல்வேந்திரராஜா
(வண்டையா)
(பாமினி லொறி உரிமையாளர்)

கடந்த 16.04.2012 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்தியம் இன்று (16.05.2012) புதன்கிழமை மு.ப. 11.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

சிவன் வீதி,
ஆவரங்கால் மேற்கு,
புத்தூர்.

தாய், சகோதரர்கள்,
மனைவி,
பிள்ளைகள்.

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் 31 ஆம் நாள் நன்றி நவிலலும்



அமரர்
### இராமநாதன் அரசரட்ணம்

தோற்றம்
20*05*1939

மறைவு
16*04*2012

கடந்த (16.04.2012) திங்கட்கிழமை சிவபதப் பேறடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் இராமநாதன் அரசரட்ணம் அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (16.05.2012) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச் சடங்கில் பங்குகொண்டோருக்கும், அவரது மறைவுச் செய்தியறிந்து பலவழிகளில் அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும், உதவிபுரிந்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(தயவு கூர்ந்து இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)

சிவகுரு ஒழுங்கை,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

குடும்பத்தினர்

(18206) (45.6.7)




ஐந்து மாவட்டங்களிலும் ஓரளவான மேகக் கூட்டத்துடன் கூடிய வானிலை நிலவும்.

# பிரிட்டன் வீசா நிராகரிக்கப்பட்டோர் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டும்

## அந்நாட்டு குடிவரவுத் துறை அறிவுறுத்து

பிரிட்டனில் உள்ள தமது உறவுகளைக் குறுகிய கால அடிப்படையில் பார்ப்பதற்காக அங்கு செல்ல விரும்புவோரின் வீசா நிராகரிக்கப்பட்டால், அவர்கள் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டும். மேன்முறையீடு செய்ய வேண்டியதில்லை என்று அந்நாட்டுக் குடிவரவுத் துறை அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

வீசாக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக மேன்முறையீடு செய்வதால் ஏற்படும் காலதாமதம் மற்றும் செலவீனம் என்பவற்றைக் கருத்திற்கொண்டே இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகப் பிரிட்டன் தூதரகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள பிரிட்டன் குடிவரவுத் துறை அமைச்சர் டேமியன் கிரீன் தெரிவித்ததாவது:-

எதிர்வரும் காலங்களில் வீசாக்களுக்காக மேன்முறையீடு செய்வதன் காரணமாகப் பிரிட்டனில் உள்ள தமது உறவுகளைப் பார்க்க விரும்புபவர்கள் தமது மேன்முறையீட்டுக்கான முழு உரிமைகளையும் இழக்க நேரிடும். எனினும் வீசா நிராகரிக்கப்படுவோருக்கான மேன்முறையீட்டு வாய்ப்பு, மனித உரிமைகள் மற்றும் இனப் புறக்கணிப்பு என்ற அடிப்படையில் வரையறைக்குட்பட்ட வகையில் நடைமுறையில் இருக்கும்.

வீசா நிராகரிக்கப்படுவோர் மேன்முறையீடு செய்வதன் காரணமாகப் பிரிட்டனில் வரிசெலுத்துவோர், வெளிநாட்டவர்கள் தொடர்பில் மிகப்பெரிய செலவீனங்களைப் பொறுப்பேற்க வேண்டியுள்ளனர்.

எனவே இதனைத் தடுக்கும் முகமாகவே வீசா நிராகரிக்கப்படுவோர் மீண்டும் புதிய விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்குமாறு கோரப்படுகின்றது - என்றார்.

2011 ஆம் ஆண்டில் மாத்திரம் வீசா மேன்முறையீடுகள் என்ற வகையில் 50 ஆயிரம் விண்ணப்பங்கள் கிடைத்தன. இவற்றைப் பார்வையிட்டுப் பரிசீலனை செய்வதற்காக, வருடம் ஒன்றுக்குப் பிரிட்டன் அரசுக்கு 29 மில்லியன் பவுண்ட்ஸ்கள் செலவாகின்றன என்றும் குடிவரவு அமைச்சர் சுட்டிக்காட்டினார். (ந)

# சீரில்லாத பஸ் சேவையால் சிரமப்படும் பயணிகள்

யாழ்ப்பாணம்,மே 16

பருத்தித்துறையிலிருந்து காலை 7.30 மணியளவில் யாழ்ப்பாணம் நோக்கி இடம்பெறும் 750 ஆம் இலக்க பஸ்சேவை கடந்த சில தினங்களாகச் சீராக நடைபெறாததால் பயணிகள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

தினமும் வேலைக்குச் செல்வோரும், பாடசாலை மாணவர்களும் தமது மாதாந்த பருவகாலச் சீட்டுக்களை உபயோகிக்க முடியாத நிலையில் தனியார் பஸ்களில் பணம் செலுத்திப் பயணிக்க வேண்டிய பரிதாப நிலையில் உள்ளனர். நேற்று முன்தினம் 14 ஆம் திகதி காலை 7.30 மணிக்கு வர வேண்டிய இந்த பஸ் 8.30 மணிக்கே அதுவும் ஒரு சிறிய பஸ்ஸே சேவையில் ஈடுபட்டது. இதனால் இடைநடுவில் நின்ற பல பிரயாணிகளை ஏற்றாமலேயே அந்த பஸ் சென்றுவிட்டது. அன்றைய தினம் புறாப்பொறுக்கி, ஆலடி பகுதியில் அமைந்துள்ள பஸ்தரிப்பிடத்தில் நின்ற ஏராளமான பயணிகளை இந்த பஸ் ஏற்றாமல் சென்றதை அவதானிக்க முடிந்தது.

எனவே மிகவும் முக்கியமான , அதிகளவு பஸ் பயணிகளைக் கொண்ட 750 இல பஸ் மார்க்கத்தில் குறிப்பிட்ட நேரத்தில், பெரிய பஸ்களைச் சேவையில் ஈடுபடுத்துமாறு பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். இது தொடர்பாகப் பருத்தித்துறை டிப்போ முகாமையாளருடன் தொடர்புகளை ஏற்படுத்த முயன்றபோதிலும் முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறைக்கு மாலை 5.30 மணிக்குப் புறப்படுகின்ற 750 இலக்க பஸ்ஸும் கடந்த சில வாரங்களாக ஒழுங்கான முறையில் சேவையில் ஈடுபடுத்தப்படவில்லை என்றும் பயணிகள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகிறது. (க)

## ஆங்கில மொழிப் பரீட்சை

வடமராட்சி,மே 16

கரவெட்டி கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான ஆங்கில மொழி எழுத்துப் பரீட்சை நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் 5 மணி வரை நெல்லியடி திரு இருதயக் கல்லூரியில் நடைபெறவுள்ளது என்று கரவெட்டி கோட்டக் கல்வி அதிகாரி எஸ். நற்குணலிங்கம் அறிவித்துள்ளார். (வ-16-253)

## மருந்துப் பொருள்களை ஆய்வு செய்ய விசேட குழு

இறக்குமதி செய்யப்படுகின்ற மருந்துப் பொருள்களை ஆய்வு செய்வதற்கு விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

உள்நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படுகின்ற மருந்துப் பொருள்களின் தரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பிலான பிரச்சினைகள் ஏற்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

உரிய தரத்தைக் கொண்டிராத மருந்துப் பொருள்களின் இறக்குமதியை, இந்தக் குழுவின் அறிக்கை அடிப்படையில் தடை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சுகாதார அமைச்சகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ந)

## யோகாசன பயிற்சி சனியன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மே 16

உடல், உள ஆரோக்கியத்துக்கான யோகாசனப் பயிற்சி புதிய வகுப்பு எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை ஓம் பதஞ்சலி யோககேந்திர நிலையத்தால் ஆரம்பிக்கப்படவுள்ளது.

வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் காலை 6 மணி தொடக்கம் 7 மணி வரை யாழ். சைவ பரிபாலன சபை மண்டபத்தில் இந்தப் பயிற்சி நடைபெறும்.

இந்தப் பயிற்சி வகுப்பில் ஆண், பெண் இருபாலாரும் வயது, மத வேறுபாடின்றி ஆர்வமுடையவர்களும், உடல் ரீதியாக விசேட தேவையுடையவர்களும் கலந்து கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ந)


# மரண அறிவித்தல்

## திருமதி செல்வராசா இராசமணி



பத்தமேனி, பாரதி வீதியைப் பிறப்பிடமாகவும், கொய்யாத்தோட் டம், இருபாலையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வராசா இராசமணி கடந்த (14.05.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற முத்து - இரத்தினம் தம்பதியரின் மருமகளும், செல்வராசாவின் அன்பு மனைவியும், கந்தசாமி, வண்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவபாக்கியம், கைலாயபிள்ளை ஆகியோரின் மைத்துனியும் ஜெயதேவி, விமலாதேவி, ஜெயச்சந்திரன், ஜெயராசா (ஜேர்மனி), உதயகுமார், ஸ்ரீரதாதேவி (பிரான்ஸ்), கணேசமூர்த்தி, ஜெயக்குமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், ஐயாத்துரை, குணவீரசிங்கம், றஞ்சினி, கேதீஸ்வரி (ஜேர்மனி), சஜீலா, ஜெயசூரி, தனுஷலா ஆகியோரின் அன்பு மாமியும், முகிர்ந்தா, பிருந்தா, அஜந்தா, சர்மிளா, கீர்த்திகா, நர்மிலா, நர்மிலன், சருமினி, நிதுஷன், யதுஷா, யதுஷன், தனுஷா, தனிஸ்குமார், சனிஸ்குமார், லக்ஷன் (ஜேர்மனி), பிருந்தன், திசாரா, கஜலக்ஷன், கோபிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அஜந், ருஜித் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (16.05.2012) புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக இருபாலை கிழக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொய்யாத்தோட்டம்,
இருபாலை.

தகவல்: ஜெயச்சந்திரன் ([illegible])
பெரியகடை, யாழ்ப்பாணம். (மரக்கறிச் சந்தை)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்
14
★
04
★
1948

மறைவு
16
★
04
★
2012

அமரர் யோசை வென்சன்சிலாஸ்
(யேசு)

கடந்த (16.04.2012) அன்று இறைபதம் எய்திய எமது குடும்பக்குலவிளக்கின் 31 ஆம் நாள் நிகழ்வுகள் இன்று (16.05.2012) புதன்கிழமையன்று காலை 6.30 மணியளவில் புனித பேதுரு பாவுலு ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.


அன்னாரின் மரணச்செய்தி அறிந்து வருகை தந்து ஆறுதல் மொழி கூறியோருக்கும், மலர்வளையம் வைத்தும், கண்ணீர்அஞ்சலிகள் வெளியிட்டோருக்கும், பத்திரிகை , இணையத்தளங்களில் செய்தி வெளியிட்டவர்களுக்கும், தொலைபேசி, தந்தி மூலம் ஆறுதல் மொழி கூறியோருக்கும், நோயுற்ற வேளையில் வைத்திய சேவை வழங்கிய யாழ். போதனா வைத்தியசாலை சமூகத்தினருக்கும் பல வழிகளிலும் உதவிகள் வழங்கிய அன்பு உள்ளங்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்

நாரந்தனை தெற்கு, ஊர்காவற்றுறை

குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## கதிரவேலு பத்மநாதன்

உருத்திரபுரம் 08 ஆம் வாய்க்காலைப் பிறப்பிடமாகவும், மகேந்திரன் வைத்தியசாலை, வின்சன் வீதி, திருவையாற்றில் வசித்து வந்த கதிரவேலு பத்மநாதன் ஜேர்மனியில் (12.05.2012) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - செல்லம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற Dr.R.V.சுப்பிரமணியம் மற்றும் ஞானப்பு தம்பதியரின் பாசமிகு மருமகனும், ஜெயந்திமலரின் (ஜேர்மனி) கணவரும், மயூரனின் (கனடா) தந்தையும், லூட்ஸ்லெனிற்றாவின் (கனடா) மாமனும், அஸ்வினாவின் (கனடா) பேரனும், அன்னமணி, கனகரத்தினம் (இந்தியா), மனோன்மணி மற்றும் காலஞ்சென்ற சங்கரதாஸ் (சங்கரன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், பவுலின்கமலாவின் (லண்டன்) மச்சானும், பாலராசா (மகேந்திரன்), வசந்தா (கனடா), கமலநாயகி (கலா - கனடா), டிஸ்ரெலா மணி (பரமேஸ்வரா முன்பள்ளி திருவையாறு, ஆசிரியை), சந்திரவேந்தன்/சந்திரன் (ஜேர்மனி), கோடீஸ்வரன்/கோடி (லண்டன்), புவிச்சந்திரன்/புவி, கேந்திரகுமார்/கேந்தா (ஜேர்மனி) ஆகியோரின் அத்தானும், மார்க்கண்டு, காலஞ்சென்ற சொர்க்கலிங்கம், திலகவதி (இந்தியா), ஆனந்தன் (லண்டன்), மோகனதாஸ், தேவராஜ்/ரஞ்சன் (கனடா), தவப்பிரகாசம்/தவம், பரமேஸ்வரிதேவி (கனடா), உமா (ஜேர்மனி), ரஜனி (லண்டன்), கசில்டாஜக்குல் (ஜேர்மனி) ஆகியோரின் மச்சானும் காலஞ்சென்ற ஜெயம், குமார், மோகன், நகுலா மற்றும் ஞானம் (ஜேர்மனி), ரசிக்கா (ஜேர்மனி), விமலேஸ்வரி (ஜேர்மனி), சூரி ரவி (ஜேர்மனி), ராசன் (ஜேர்மனி), சுமதி, ரமா, சுமி (ஜேர்மனி) ஆகியோரின் மாமனும், கிறிஸ்ரியான் (ஜேர்மனி), டாணி (ஜேர்மனி), கிருஷா, காயத்திரி (கனடா), யூலியன்(கனடா), லுக்சனா, யூலினா, கண்ணன் (ஜேர்மனி), சுதா (இந்தியா), துசியான் (ஜேர்மனி), ஜெனா (நோர்வே), சுபாஸ் (லண்டன்), சசி (நோர்வே), துரு (பிரான்ஸ்), ரவி (பிரான்ஸ்), காலஞ்சென்ற சுபாசினி மற்றும் யாழினி ரகு (இந்தியா), யசோ (பிரான்ஸ்), சிந்து, செந்தூரன் (சவுதி), சுதன் (கனடா), மதன் (கனடா), செந்தில் (கனடா), கோபி (கனடா), லக்சன் (கனடா), தம்பியா (ஜேர்மனி), சபியன் (ஜேர்மனி), பற்றிக் (லண்டன்), டொமினிக்கா (லண்டன்), சந்தோஸ் (லண்டன்), திசானி, கெமில்ட்டன் சாள்ஸ் (ஜேர்மனி), அலினா (ஜேர்மனி) ஆகியோரின் பெரிய, சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (16.05.2012) புதன்கிழமை ஜேர்மனியில் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

### குறிப்பு:

**அன்னாரின் நினைவையொட்டி மாமியாரின் இல்லத்தில் மகேந்திரன் வைத்தியசாலை, வின்சன் வீதி, திருவையாறு கிளிநொச்சியில் துயர் பகிர்வு நிகழ்வு நடைபெறுகிறது. இறுதிக்கிரியைகள் பற்றிப் பின்னர் அறிவிக்கப்படும்.**

**தகவல்:**

**மாமி, மருமகன்-(செந்தூரன்)**

**0016478642126(கனடா)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பேக்கரி வேலைக்கு ஆள்கள் தேவை**

பேக்கரி வேலையில் அனுபவமுள்ள வேலையாள்கள் தேவை. தகுதி அடிப்படையில் சம்பளம் வழங்கப்படும்.

புதிய துர்க்கா வெதுப்பகம்,
கலைவாணி லேன், பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

## பொலிஸாரைத் தாக்கியவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம்,மே 16

வீதியில் வைத்து பொலிஸாரைத் தாக்கிய குற்றச்சாட்டில் குருநகரைச் சேர்ந்த சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்க யாழ். நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

போதை தலைக்கேறிய நிலையில் குழந்தை ஒன்றை மோட்டார் சைக்கிளில் ஆபத்தான முறையில் கொண்டுசென்ற வேளை குறித்த சந்தேக நபரை பொலிஸார் வழிமறித்த போது தம்மைத் தாக்கினார் என இவர் மீது தான குற்றப்பத்திரம் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது குறித்த சந்தேக நபரை எதிர்வரும் திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்க யாழ். நீதிமன்ற நீதிவான் மா.கணேசராசா உத்தரவிட்டார். (10-4)

**வீடு வாடகைக்கு**

நாவலர் றோட்டில் வீடு வாடகைக்கு உண்டு.
நிறுவனத்திற்கு முன்னுரிமை

**T.P.: 0774533612**

## பாராட்டி வாழ்த்து

கடந்த 2011இல் நடைபெற்ற G.C.E. (O/L) பரீட்சையில் தமிழையும், சமயத்தையும் தவிர மற்றைய ஏழு பாடங்களையும் ஆங்கில மொழி மூலம் தேற்றி (8A, 1B) பெறுபேறு பெற்ற எமது நிறுவனத்துக்குரிய மாணவன்

**T. கோகுலன்**

யாழ். மாவட்டத்திலேயே அதி உயர் புள்ளிகளைப் பெற்ற மாணவனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அவர் ஆங்கில இலக்கியத்தில் (Eng. Lit) பெற்ற "B" தரத்திலான சித்தி மீள் விடைத்தாள் மதிப்பீட்டில் நிச்சயமாக "A" தரச் சித்தியைப் பெறுவார் என்ற பூரண நம்பிக்கையுடன் அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அவர் மேலும் மேலும் கல்வித்துறையில் அதி உயர் நிலைகளை அடைய வேண்டும் என இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

மேற்படி மாணவன் T. கோகுலனின் பெறுபேற்றை கௌரவிக்கும் முகமாக 17.05.2012 வியாழக்கிழமை எமது நிறுவனத்துக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

T.P. 021 226 3321
web.www.raveens emc.com
Email.info@raveen emc.com

ர. ஈஸ்வரநாதன்
B.Sc Hons (Agi) Dip .in Edu.
Diriector Raveens English Medium Classes - karaveddy.

## தொலைபேசி திருடன் மாட்டினான்

யாழ்ப்பாணம்,மே 16

உதவி அரச அதிபரின் கைத்தொலைபேசியைத் திருடியவர் பொலிஸாரிடம் வசமாக மாட்டிக்கொண்டார்.

யாழ். நகரில் வைத்து சங்கானை உதவி அரச அதிபரின் கைத்தொலைபேசியை திருடியதாக இவர் கைது செய்யப்பட்டார். திருடிய தொலைபேசிக்கு 'றீலோட்' செய்த வேளை 'பின்' இலக்கத்தை அவதானித்த பொலிஸார் குறித்த சந்தேக நபரை கைதுசெய்தனர். நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட இவருக்கு 10 ஆயிரம் ரூபா ஆள்பிணையில் செல்ல அனுமதித்ததுடன் குறித்த தொலைபேசியை உரியவரிடம் ஒப்படைக்க உத்தரவிடப்பட்டது. (10-16-4)

## பாம்புக்கடிக்கு இலக்கான சிப்பாய்

யாழ்ப்பாணம், மே 16

பாம்புக்கடிக்கு இலக்கான இராணுவச் சிப்பாய் ஒருவர் சிகிச்சைக்காக நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொழும்புத்துறை இராணுவ முகாமில் கடமையிலிருந்த மஹியங்கனையைச் சேர்ந்த நந்தகுமார (வயது-26) என்பவரே பாம்பினால் கடியுண்டவராவார். (16-4)




# மரண அறிவித்தல்கள்

## வல்லிபுரம் இலட்சுமி



இளவாலையைப் பிறப்பிடமாகவும், சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வல்லிபுரம் இலட்சுமி நேற்று (15.05.2012) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் வல்லிபுரத்தின் (ஓய்வுபெற்ற இ.போ.ச. சாரதி) அன்பு மனைவியும், காலஞ்சென்ற சின்னத்தம்பி மற்றும் பாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், இந்திராணி, சந்திரவதனா, வசந்தா, விஜயா (கனடா), சியாமளா (மாலா) ஆகியோரின் பாசமிகு தாயும், சந்திரசேகரமூர்த்தி (இளைப்பாறிய இலங்கை வங்கி உத்தியோகத்தர்), ஜஸ்ரின், காலஞ்சென்ற சுப்பிரமணியம் (மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு மாமியும், றமணன் (கனடா), துஸ்யந்தன் (லண்டன்), டயானா, ஜெனோ, ஜஸ்டிஸ், தர்சினி, துசாநந்தினி, காயத்திரி ஆகியோரின் பிரியமுள்ள பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 'ஈஸ்வரிவாசம்' சீரணிச் சந்தி, சண்டிலிப்பாயில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இன்று (16.05.2012) புதன்கிழமை பி.ப. 2 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சீரணிச் சந்தி,*
*சண்டிலிப்பாய்.*

*தகவல்:*
*வல்லிபுரம் (கணவர்).*

## திருமதி செல்வபாக்கியம் வைத்திலிங்கம்



சுதுமலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் தற்போது லக்ஷபான வீதி, தோணிக்கல்லை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வபாக்கியம் வைத்திலிங்கம் (14.05.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சிவசம்பு - முத்தாச்சி தம்பதியரின் சிரேஸ்ட மகளும், திருமதி இந்திராணி சிவகுரு, திருமதி தனலட்சுமி மகாலிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியை), திருமதி திலகவதி இராசையா ஆகியோரின் பாசமிகு சகோதரியும், உமாபதி சிவம்கோணேஸ்வரன், நாவுக்கரசு,பங்கயச்செல்வி (ஆசிரியை யா/இணுவில் இந்துக் கல்லூரி (முன்னர்) வ. விபுலாநந்தாக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயும், சறோஜினிதேவி, ஸ்ரீலதா, யசோகரன் (பூமாரெக்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், ருஜூந் (பிரான்ஸ்), ஜசிந்தன் (லண்டன்), லகிந்தன், மதுர்ஷன், ஹம்சத்வனி ஹயானன், அபராசிதன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.05.2012) புதன்கிழமை காலை 10 மணியளவில் அன்னங்கை, இணுவில் கிழக்கு, இணுவில் எனும் முகவரியில் அமைந்துள்ள சகோதரி திரு. திருமதி மகாலிங்கத்தின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அன்னங்கை,*
*இணுவில் கிழக்கு, இணுவில்.*

*தகவல்:*
*குடும்பத்தினர்.*

## கனகரட்ணம் நாகராஜா



(முன்னாள் இலங்கை போக்குவரத்துச் சபை நேரக்கணிப்பாளரும், நிவேஷ் பேக்கரி மாவிட்டபுரம் துணை முகாமையாளரும்)

மானிப்பாய், லோட்டன் வீதியைப் பிறப்பிடமாகவும், மானிப்பாய் வடக்கு, பொன்னாலை வீதி, டிலினிவிலாவை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரட்ணம் நாகராஜா நேற்று (15.05.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகராஜா இமெல்டா அல்வீனம்மாவின் (லக்கிளி) அன்புக் கணவரும், துஷ்யந்த கௌரி, விசுவலிங்கபிள்ளையின் அன்புத் தந்தையும், பொன்னையா விசுவலிங்க பிள்ளையின் பாசமிகு மாமனும், சஞ்சித்கிஷன் (மலேசியா), கித்தேஷ்வர் (மலேசியா) ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான சிவமணி செல்லத்துரை, பவளமலர், குமாரசாமி, ரட்ண மலர் ராஜேந்திரம் (அவுஸ்திரேலியா), பொன்னுத்துரை செல்வரட்ணம், மற்றும் துரையப்பா கந்தசாமி, காலஞ்சென்ற பொன்னுத்துரை ராஜரட்ணம் மற்றும் குணமணி அன்னப்பா, மனோன்மணி மகேந்திரநாதன், கனகரட்ணம் முருகையா (லண்டன்) ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற திருமதி பவுலுப்பிள்ளை, மனுவல்பிள்ளையின் மருமகனும் காலஞ்சென்ற லவ்லி மற்றும் பேளி (ஜேர்மனி), மல்லி (கொய்யாத்தோட்டம்), யூலி (கொழும்பு), காலஞ் சென்றவர்களான ஞானசியமணி, அன்னப்பா, நமசிவாயம், ராஜேந்திரன், கந்தையா, மகேந்திரநாதன் மற்றும் சொர்ணமலர் முருகையா (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.05.2012) வியாழக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்லி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
*வணக்கத்துக்குரிய அன்னப்பா*
*ஜெயக்குமாரன் (மருமகன்),*
*திருமதி ஜெயந்தி றெனோல்ட்*
*(மருமகள்).*

*பொன்னாலை வீதி,*
*மானிப்பாய்.*

## அக மகிழ் வாழ்த்துக்கள்



### பதவி உயர்வுடன் இடமாற்றம்

முதல் பெண் அரச அதிபராய் மக்கள் சேவையில்
மிளிர்பணி ஆற்றியும் விருத்தியும் வளர்ச்சியும்
சேர் உயர்பணி நல்கியும் வினைத்திறன் ஈந்த
யாழ். மாவட்ட அரசாங்க அதிபர்

**திருமதி இமெல்டா சுகுமார்**

அவர்கள் 16.05.2012 தொடக்கம் ஜனாதிபதி
செயலகத்தில் நிருவாகப் பணி ஏற்கும்
பதவி உயர்வால் அக மகிழ்கின்றோம்.

திருமதி இமெல்டா சுகுமார்

### புதிய அரச அதிபர் பதவியேற்பு



மீன்பாடும் தேன் நாடாம் மட்டக்களப்பு அரச
அதிபராய் வண்ணமிகு உயர் சேவை வழங்கி,
யாழ். மாவட்டத்தின் அரச அதிபராய்
இன்று (16.05.2012) பதவி ஏற்கும்

**திரு. சுந்தரம் அருமைநாயகம்**

அவர்களை வருக, வருக, வருக என
வரவேற்று உளம் நிறைகின்றோம்.

உயர் திரு. சுந்தரம் அருமைநாயகம்

யாழ். மாவட்ட செயலக
நலன்புரிக்கழகம்

(18230) (6,14,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

பத்தி அம்மன் வீதி வல்வெட்டி, வல்வெட்டித்துறையில் அரிவு பட்டடை, பாட்டுவாள், சக்கரவாள் என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு: 075 7866 244

## தவறிவிட்டது

கீழ்க்குறிப்பிட்ட இலக்கத்தையுடைய மோட்டார் வாகன பின் இலக்கத் தகடு **(NPXL 3629)** வட்டுக்கோட்டைக்கும், கைதடிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து **0776660638** என்ற தொ.பே. இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## உதயன் விளம்பரத் தொடர்புக்கு

advt@uthayan.com
0215671111

## புலோலி பசுபதீஸ்வரர் தேவஸ்தானம் (சிவன் கோவில்)

**வியாழமாற்ற விஷேட ஹோமம்**

17.05.2012 வியாழக்கிழமை நடைபெறும் வியாழமாற்றத்தை முன்னிட்டு 18.05.2012 வியாழக்கிழமை காலை 10 மணிக்கு விஷேட ஹோமம், அபிஷேகம், பூஜைகள் நடைபெறும்.

தி.நாகராசா (அறங்காவலர்)

## விற்பனைக்குண்டு

நல்ல நிலையில் உள்ள CB 125 (on Model) NWG K X X X என்ற இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு

தொடர்பு: 077 912 7508

## மணமகன் தேவை

1971 ஆம் ஆண்டு பிறந்த இந்து கௌரவ குடும்பம் படித்த அழகிய 34 பாவக்கிரகமுடைய மகநட்சத்திரம் உள்ள மணமகளுக்கு படித்த அழகிய மணமகன் தேவை.

தொடர்பு:- 0779688129

## இறைச்சிக்கோழி விற்பனை

புறொய்லர் இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் மிகக்குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம் சுத்தம் செய்யப்பட்டது 1Kg 450/= மட்டும் கூடுதல் கொள்வனவுக்கு விசேடவிலைக் கழிவு வழங்கப்படும்

விஜயகுமார்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.

## விற்பனைப் பிரதிநிதிகள் பணம் வசூலிப்பாளர் தேவை

விற்பனைத்துறையில் ஆர்வமுள்ள பணம் வசூலிப்பதில் அனுபவமுடைய ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
உணவு மற்றும் தங்குமிட வசதி இலவசம். சிங்களம் தெரிந்திருந்தால் மேலதிக தகைமையாக கொள்ளப்படும்.
விற்பனைப் பிரதிநிதிகள் மாதம் ரூபா 25000 - 30000 வரையும்
பணம் வசூலிப்பாளர்கள் மாதம் ரூபா 45000 - 50000 வரை சம்பாதிக்கலாம்

**தகைமைச் சான்றிதழ்களுடன் நேரில் வரவும்**
சுஜி என்ரபிறைசஸ், டச்சு வீதி, சாவகச்சேரி
T.P : 021 2270586, 024 2226382 (வவுனியா)
077 2604194, 071 9072474

## CERTIFICATE IN INTERNET TECHNOLOGY

*Dawnloding, Chatting, Web & E-Mail Address Creating, Face Book, Skype, Messenger Video Call, Net Call, etc.* என்பன ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும்.

**Duration 2 Weeks, Rs.1000**

Ms Office, ICT, GIT, DTP, Hardware Technology, Visual Basic போன்ற புதிய பிரிவுகளும் ஆரம்பமாகவுள்ளன. ஆண்கள், பெண்கள், பாடசாலை மாணவர்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன.

தொழில் புரிபவர்களுக்கு விசேட நேரம் வழங்கப்படும் (குறைந்த இலகு தவணைக் கட்டண முறை)

NORTH LEAD Educational Center
No. 328, Stanly Road, Jaffna
Tel: 222 4459, 0772533390, Fax: 2224460

## நூலக வாரம் -மே 2012

பொது நூலகங்கள் - சாவகச்சேரி, மீசாலை, நுணாவில்
நகராட்சி மன்றம், சாவகச்சேரி

**புத்தக கண்காட்சியும், விற்பனையும்**

காலம்: 17, 18, 19 மே 2012
இடம்: பிரதான நூலக மண்டபம்.
நேரம்: காலை 10.00 - 5.30 மணி வரை

*பிரதமவிருந்தினர்: திரு.செ பிரணவநாதன் அவர்கள் (யாழ். பி.உ.உ. ஆணையாளர்)*

**தலைமை**
**இ.தேவசகாயம்பிள்ளை (தவிசாளர்)**
நகராட்சி மன்றம், சாவகச்சேரி

## தகவல் தொழில்நுட்ப அறிவினால் எதிர்கால உலகினை வெல்லுங்கள்



எதிர்காலத்தில் உங்களது தொழில் ரீதியிலான அனைத்து முன்னேற்றத்திற்கும் அத்தியாவசியமான தகவல் தொழில்நுட்ப (IT) அறிவினை பெற்றுக்கொள்ள நீங்களும்

**ESOFT** *The Leader in Professional ICT Education*

**IT டிப்ளோமாவை பயிலுங்கள்**

சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட இலங்கையின் ஒரேயொரு IT டிப்ளோமா பாடநெறி

**DiTEC** Diploma in Information Technology
*Now It's Internationally Recognized !!!*

### எங்களது டிப்ளோமா பாடநெறியின் விசேட அம்சங்கள்

- 10 பாடங்களுடனான ஒப்பிட முடியாத பாடத்திட்டம்
- அனைத்து பாட விடயங்களும் அடங்கிய அச்சிடப்பட்ட புத்தகங்கள் வழங்கப்படும்
- உங்களுக்கு அருகிலுள்ள கிளையில் பாடநெறியை தொடரும் வாய்ப்பு
- 2011ஆம் வருடத்தில் 10,000க்கும் மேற்பட்ட மாணவர்கள் பதிவு செய்த IT டிப்ளோமா பாடநெறி
- BCS பாடநெறியில் 02 பாடங்கள் நீக்கப்பட்டுள்ளதால் ரூ.30,000 சலுகை
- மலேசியாவில் அச்சிடப்பட்ட ESOFT சான்றிதல் மற்றும் பிரித்தானிய EDEXCEL நிறுவனத்தினால் வழங்கப்படும் சான்றிதல்கள் இரண்டையும் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு

மே மாத புதிய குழுவக்கான மாணவர்கள் தற்போது இணைத்துக் கொள்ளப்படுகின்றனர்.

**இக்குழுவுக்காக பதிவு செய்பவர்களுக்கு 25% கழிவு**

**BIT** Bachelor of Information Technology (University of Colombo)

**2012 க்கான புதிய பதிவுகள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன**

Register For HND in
edexcel HND Business Management Computing

**FREE !!** And Grab this S7 Android Tab *Condition Apply


### ESOFT Computer Studies (Pvt) Ltd

| JAFFNA | NELLIADY | KILINOCHCHI |
|---|---|---|
| No 17/1, Brown Road, | No 151, Jaffna Road, | No 1, Kanagapuram Road, |
| Tel: 021 222 4142 | Tel: 021 226 4940 | Tel: 077 309 9 308 |

துரித அழைப்பிற்கு : 077-309 9 308

## ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் திருக்கோவில் மஹோற்சவம் - 2012

16.05.2012 புதன்கிழமை



**கைலாசவாகனம்**
இரவு 07.00மணி

தினமும் நண்பகல் அன்னதானம் இடம்பெறும்
www.inuvilinfo.com இணுவில்

## பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி நகரங்களில் இயங்கும் விற்பனை நிலையத்திற்கு கீழ்க்காணும் பதவிகளுக்கு ஆள்கள் தேவை. தகுதியானவர்கள் எதிர்வரும் (25.05.2012) இற்கு முன்னர் கீழ்க்காணும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

1. விற்பனையாளர் (Show room)
2. விநியோகப் பையன்கள் (Delivery boys)

**DSI மொத்த விற்பனை நிலையம்**
**154, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

குலயத்தில் 28 * 10 * 1934



சிவயத்தில் 28 * 05 * 2011

அமரர்
**திருமதி புவனேஸ்வரி தங்கராசா**

அன்பான முகத்தோடு ஆண்டுகள் பல வாழ்ந்து
ஆதரவாய் அகிலமெல்லாம் அரவணைத்து
பண்பான பெயர் தம்மை பார் எல்லாம் பெற்று
பல்காத இடம் தன்னில் சென்றீரோ !!!

97, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பூர் எங்களது சொந்த மண் அங்கு எம்மை குடியமர்த்துங்கள்

## மூதூர் சென்றிருந்த சரவணபவன் எம்.பியிடம் இடம்பெயர்ந்த மக்கள் கண்ணீர் மல்கக் கோரிக்கை

**படையினர் குறிப்பிடும் பிரதேசத்தில் குடியமர வேண்டும். மறுத்தால் முகாமை புள்டோசர் போட்டு அழித்து விட்டு உங்களை அடித்து ஏத்துவோம் – என்று படையினர் கூறியுள்ளனர்.**



திருகோணமலை,மே16

சம்பூர் பிரதேசம்தான் எங்களுக்கு வேண்டும். எனவே சொந்த மண்ணில் குடியேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று யாழ்.மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனிடம் சம்பூர் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மூதூர் பிரதேசத்துக்குச் சென்றிருந்தார். அவ்வேளை அவர் சம்பூரில் இருந்து இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் வாழும் மக்களைச் சந்தித்தபோதே அவர்கள் இவ்வாறு கண்ணீர் மல்க கோரிக்கை விடுத்துள்ளனர்.

இடம்பெயர்ந்த சம்பூர் மக்கள் மேலும் தெரிவித்ததாவது:-

படையினர் தங்களை மூன்று மாதங்களுக்குள் தாங்கள் குறிப்பிடும் பிரதேசத்தில் குடியமர வேண்டும். மறுத்தால் உங்கள் முகாமை புள்டோசர் போட்டு அழித்து விட்டு உங்களை அடித்து ஏத்துவோம் என்று கூறியுள்ளனர். நாங்கள் என்ன செய்வது, அவர்கள் குறிப்பிட்ட பிரதேசம் குடியேறுவதற்கு ஏற்ற பிரதேசம் அல்ல. அது தண்ணீர் இல்லாத காட்டுப் பிரதேசம். நாங்கள் அங்கு குடியேற மாட்டோம்.

ஆடு, மாடுகள் தங்க முடியாத தகரக் கொட்டில்களில் நாங்கள் அடைக்கப்பட்டு இருக்கின்றோம். கொட்டில்கள் உடைந்து விழும் நிலையில் இருக்கின்றன. எங்களுக்கான உலர் உணவு நிவாரணப் பொருள்கள் நிறுத்தப்பட்டு ஆறு மாதங்கள் கடந்துவிட்டன. அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவி செய்ய முகாமுக்கு வரும்போது அவர்களை படையினர் வரவிடாமல் திருப்பி அனுப்புகின்றனர். நாங்கள் என்ன பாவம் செய்தோம்.

### இடம்பெயர்ந்து 6 வருடங்கள்

சம்பூரில் இருந்து இடம்பெயர்ந்து ஆறு வருடங்கள் கடந்தும் இன்று வரை நாங்கள் நலன்புரி நிலையங்களில் அவல வாழ்க்கை வாழ்கின்றோம். நிவாரணம் நிறுத்தப்பட்டதனால் நாங்கள் வறுமையில் வாடுகின்றோம். எங்களது கலாசாரம், பண்பாடு முகாம் வாழ்க்கையினால் சீரழிக்கப்பட்டு வருகின்றன. எமது பிள்ளைகளின் படிப்பு பாதிக்கப்படுகின்றது.

முதியோர்கள் நோய் வாய்ப்பட்டு கஷ்டப்படுகின்றனர். தகரக் கொட்டில்களுள் இருப்பதனால் குழந்தைகளுக்கு பலவித நோய்கள் ஏற்படுகின்றன. குளிப்பதற்கு தண்ணீர் இன்றி அவதிப்படுகின்றோம். எங்கள் நிலையை இலங்கை வந்த இந்தியக் குழுகூட வந்து பார்க்கவில்லை. போரால் முதலில் இடம்பெயர்ந்தவர்கள் நாங்கள். இன்று போர் முடிந்துவிட்டது.

ஏன் எங்கள் சம்பூர் பிரதேசத்தில் குடியேற அனுமதி தராமல் இருக்கின்றார்கள். எங்கள் இடத்தில் எங்களுக்கு அனுமதியில்லாமல் அனல்மின் நிலையம் அமைக்கப்படுவது எந்த வகையில் நியாயம். எங்கள் பிரச்சினைகளை உலக நாடுகளுக்குத் தெரியப்படுத்துங்கள். நாங்கள் தொழிலின்றி முடங்கிக் கிடக்கின்றோம்- என்றனர்.

### விரைவில் நல்ல தீர்வு கிட்டும்

இந்த மக்களிடம் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் தெரிவித்ததாவது:

இந்தப் பிரச்சினையை தமிழரசுக்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனிடம் உடன் கொண்டு செல்வேன். அவர் உங்களது விடயத்தில் மிகவும் உறுதியாக இருக்கின்றார். சம்பூர் மண்ணில் உங்களை மீளக்குடியேற்ற நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றார். நாங்கள் ஒரு போதும் உங்களைக் கைவிடமாட்டோம். சர்வதேசத்தின் பார்வை இப்போது எமது மக்கள் பக்கம் திரும்பி இருக்கின்றது. மிக விரைவில் நல்லதோர் தீர்வு கிடைக்கும். உங்களது விருப்பப்படி சொந்த மண்ணில் குடியேறும் அந்த நாள் வெகு தூரத்தில் இல்லை- என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவனுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூதூர் பிரதேச சபை உறுப்பினர்களான இ.நாகேஸ்வரன், த.தமிழ்ச்செல்வன் ஆகியோரும் சென்றிருந்தனர். (ச-40)

## சுகாதாரச் சீர்கேடுகளால் அவலப்படும் முழங்காவில் ஆரம்பவித்தியாலய மாணவர்

**மேலும் தூசி மற்றும் புழுதியின் தாக்கத்தினால் மாணவர்கள் சுவாசம் தொடர்பான பாதிப்புக்களுக்கும் ஆளாகி வருகின்றமையால் ஆரம்ப வித்தியாலயத்தைக் கட்டட வசதிகளுடன் கூடிய வேறு இடத்தில் இயங்கச் செய்யுமாறு பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

அக்கராயன், மே 16

முழங்காவில் ஆரம்ப வித்தியாலய மாணவர்கள் சுகாதாரச் சீர்கேட்டுக்குள் உள்ளதாகப் பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

முழங்காவில் மகாவித்தியாலயத்தில் இருந்து கடந்த ஆண்டு முழங்காவில் ஆரம்ப வித்தியாலயம் பிரிக்கப்பட்டு வேறு பாடசாலையாக உருவாகியுள்ளது.

ஆனால் முழங்காவில் மகாவித்தியாலயத்திற்குரிய தற்காலிக கொட்டகைகளிலேயே ஆரம்ப வித்தியாலய மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

இங்குள்ள வீதிக்கருகில் தற்காலிகக் கொட்டகைகள் உள்ளமையால் போக்குவரத்தில் ஈடுபட்டுள்ள வாகனங்களால் எழும் தூசியும், புழுதியும் மாணவர்களைப் பாதிக்கின்றது.

மேலும் தற்காலிகக் கொட்டகைகளுக்குச் சிமெந்து இடாததால் மாணவர்களின் சீருடைகள் செம்பாட்டு நிறத்துக்கு மாறிவிடுகின்றன. இதனை எளிதாக அகற்ற முடியாதுள்ளது.

மேலும் தூசி மற்றும் புழுதியின் தாக்கத்தினால் மாணவர்கள் சுவாசம் தொடர்பான பாதிப்புக்களுக்கும் ஆளாகி வருகின்றனர்.

எனவே இந்தச் சிறுபிள்ளைகளின் நிலையைக் கருத்தில் கொண்டு முழங்காவில் ஆரம்ப வித்தியாலயத்தைக் கட்டட வசதிகளுடன் கூடிய வேறு இடத்தில் இயங்கச் செய்யுமாறு பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-18)

## நேர அட்டவணையை வெளியிட்டது வவுனியா தனியார் பஸ் சங்கம்

வவுனியா, மே 16

பயணிகளின் நன்மை கருதி வவுனியா மாவட்டத் தனியார் போக்குவரத்துச் சங்கம் கால அட்டவணையைக் காட்சிப்படுத்தியுள்ளது. தினமும் காலை முதல் இரவு வரை வவுனியாவிலிருந்து 30 சேவைகள் இடம்பெற்று வருகின்றன.

முதலாவது சேவை அதிகாலை 5.10 க்கும், இறுதிச் சேவை இரவு 9 மணிக்கும் வவுனியா தனியார் பஸ் தரிப்பிடத்திலிருந்து இடம்பெறும்.

இதன் பிரகாரம் தினமும் இந்த முப்பது சேவைகளும் காலை 5.10, 5.45, 6.20, 6.55, 7.30, 8.05, 8.40, 9.15, 9.45, 10.15, 10.40, 11.05, 11.30, 11.55 நண்பகல் 12.20, 12.50 ஆகிய நேரங்களிலும்.

பிற்பகலில் 1.20, 2.20, 2.50, 3.20, 3.50, 4.20, 4.50, 5.20, 6.00, 6.40, இரவு 7.20, 8.00 மணிக்கும் போக்குவரத்துக்கான சேவைகள் இடம்பெறுவதோடு வவுனியாவில் இருந்து இறுதிச் சேவை இரவு 9 மணிக்கு [illegible] (க-400)

## சரஸ்வதி சிலை விவகார வழக்கு முடிவுக்கு வந்தது

மட்டக்களப்பு,மே16

கடந்த சில மாதங்களுக்கு முன்பு மட்டக்களப்பு வின்சன்ட் உயர்தர பாடசாலையில் சரஸ்வதி சிலை அமைக்கப்பட்டதால் ஏற்பட்ட சர்ச்சையை தொடர்ந்து பொலிஸாரால் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

பாடசாலை மாணவிகளினால் சரஸ்வதி சிலை அமைக்கப்பட்ட நிலையில் அதனை மட்டக்களப்பு மெதடிஸ்த திருச்சபையினர் எதிர்த்த போது சர்ச்சை ஏற்பட்டது.

இந்தநிலையில் மட்டக்களப்பு மெதடிஸ்த திருச்சபையினர் மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் சிலை அமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து முறைப்பாடு ஒன்றைச் செய்திருந்தனர்.

குற்றவியல் நடவடிக்கை கோவை 81 கீழ், சரஸ்வதி சிலை அமைக்கப்பட்டதனால் சமாதானக்குலைவு ஏற்பட்டுள்ளதாக தெரிவித்து மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் மட்டக்களப்பு பொலிஸார் வழக்கொன்றை தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.எம்.எம். அப்துல்லா முன்னிலையில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. மட்டக்களப்பு வின்சன்ட் பெண்கள் உயர்தர பாடசாலை சார்பில் அதிபரும், மட்டக்களப்பு மெதடிஸ்த திருச்சபை சார்பில் மத குரு ஒருவரும் நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

பாடசாலையில் சரஸ்வதி சிலை அமைக்கப்பட்டதால் கடந்த இரண்டு மாதங்களில் சமாதானக் குலைவு எதுவும் ஏற்படவில்லை.

இதனால் சமாதானக் குலைவு ஏற்பட்டுள்ளது என தெரிவித்து தாக்கல் செய்யப்பட்ட வழக்கு பிரயோசனமற்றது. ஆதலால் இந்த வழக்கை முடிவுக்கு கொண்டு வருமாறு அதிபர் சார்பு சட்டத்தரணிகளான பேரின்பம் பிரேம்நாத், செல்வி கீர்த்திகா, எம்.முத்துராசா ஆகிய சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

இதனை ஆராய்ந்த மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதி அப்துல்லா சமாதானக் குலைவு ஏற்படாத நிலையில் வழக்கை முடிவுக்கு கொண்டு வருவதாக அறிவித்ததுடன் வழக்கு தாக்கல் செய்யப்படும் போது என்ன நிலையில் பாடசாலை இருந்ததோ அந்த நிலையை பேணுமாறும் உத்தரவிட்டார்.

மட்டக்களப்பு மெதடிஸ்த திருச்சபை சார்பில் சட்டத்தரணிகளான மரியம் சுலோஜன், ஏ.பளீல் ஆகியோர் முன்னிலையாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(ச)

## பள்ளிவாசலுக்கு நிதி ஒதுக்கீடு

கிழக்கு மாகாணசபை உறுப்பினர் மசூர் சின்ன லெவ்வையின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் அட்டாளைச்சேனை ஜும்ஆ பள்ளிவாசலுக்கு ரூபா 75 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அட்டாளைச்சேனை ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் நிர்வாக சபையினரின் வேண்டுகோளுக்கிணங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று மாகாணசபை உறுப்பினர் தெரிவித்தார்.

இவ்வாறு தனது வரவு - செலவுத்திட்ட நிதி மூலம் வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு இம்மாவட்டத்தில் பல்வேறுபட்ட உதவிகளையும் மாகாணசபை உறுப்பினர் மசூர் சின்ன லெவ்வை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## கிராம அலுவலருக்கு கௌரவிப்பு

அம்பாறை, சம்மாந்துறை பிரதேச செயலகப் பிரிவுக் குட்பட்ட மலையடிக் கிராமம், 02ஆம் பிரிவில் நீண்ட காலமாக கிராம அலுவலகராகக் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற எம்.ரீ.எம். நஸீரைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

இந்தநிகழ்வில் பிரதம விருந்தினராக சம்மாந்துறை பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் ஏ.எம். அப்துல் லத்தீப், கிராம அலுவலக நிர்வாக உத்தியோகத்தர் எம்.ஐ.எம்.இலியாஸ், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஐ.அஹமது நிஷக் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(ச)

## கிளினிக் கட்டடத்தில் பொலிஸார்: கர்ப்பிணித் தாய்மார் இக்கட்டில்

மன்னார், மே 16

மன்னார் சிலாவத்துறையில் அமைந்துள்ள கர்ப்பிணித் தாய்மாருக்கான கிளினிக் கட்டடத்தில் பொலிஸார் நிலைகொண்டுள்ளதால், மருத்துவ வசதிகளைப் பெறுவதில் கர்ப்பிணித் தாய்மார் பெரும் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

சிலாவத்துறைப் பகுதியில் கிளினிக் நடத்துவதற்கான கட்டட வசதிகள் எவையும் தற்போது இல்லை.

மேலும் இனிவரும் காலங்களில் சிலாவத்துறை வைத்தியசாலையில் வைத்துக் கர்ப்பிணிகளுக்கு கிளினிக் வசதிகளை வழங்க முடியாதென அங்குள்ள வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளது.

எனவே குறித்த கட்டடத்தைப் பொலிஸாரிடமிருந்து பெற்றுத் தருமாறு முசலி பிரதேசப் பிரசைகள் குழுவினர் மன்னார் மாவட்டப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளதோடு கடிதம் ஒன்றையும் கையளித்ததாக அதன் தலைவரான எம்.சரோருபன்குரூஸ் தெரிவித்தார்.

(க-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# தேசியப் போட்டியில் தெல்லிப்பழை

யாழ்ப்பாணம் தேசிய இளைஞர் மன்றத்தினால யாழ் மாவட்டப் பிரதேச தேசிய இளைஞர் மன்ற அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பழை பிரதேச தேசிய இளைஞர் மன்ற அணி வெற்றி பெற்று யாழ் மாவட்ட சம்பியனானது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இறுதிப் போட்டியில் தெல்லிப்பழை பிரதேச தேசிய இளைஞர் மன்ற அணியும் நல்லூர் பிரதேச தேசிய இளைஞர் மன்ற அணியும் மோதிக் கொண்டன.

இரு அணிகளும் யாழ் மாவட்டத்தில் முன்னணி அணிகளாக விளங்குவதால் வெற்றிக்காக கடுமையாக மோதிக் கொண்டன.

முதற்பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் மாறி மாறி புள்ளிகளைப் பெற்றாலும் இறுதி நிமிடத்தில் தெல்லிப்பழை தேசிய இளைஞர் மன்ற அணி மிகவும் உற்சாகத்துடன் விளையாடியதால் 11: 9 புள்ளிகள் என்ற அடிப்படையில் முன்னிலை பெற்றது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் பலத்த எதிர்பார்ப்புகளுடன் மத்தியில் களமிறங்கின.

எனினும் இரண்டாம் பாதி ஆட்டத்திலும் தெல்லிப்பழை பிரதேச தேசிய இளைஞர் மன்ற அணி நல்லூர் அணியை விட ஒரு புள்ளியை கூடுதலாகப் பெற்று 12:11 புள்ளிகள் என்ற அடிப்படையில் முன்னிலை பெற்றது.

ஆட்ட நிறைவில் தெல்லிப்பழை பிரதேச தேசிய இளைஞர் மன்ற அணி 23: 20 புள்ளிகள் என்ற அடிப்படையில் நல்லூர் பிரதேச தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அணியை வெற்றி கொண்டு சம்பியனானது.

இந்த வெற்றியின் மூலம் இந்த மாதம் 19 ஆம்,20 ஆம் திகதிகளில் மஹரகமவில் இடம் பெறவுள்ள தேசிய மட்டப் போட்டிக்கு தெல்லிப்பழை அணி தகுதி பெற்றது. தேசிய போட்டியில் பங்கு பற்றுவதற்காக தெல்லிப்பழை அணி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை தென்னிலங்கை புறப்படவுள்ளது. (ங-86)

## சுந்தரபுரம் அ.த.க. சம்பியன்

வவுனியா,மே 16

வவுனியா மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் இடம் பெற்ற மேசைப்பந்தாட்டப் போட்டியின் சகல வயதுப் பிரிவுக்குமான ஆண்,பெண் இருபாலாருக்குமான ஆட்டங்களில் வவுனியா வடக்கு வலயத்தைச் சேர்ந்த சுந்தரபுரம் அ.த.க பாடசாலை மாவட்டச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

இதில் முதல் இடங்களையும் பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு-

15 வயதுப் பிரிவு (ஆண்கள்)

முதலாமிடம் -வவுனியா வடக்கு சுந்தரபுரம் அ.த.க பாடசாலை, இரண்டாமிடம்- வவுனியா தெற்கு அல்இக்பால் முஸ்லிம் வித்தியாலயம்

15 வயதுப் பிரிவு(பெண்கள்)

முதலாமிடம் -வவுனியா வடக்கு சுந்தரபுரம் அ.த.க பாடசாலை,இரண்டாமிடம்- வவுனியா தெற்கு இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி.

19 வயதுப் பிரிவு (ஆண்கள் )

முதலாமிடம்- வவுனியா வடக்கு சுந்தரபுரம் அ.த.க பாடசாலை, இரண்டாமிடம்- வவுனியா தெற்கு தமிழ் மத்திய மகா வித்தியாலயம், மூன்றாமிடம்- வவுனியா தெற்கு அல் இக்பால் முஸ்லிம் வித்தியாலயம்

19 வயதுப் பிரிவு(பெண்கள்)

முதலாமிடம் -வவுனியா வடக்கு சுந்தரபுரம் அ.த.க பாடசாலை,இரண்டாமிடம் - இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி. (ங-400)

## இறுதி வரை பரபரப்பு

# வவுனியா இளைஞர் கழகம் வெற்றி



வவுனியா மாவட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையில் மிகவும் பரபரப்பாக இடம்பெற்ற உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் வவுனியா பிரதேச இளைஞர் கழகம் சமனிலை தவிர்ப்பு உதை மூலம் சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் வவுனியா மாவட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையில் நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் வவுனியா நகர சபை மைதானத்தில் இடம் பெற்றது.

இதில் வவுனியா பிரதேச இளைஞர் கழக அணியும், செட்டிகுளம் பிரதேச இளைஞர் கழக அணியும் மோதிக் கொண்டன.

ஆரம்பம் முதல் இறுதி வரை மிகவும் பரபரப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் இரு அணி வீரர்களும் தமது அணிக்காக கோலைப் பெறுவதற்கு பகீரதப் பிரயத்தனம் செய்தனர். இரு அணி வீரர்களும் கோலைப் பெறுவதற்கு எதிர் அணியின் எல்லைப் பகுதிக்குள் பந்துடன் செல்வதும் பின்னர் எதிரணிகளின தடுத்தாடல் உத்திகளினால் மீண்டும் தமது நிலைக்குத் திரும்புவதுமாக இருந்தனர். இடைவேளைக்கு முன்னர் இரு அணி வீரர்களும் கோலைப் பெறுவதற்குத் கடுமையாகப் போராடினர். ஆனாலும் பலன் கிடைக்கவில்லை. இரு அணிகளும் கோல்களைப் பெறாத நிலையில் சமனிலையில் முதற் பாதி ஆட்டம் முடிவுற்றது.

இடை வேளையின் இரு அணி வீரர்களிடமும் ஆட்டத்திலும் அனல் பறந்தது. அதற்குள் வலைக்குள் நுழைந்தது கோல். ஆரம்பமாகி சற்று நேரத்தில் வவுனியா பிரதேச இளைஞர் கழக வீரர் பஸ்லஸ் தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தைச் சரியாக பயன்படுத்தி முதலாவது கோலைப் போட்டார். இதனையடுத்து ஆட்டம் மேலும் சூடு பிடித்தது. ஆட்டம் நிறைவடைவதற்கு சில நிமிடங்கள் இருக்கும் போது செட்டிகுளம் இளைஞர் கழக வீரர் முருகா மிகவும் அபாரமாக ஒரு கோல் அடித்து ஆட்டத்தைச் சமப் படுத்தினார். இதனால் போட்டி 1:1 என்ற கோல் அடிப்படையில் சமனிலையில் முடிந்தது.

அதனைத் தொடர்ந்து வெற்றி தோல்வியை நிர்ணயிப்பதற்காக வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதையிலும் இரு அணியினரும் தலா 5 கோல்களைப் பெற்றுக் கொண்டனர். அடுத்து மேலதிகமாக வழங்கப்பட்ட உதையை வவுனியா இளைஞர் கழக வீரர் கோலாக்க ,செட்டிக்குளம் இளைஞர் கழகத்தினர் தமது சந்தர்ப்பத்தை வீணாக்கினர். இதனால் வவுனியா இளைஞர் கழக அணியினர் 6:5 என்ற அடிப்படையில் வெற்றி பெற்று மாவட்டச் சம்பியனாகினர். (ங-400)

# அதிரடியான ஆட்டத்தால் வென்றது ஜொனியன்ஸ்

யாழ்ப்பாணம், மே 16

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் ஜொலிஸ்ரார் வெற்றிக் கிண்ணத்துக்கான 30 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. இதில் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணி 9 இலக்குகளால் வெற்றி பெற்றது.

**138 ஒட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணி 17.4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் ஒரு இலக்கினை மாத்திரம் இழந்து 141 ஓட்டங்களை பெற்றது.**

இந்தப் போட்டியில் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நியூஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 24.3பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 137 ஓட்டங்களை பெற்றது.

இதில் நிஷாந் 29 ஓட்டங்களையும்,ரமணன் 19 ஓட்டங்களையும், சிவசர்மன் 18 ஓட்டங்களையும், கஜேந்திரன் 16 ஓட்டங்களை தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணி சார்பாக மயூரன் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 34 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் அகிலன் 4.3 பந்து பரிமாற்றங்கள் பந்து வீசி 15 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் விதுஷன் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 22 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் ரதீஸ்குமார் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 31 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

138 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணி 17.4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் ஓர் இலக்கினை மாத்திரம் இழந்து 141 ஓட்டங்களை பெற்று 9 இலக்குகள் வித்தியாசத்தில் வென்றது. இதில் றஜீத்தன் 53 ஓட்டங்களையும், அன்புஜன், குமணன் ஆகியோர் முறையே ஆட்டம் இழக்காமல் 63,13 ஓட்டங்களை தமது அணி சார்பாக பெற்றனர். (ங-23)

## கரம் போட்டி முடிவுகள்

*வவுனியா மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் கரம் சுற்றுப் போட்டியில் 15 வயது பெண்களுக்கான போட்டியிலும் 19 வயதினருக்கான இருபிரிவிலும் சுந்தரபுரம் அ.த.க பாடசாலை சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.*

*இப்போட்டிகள் கடந்த வெள்ளிக்கிழமை வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் இடம் பெற்றன.*

*இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:*

*15 வயது- ஆண்கள் : வவுனியா வடக்கு சுந்தரபுரம் அ.த.க பாடசாலை வவுனியா தெற்கு அல்இக்பால் முஸ்லிம் வித்தியாலயம் வவுனியா தெற்கு வீரபுரம் மணிவாசகர் வித்தியாலயம்.*

*19 வயது ஆண்கள் : சுந்தரபுரம் அ.த.க வித்தியாலயம், வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம்,சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம்.*

*பெண்கள் : சுந்தரபுரம் அ.த.க பாடசாலை, இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி, அல்இக்பால் முஸ்லிம் வித்தியாலயம்.*

*இதேவேளை 15 வயதுப் பிரிவு பெண்களுக்கான போட்டியில் முதலாமிடத்தை அல்இக்பால் முஸ்லிம் வித்தியாலயமும் இரண்டாமிடத்தை ,சுந்தரபுரம் அ.த.க பாடசாலையும் மூன்றாமிடத்தை வவுனியா இறம்பைக்குளம் மகா வித்தியாலயமும் பெற்றுக் கொண்டன. (ங-400)*



*[illegible] ழ்ற்ரன் கல்லூரி மைதானத்தில் நடத்தப்பட்ட விளையாட்டு விழாவில் கைக் காளைச் சவாரி.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பஞ்சாப்பை வீழ்த்தியதால் அடுத்த சுற்றுக்குள் டெல்லி

ஒஜாவின் அதிரடியாலும் உமேஸ் யாதவ்வின் துல்லியமான பந்து வீச்சினாலும் பஞ்சாப்பை வீழ்த்தியது டெல்லி.

ஐ.பி.எல். தொடரின் 64 ஆவது ஆட்டம் டெல்லியில் நடைபெற்றது. இதில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியும் டெல்லி டேர்டெவின்ஸ் அணியும் மோதிக்கொண்டன. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பஞ்சாப் அணித் தலைவர் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார். மன்டிங்சிங்கும் மார்ஸ்ஸும் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கினர். இருவரும் இணைந்து 24 ஓட்டங்களைப் பகிர்ந்து கொண்டபோது ஆரோனின் பந்தில் மார்ஸ் 13 ஓட்டங்களுடன் வீழ்ந்தார். அதன்பின்னர் சைனியும் மன்டிங்சிங்கும் இணைந்து அணியை மீட்டெடுக்க முற்பட்டனர். ஆனாலும் அந்த முயற்சி பலிக்கவில்லை. அதிரடியாக ஆடி 21 ஓட்டங்களை குவித்த மன்டிங்சிங்கும் ஆரோனின் பந்தில் அவுட் ஆனார். அதனைத் தொடர்ந்த சைனியும் யாதவ் பந்தில் நடையைக் கட்டினார். பின்னர் ஒருபுறத்தில் அணித் தலைவர் ஹசி நிலைத்து நின்ற ஆட மறுமுனையில் பஞ்சாப்பின் இலக்குகள் ஒவ்வொன்றாகச் சரிந்து கொண்டிருந்தன. மில்னர் 4 ஓட்டங்களுடன், அசார் மொஹமட் 9 ஓட்டங்களுடனும் குர்கீட்டி சிங் 8 ஓட்டங்களுடனும், சாவ்லா 10 ஓட்டங்களுடனும், பிரவீன் குமார் 8 ஓட்டங்களுடனும் ஒவ்வொருவராக வெளியேற பஞ்சாப்பின் நிலை படுமோசமாக மாறத் தொடங்கியது.

எனினும் நம்பிக்கை இழக்காமல் அணித் தலைவர் ஹசி அடித்து விளையாடி 40 ஓட்டங்களை எடுத்தார். 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் பஞ்சாப் அணி 8 இலக்குகளை இழந்து வெறும் 136 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

இலகுவான இலக்கை விரட்டத் தொடங்கிய டெல்லிக்கு டேவிட் வோர்ணர் அதிரடி தொடக்கம் தர முற்பட்டு 14 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். அதிரடி வீரர் சேவாக்கும் அவன்னாவின் பந்தில் போல்ட் ஆனார். பின்னர் வந்த வேணுகோபால் ராவும் நீடிக்கவில்லை. எனினும் தொடச்சியாக இலக்கைத் தடுக்கும் முகமாக அணியின் சுவராக நின்று சமர் ஆடினார் மஹேல. அணிக்கு புத்துயிர் ஊட்டுவார் என்று நம்பப்பட்ட ரோஸ் ரெய்லர் ஓட்டம் எதனையும் பெறாமல் வந்த வேகத்திலேயே திரும்பினார். அதன்பின்னர் மஹேலவுடன் இணைந்து கொண்ட ஒஜா இரண்டு சிக்ஸர்களை அடுத்து அடுத்து விளாசி தன்னுடைய அதிரடி அத்தியாயத்தை ஆரம்பித்தார். அவர் 29 பந்துகளில் 34 ஓட்டங்களைக் குவித்து டமிழந்தார். பின்னர் வந்த பதானும் மஹேலவும் இணைந்து அணியின் வெற்றியை உறுதி செய்தனர். மஹேல ஆட்டம் இழக்காமல் 56 ஓட்டங்களை குவித்தார். இர்பான் பதான் 10 பந்துகளில் 19 ஓட்டங்களை எடுத்தார். இறுதியில் 19 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 140 ஓட்டங்களை எடுத்து 5 இலக்குகள் வித்தியாசத்தில் பஞ்சாப்பை வென்றது டெல்லி. இந்த வெற்றியின் மூலம் அடுத்த சுற்றுக்கு நுழையும் வாய்ப்பை டெல்லி அணி உறுதிசெய்து கொண்டது. பஞ்சாப் அணியின் மூன்று இலக்குகளைச் சரித்த உமேஸ் யாதவ் ஆட்ட நாயகனாகத்தெரிவானார். (ங)



## வேகப்பந்து வீச்சாளர் அன்டர்ஸனுக்கு விருது



இங்கிலாந்தின் 2012ஆம் ஆண்டுக்கான சிறந்த கிரிக்கெட் வீரராக வேகப் பந்து வீச்சாளர் ஜேம்ஸ் அன்டர்ஸன் தெரிவாகியுள்ளார்.

கடந்த 2 வருடங்களாக இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் முதுகெலும்பாக மாறி எதிரணியின் இலக்குகளை வேட்டையாடும் 29 வயதான அன்டர்ஸன் இந்த விருதுக்குத் தெரிவாகியிருப்பது இதுவே முதல் முறை. சிறந்த வீரருக்கான தெரிவுப் பட்டியலில் இங்கிலாந்தின் ஒரு நாள் போட்டி அணித்தலைவர் அலஸ்ரர் குக், 20/20 போட்டி அணித் தலைவர் புறோட் ஆகியோரை பின்தள்ளியே ஜேம்ஸ் அன்டர்ஸன் விருதினை வென்றுள்ளார். இங்கிலாந்தில் மட்டுமல்லாது வேகப் பந்து வீச்சுக்கு பெரிதாக ஒத்துழைக்காத ஐக்கிய அரபு எமிரேட்ஸ், இலங்கை போன்ற ஆடுகளங்களிலும் கடந்த வருடம் அன்டர்ஸன் அபாரமாகப் பந்து வீசி இலக்குகளைக் கொய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## முதல் நிலை வீரராக மலிங்க

2012 ஆம் ஆண்டுக்கான இலங்கைக் கிரிக்கெட் வீரர்களின் ஒப்பந்தப் பட்டியலை இலங்கைக் கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது. அறிவிக்கப்பட்டுள்ள பட்டியலில் பிரதான பட்டியலாக 6 வகையாக வீரர்கள் பிரிக்கப்பட்டு ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது. அதைத் தவிர, மாகாண மட்ட ஒப்பந்தங்களும் ஏராளமான வீரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இலங்கைக் கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் ஒவ்வொரு பிரிவுக்குமான ஊதியத்தொகை குறித்த தகவல்கள் எவையும் வெளியிட்டிருக்கப்படவில்லை. எனினும் கடந்த வருட ஒப்பந்த ஊதியத்தை விட அதிகரிப்பு ஏதும் மேற்கொள்ளப்படுவதற்கான வாய்ப்புக்கள் இல்லையென முன்னரே செய்திகள் வெளியாகியிருந்தன.

முதல்நிலைப் பிரிவு: திலகரட்ண டில்ஷான், குமார் சங்ககார, மஹேல ஜெயவர்தன, திலான் சமரவீர, லசித் மலிங்க.

இரண்டாம் பிரிவு: நுவான் குலசேகர, அன்ஜலோ மத்தியூஸ், ரங்கன ஹேரத், உபுல் தரங்க.

மூன்றாம் பிரிவு: பிரசன்ன ஜெயவர்தன

நான்காம் பிரிவு: தரங்க பரணவிதான, சுராஜ் ரந்தீவ், அஜந்த மென்டிஸ், டினேஷ் சந்திமால்

ஐந்தாம் பிரிவு: டில்ஹார பெர்னான்டோ, சானக வெலகெதர, திஸ்ஸர பெரேரா

ஆறாம் பிரிவு: சாமர கப்புக்கெதர, சுரங்க லக்மால், லஹிரு திரிமன்ன


மாகாண மட்டப் பிரிவுகள்:

பிரிவு ஏ: சாமர சில்வா, திலின கண்டம்பி, தம்மிக்க பிரசாத், டிமுத் கருணாரத்ன, பர்வீஸ் மஹரூப், ஜீவன் மென்டிஸ், கௌஷால் சில்வா, சச்சித்திர சேனநாயக்க, ஷமின்ட எரங்க

பிரிவு பி: டில்ருவான் பெரேரா, டில்ஷான் முனவீர, ஜானக குணரத்ன, கோசல குலசேகர, கௌஷால் ஜனித் பெரேரா, மலிங்க பண்டார, மலின்ட சிரிவர்தன, நதீர நாவல, நிலங்க பிரேமரத்ன, ரொஷான் சில்வா, சச்சித்திர சேரசிங்க, சஜீவ வீரக்கோன், சீக்குகே பிரசன்ன, தரங்க லக்ஷித்த, மலிந்த வர்ணபுர, நுவான் பிரதீப்

பிரிவு சீ: அன்ஜலோ பெரேரா, பானுக்க ராஜபக்ஷ, ஜெஹான் முபாரக், கௌஷால் லொக்குஆராய்ச்சி, மஹேல உடவத்த, மலிந்த புஷ்பகுமார, ரி.எம்.சம்பத்

பிரிவு டி: அஷான் பிரியஞ்சன, அஷான் சில்வா, இசுரு உதான, தனிஷ்க எல்விந்திகே, ஜெஹான் டீ சில்வா, கித்துருவன் விதானகே, சொஹன் பெரேரலெஸ்ஸ, உதர ஜெயசுந்தர. (5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
1938★10★10

மறைவு
2010★06★08

### அமரர் சுந்தரம் விநாயகமூர்த்தி

(ஓய்வுபெற்ற ஆசிரியர், யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

மனைவிக்கு உத்தம புருஷனாய் பிள்ளைகளுக்கு
நல்ல தந்தையாய்.... மாணவச் செல்வங்களுக்கு நல்லாசானாய்
வாழ்ந்து எம் மனங்களில் காவியமாகிவிட்ட.... அப்பா
எங்களுடன் கதைத்துச் சிரித்து.. சிறு சிறு விடயங்களுக்கும்
வாய்த்தர்க்கம் செய்த.... ஒவ்வொரு நிமிடங்களையும்
கனத்த இதயத்துடன் நினைவு கூருகின்றோம்....
உங்களின் சொல், செயல், சிந்தனைகள் அறிவுரைகள்
எங்களை வழிநடத்தும்...
அதற்கெம்மை ஆசீர்வதியுங்கள்.
இந்நாளில் யாழ். சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் அன்னாரின்
பழைய மாணவர்கள் சிலர்...

"அமரர் விநாயகமூர்த்தி" புலமைப் பரிசில் நிதியத்தை 2011 இல் ஆரம்பித்து
வைத்தமையை நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

மீசாலை வடக்கு,
மீசாலை

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

## அம்பலமாகியது
# ஐ.பி.எல். சூதாட்டம்

ஐ.பி.எல். தொடரில் பங்கேற்கும் வீரர்கள், அணி உரிமையாளர்கள், வெளிநாட்டு அணித்தலைவர்கள் உள்ளிட்ட சிலர் கிரிக்கெட் சூதாட்டத்தில் ஈடுபட்டது அம்பலமாகியுள்ளது.

பிரபல இந்திய தொலைக்காட்சி சேவை, புலனாய்வு செய்தி ஒன்றை வெளியிட்டது. இதில், ஐ.பி.எல்., தொடரில் பங்கேற்கும் வீரர்களுடன் ரகசியமாக உரையாடி உண்மைகளைக் கண்டறிந்துள்ளது. டெக்கான் சார்ஜர்ஸ் அணிக்காக பங்கே ற்கும் சுதிந்திரா என்ற வீரர், கடந்த ஆண்டு நடந்த முதல் தர ஆட்டம் ஒன்றில், தொலைக்காட்சி செய்தியாளரின் விருப்பத்திற்கு ஏற்ப, வேண்டுமென்றே முறையற்ற பந்தை வீசியுள்ளார் இவர். ரூ. 60 லட்சம் கொடுத்தால், ஐ.பி.எல்., தொடரில் அணி மாற தயார் என்றும் கூறியுள்ளார்.

இதே போல கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி வீரர் ஸ்ரீவாஸ்தவ் முறையற்ற பந்து வீசுவதற்கு ரூ. 10 லட்சம் கேட்டுள்ளார். புனே அணிக்காக விளையாடும் மோனிஸ் மிஸ்ரா அதிர்ச்சித் தகவல் ஒன்றை தெரிவித்துள்ளார். இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ.) விதிமுறைப்படி சர்வதேச ஆட்டத்தில் பங்கேற்காத வீரர்கள், ஐ.பி.எல்., தொடரில் அதிகபட்சமாக ரூ. 30 லட்சம் தான் பெற முடியும். ஆனால், மிஸ்ராவுக்கு உரிமையாளர்கள் ரூ. 1.45 கோடி கொடுத்து தக்க வைத்துள்ளனர். இவருக்கு ரூ. 1 கோடி வரை கறுப்புப் பணமாக கொடுத் துள்ளனர். சில நேரங்களில் சொகுசுக் கார் போன்றவற்றை பரிசாகக் கொடுத்து இளம் வீரர்களைக் கவர்கின்றனராம். தற்போதைய ஐ.பி.எல்., தொடரில், ஒரு அணிக்குத் தலைவராக உள்ள வெளிநாட்டு வீரர் ஒருவரும் சூதாட்டத்தில் ஈடுபட்டது தெரிய வந்துள்ளது.

இது குறித்து பி.சி.சி.ஐ., தலைவர் சீனிவாசன் கூறுகையில், ஐ.பி.எல். நிர்வாகக் கூட்டத்தில் கூடி, சம்பந்தப்பட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார். (5)


அனைத்து கற்கை நெறிகளுக்குமான
புதிய பிரிவுகள் ஆரம்பம்
19.05.2012
21.05.2012
காலை 10.00 மணி

IIS INSTITUTE OF INFORMATICS STUDIES
இல 100, மணிக்கூட்டு வீதி . யாழ்ப்பாணம்
தொ.பே. 021 222 2831

## தேவை



- Graphics Designer
- Typesetter
- Data Entry Operator

நாளையும், நாளைமறுதினமும் காலை 10 மணிக்கு சுயவிவரக் கோவையுடன் நேரில் வரவும்.

359, Kasthuriyar Road, Jaffna
T.P 0215672222

## சரவணா ரெக்ஸ்



வாடிக்கையாளருக்கான விசேட சலுகை

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு இந்தியாவில்
இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட
SPECIAL OFFICE WEAR சாறிகள்
இந்தியா விலைக்கே
14.05.2012 தொடக்கம் விற்பனை செய்யப்பட்டு
வருகின்றது என்பதனை மகிழ்ச்சியுடன்
அறியத்தருகிறோம். (கையிருப்பு முடியும் வரை)

இடம் - சரவணாரெக்ஸ் களஞ்சியசாலை
சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம்.
(ஆடித்தள்ளுபடி நடைபெற்ற இடம்)

காலம்- 14.05.2012 தொடக்கம்
கையிருப்பு முடியும்வரை
நேரம்- காலை 9.00 மணி தொடக்கம்
இரவு 9.00 மணி வரை
1 சில்க் சாறி- 500/=
1 கொட்டன் சாறி- 500/=



## தேவை

எழுதுவினைஞர் தேவை.
தொடர்பு:
தொ.பே.077 175 3838
D.C.S. மானிப்பாய்
மகளிர் கல்லூரி அருகில்

## மணல் விற்பனைக்குண்டு

நாற்பது வருடங்களாக கட்டட
வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும்
சிறந்ததெனும் நாமத்தைப் பெற்ற உப்புத்
தன்மையற்ற மணல் 26 வருடங்களின்
பின் இப்போது யாழ்ப்பாணத்தில்

4 ரெக்டர் - 22,500/-
அரிந்த கல்லும்
விற்பனைக்குண்டு.
(கல்லு 1 - 38/-)

தொடர்புகளுக்கு
கண்ணா
0776766499

## இந்திய சாஸ்திரியார் வருகை

யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்
ஓம் சக்தி அருள் வாக்குப் பெற்ற பரம்பரை ஜோதிடர்
S.N.குமாரசாமி
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, தொழில் முன்னேற்றம் இன்மை, கல்வித் தடையா, குழந்தைப்பாக்கியம், தீராத வியாதியா? மற்றும் எந்தப் பிரச்சினைகளுக்கும் நேரில் சந்திக்கவும்.
(காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை) செவ்வாய் விடுமுறை
பீப்பிள்ஸ் இன் (PEOPLE INN)
இல.112/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.(பில்லைவாரி ஹோட்டல் முன்பாக)
T.P.072 6816681, 0726816691

## பணியாளர்கள் தேவை

மிலேனியம் உல்லாசப்பயணிகள் விடுதியின் புதிய நிர்வாகத்துக்கு சமயல் செய்பவர் (Cook) மற்றும் பணியாளர்கள் தேவை.

இன்று காலை (16.05.2012) புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு நேரில் சந்திக்கவும்.

தொலைபேசி இலக்கங்கள்
0212225876
0770884630

76/60 ,இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்
(கம்பஸ் வீதி)

## வேலை வேண்டுமா?



Click Here
jobs.jaffnaonline.info
jobs.jaffnaonline.info

## சிற்றி மெடிக்கல் சென்ரர் CMC
## CITY MEDICAL CENTRE

இல-56,எ-9 வீதி,கிளிநொச்சி 021 228 5388

2012.05.16 ஆம் திகதியன்று 3ஆவது ஆண்டில் தனது சேவையை தொடர்வதை முன்னிட்டு எமது வாடிக்கையாளர்களுக்கும் நலன்விரும்பிகளுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு எமது சேவை மேலும் சிறப்புற உங்களின் முழு ஒத்துழைப்பையும் வேண்டி நிற்கின்றோம்.

வெளிநோயாளர் பிரிவு OPD
பொதுவைத்திய நிபுணத்துவ சேவை VP
பெண்நோயியல்,மகப்பேற்று வைத்திய சேவை VOG
சத்திர சிகிச்சை நிபுணத்துவ சேவை SURGERY
ஸ்கானிங் SCANING
மருத்துவ ஆய்வு கூடம் MEDICAL LABORATORY
குடும்ப மருந்தகம் PHARMACY & GROCERY

நிர்வாகத்தினர்
வைத்தியர்கள்
பணியாளர்கள்

## "விசா ஆலோசனை வியாபாரம்" நன்கு "சூடு பிடிக்கின்றது" விற்பனைக்கு பிந்திய சேவைகளும் இடம்பெற்றிருப்பதால் கடந்த 2 நாள்களும் நூற்றுக்கணக்கில் மக்கள் கூட்டம்

- ஆஸ்திரேலியா 5 வருட குடும்ப விசா நிபந்தனைகள், அந்நாட்டு அரசினால் ஜூன் 30 உடன் இறுக்கமடைவதனால்...............
- இந்தத் தருணத்தை எமக்குச் சார்பாகப் பயன்படுத்த வேண்டும். எனவே இம்மாதம் 18 ஆம் திகதிக்கு முன்னர் விரைந்து வாருங்கள். உங்களுக்காக 18ஆம் திகதி வரை எமது விசேட ஆலோசனைக் கருமபீடம் காலை 7மணி முதல் இரவு 7மணிவரை இயங்குகின்றது.

குறிப்பு:- விற்பனைக்கு பிந்திய சேவைகள்
ஆஸ்திரேலியா விமான நிலையத்திலிருந்து இலவசமாக அழைத்துச் செல்லல்,
தொழில் வாய்ப்புக்கான இலவச ஆலோசனைகள்,
குறைந்த கட்டண தங்குமிட வசதிகள்.

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்டெட் (PV 82703)
(முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்)



தலைமைக்காரியாலயம்
37, சிவகுருநாதர் லேன்,
ஸ்ரீறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல- 0212219016, 0758574136

கிளைகள்

115 A,
இரத்தினபுரம் வீதி,
கிளிநொச்சி.
0212285544

22 A,
பிராங்பெட் பிளேஸ்,
பம்பலப்பிட்டி.
0112508443

504, Hampton street,
Melborn,Australia
0061390437100
0061412479209


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.05.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

சூழ்நிலைக்கு
கட்டுப்பட்டே
மனித வாழ்வு
நடக்கிறது.
-அண்ணா-

# புதன் பொய்கை A

உதயன் 16 மே 2012 புதன்கிழமை பக்கங்கள்: நான்கு

# உறவுகள் மேம்பட உன்னத வழிகள்



மாசிலாமணி

நம்முடைய வாழ்க்கையின் பெரும் பகுதி நேரம் மற்றவர்களோடு தொடர்பு கொள்வதிலேயே கழிகிறது. குடும்ப வாழ்க்கை, தொழில் வாழ்க்கை, சமுதாய வாழ்க்கை என்று எல்லா நிலைகளிலும் உறவுகள், தொடர்புகள் இல்லாமல் வாழ்க்கை இல்லை. எந்த நிலையிலும் தனித்து இயங்குவதும் இல்லை. மற்றவர்களின் ஒத்துழைப்பு எல்லாநிலைகளிலும் தேவைப்படுகிறது. இந்த மனித உறவுகள் மனத்திற்கு மகிழ்ச்சி அளிக்க வேண்டாமா?

மனிதனின் மனதோடு பிறந்த அகங்காரம் என்ற குணமே எல்லா உறவுகளின் சீர் கேட்டிற்கும் அடிப்படையாகிறது. எல்லாச் சான்றோர்களும் ஆன்மிக அறிஞர்களும் மனிதர்களுக்குப் போதிப்பது "ஆணவம் அற" என்பது தான். உறவுகளில் பணிவும், இன்சொல்லும், அடக்கமும், அங்கீகாரமும் இருந்துவிட்டால் அது இனிமையான சூழலை வாழ்க்கையை நமக்கு வழங்கிவிடும்.

இரவீந்திரநாத் தாகூர், ஒரு முறை ஒரு படகு வீட்டில் பயணம் செய்து கொண்டே இரவின் குளிர்ச்சியிலும் நிலவின் வெளிச்சத்திலும் பரந்த ஆற்றின் நீர்ப் பரப்பில் படைப்புக்களை ஆனந்தமாக உருவாக்கவேண்டும் என்று ஏற்பாடு செய்துவிட்டு, எழுதுகோளையும் காகிதத்தையும் எடுத்துக்கொண்டு மெழுகுவர்த்தியின் வெளிச்சத்தில் எழுத அமர்ந்தாராம். அன்றைக்கு அவரால் தன் கற்பனைக் குதிரையை இயக்க இயலவில்லை. காலம் கடந்து கொண்டே இருந்தது. சலிப்பு ஏற்பட்டுவிட்டது சே! என்னடா இன்றைக்கு ஒன்றும் பிடிபடவே மறுக்கிறதே சரி, "பார்க்கலாம் என்று மெழுகுவர்த்தியை அணைத்துவிட்டு படகு வீட்டில் இருந்து வெளியே பார்த்தாராம். அந்த இரவில் நிசப்தத்தில் தென்றலின் குளிர்ச்சியில் பௌர்ணமி நிலவின் வெளிச்சத்தில் நதியின் நீர்ப் பரப்பு பார்த்த மாத்திரத்தில் பரவசத்தை மனதில் உருவாக்கியது. மனம் மகிழ்ச்சியடைந்தது உடல் தளர்ந்த நிலையிலும் உள்ளத்தில் உணர்வு பீறிட்டதாம்? உடனே காகிதத்தை எடுத்து மள மளவென்று நிறைய எழுதினாராம் பாருங்கள் இரவில் இனிமையை நிலவின் வெளிச்சத்தை மெழுகுவர்த்தி வெளிச்சம் மறைத்து விட்டது. கற்பனையைக் காணாமல் செய்துவிட்டது. மெழுகுவர்த்தியின் வெளிச்சம் போன பின் தான் நிலவின் வெளிச்சமும் இனிமையும் கண்ணுக்கு தெரிந்தன. மனம் மகிழ்ந்தது. கற்பனை பிறந்தது. இப்படித்தான் நம்முள் இருக்கின்ற ஆணவம்,திமிர், அகங்காரம், அகந்தை, தற்பெருமை வாழ்வின் இனிமையை தகர்த்து விடுகிறது. நல்ல மகிழ்ச்சியான உறவுகளுக்கு அகந்தை தடை, அது வாழ்க்கையை இல்லாமல் செய்து விடலாம்.

ஆணவத்தை விட வேண்டும் என்றால் ஓர் உணர்ச்சியற்ற "பிண்டமாக" வாழவேண்டுமா? என்று நினைக்க வேண்டாம் அந்த உணர்வை நம் செயல்பாடுகளில் விடாமுயற்சியில், சாதனைகளில் காண்பிக்கலாம் THROW DO WIN A CHALLENGE என்று சொல்வார்கள்.

ஆம்! வாழ்க்கையின் செயற்பாடுகளை, சவாலாக சந்திப்பதற்கு ஆணவமும் அகங்காரமும் தேவை மற்றையவர்களை மட்டம் தட்டவும் தோற்கடிக்கவும் அது தேவையில்லை.

தூண்டில் போடுகிறவனுக்கு தக்கையின் மீது கண் இருக்க வேண்டும் என்று சொல்லுவார்கள். அது போல வெற்றியாளனுக்கு மற்றவர்களோடு கொள்ளும் உறவின் மீது கவனம் இருக்க வேண்டும். உறவுகளை உதாசீனப்படுத்தி விட்டால், வெற்றி வெளியேறி விடும்.

❖உறவுகள் உன்னதமானது என்பதை உணரவேண்டும்

❖உறவுகள் உள மகிழ்ச்சி தருபவை .

❖எந்த நிலையிலும் உறவுகள் கெட நான் அனுமதியேன். என்று உள்ளத்துள் எண்ணம் கொள்ள வேண்டும்

சில குடும்பங்களில் சில சொந்தங்களோடும் ,பந்தங்களோடும் உறவுகள் நூலறுந்த பட்டமாக சிதைந்து போய்விட்டிருக்கும். ஏதோ ஒரு சூழ் நிலையில் தங்களைப் புறக்கணித்ததாக மற்றவர்களின் விளக்கங்களைக் கேட்காமல் இவர்களும் புறக்கணித்து விடுவார்கள். " குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை" என்ற பழமொழியை பழைய மொழி என்று மறந்து போய் விடுவார்கள். மனக் கசப்பில் வாழ்ந்துகொண்டிருப்பார்கள்.

மனிதர்களை மன்னித்தல் என்பது மகத்தான குணமல்ல? நேரில் சந்திக்கும் போது உரிமையோடு நீங்கள் இப்படி என்னை மன வருத்தத்திற்கு ஆழாக்கிவிட்டீர்கள், பரவாயில்லை. இனி இப்படி நேரக் கூடாது என்று விரும்புகிறேன் என மன்னிப்பை மறைமுகமாகத் தெரிவித்துவிட்டால் மற்றவர்கள் மனம் மாற வாய்ப்பு ஏற்படும் அதை விடுத்துத் தொடர்புகளைத் துண்டித்து விட்டு துவேஷ எண்ணங்களுக்கு தூபம் போட்டுக்கொண்டிருந்தால் உறவுகள் கருகிவிடுமல்லவா?

சில நேரங்களில் அவர்களுக்கும் நமக்குமுள்ள பொதுவான நண்பர்களை அல்லது உறவினர்களை சந்திக்கும் பொழுது அவர்களைப் பற்றியும் அவர்களின் உயர்ந்த குண நலன்களைப் பற்றியும் பேசலாம். ஏதோ அந்த நேரத்தில் அவர்கள் அப்படி நடந்து கொள்ள வேண்டிய சூழல் அமைந்துவிட்டது, பரவாயில்லை, என்று மன்னித்தல் மனோபாவத்தோடு உயர்ந்து பண்பாடுள்ள மனிதர்களாக பேசினால், நடந்து கொண்டால் அந்த நண்பர்கள் அந்தச் செய்தியை அவர்களிடம் அறிவித்து அதன் மூலம் ஒரு வேளை உறவுகள் சீர் பெறலாம்.

உளவியல் அறிஞர்கள் இன்னுமொரு படி மேலே போய், உங்களுக்கு யாரிடம் மனக்கசப்பு. (Resentment ) அதிகமாக இருக்கிறதோ அவர்களுக்கு ஓர் அன்புக் கடிதத்தை வரைந்து அதனை அழித்து விடுங்கள் (Destroy) என்று அறிவுறுத்துகிறார்கள்.

"

எங்கே மனிதர்கள்
தங்கள் வாழ்வில்
இனிமையில்லை
என்றும் உறவுகளால்
துயரத்துக்கு உள்ளாகி
அன்பிற்கும்,
அரவணைப்பிற்கும்
ஏங்குகிறார்களோ
அவர்களுக்கெல்லாம்
இனிப்பை
உண்ணமுடியாத
நீரிழிவு நோய்
வருவதாகக் கூட
குறிப்பிடுகிறார்கள்.

இதன் மூலம் அவர்களின் மேல் இருக்கின்ற வன்மமும், பழி உணர்ச்சியும் பறந்துவிடும் என்று பரிந்துரைக்கிறார்கள்.

மிக ஆழ்ந்து இந்த உறவுகளைப்பற்றியும் அதன் விளைவுகளைப் பற்றியும் ஆராய்ந்தால் உறவுகள் எங்கே சரியில்லையோ அங்கே மன இறுக்கம் மற்றும் அது சார்ந்த நோய்கள், இரத்த அழுத்தம், மாரடைப்பு, பக்கவாதம், வயிற்றுப் புண்,குடற் புண் மேலும் புற்றுநோய் கூட உண்டாவதாக உளவியல் அறிஞர்கள் உரைக்கின்றார்கள்.

எங்கே மனிதர்கள் தங்கள் வாழ்வில் இனிமையில்லை என்றும் உறவுகளால் துயரத்துக்கு உள்ளாகி அன்பிற்கும்,அரவணைப்பிற்கும் ஏங்குகிறார்களோ அவர்களுக்கெல்லாம் இனிப்பை உண்ணமுடியாத நீரிழிவு நோய் வருவதாக கூட குறிப்பிடுகிறார்கள்

உறவுகள் மேம்பட உன்னதமான வழி மன்னித்தல். மறந்து விடுதல் ,நம்மை அவமதித்தவர்களின் அறியாமையை எண்ணிக் கடவுளிடம் அவர்களுக்கு நல்ல புத்தி தாரும் என்று வேண்டிக் கொள்ளலாம். உண்மை தானே இயேசு பிரான் தன்னை அவமதித்தவர்களையும் துன்புறுத்தியவர்களையும் வெறுக்காமல் மண்டலத்தில் இருக்கிற என்னுடைய பிதாவே இவர்கள் செய்வது இன்னதென்று அறியாமல் செய்கிறார்கள். இவர்களை மன்னிக்கவும் என்று இறைஞ்சவில்லையா? அதை விட மகத்தான துன்பங்களையா நமக்கு நண்பர்களும் ,உறவினர்களும் செய்து விட்டார்கள்? ஏன் மனமழிந்து விட வேண்டும்.

இன்னும் சொல்லப் போனால் எந்த மனிதர்களின் மனத்திலெல்லாம், கோபமும் வெறுப்பும் வன்மமும், பழியுணர்ச்சியும் பொறாமையுணர்ச்சியும் புதைந்து கிடக்கிறதோ அங்கே செல்வமகள் வந்து சேரமாட்டாளாம். அழுக்காறு,அவா,வெகுளி,இன்னாச் சொல் இந்நான்கும் இல்லாதவர்களாக இருந்தால் ,வள்ளுவன் இது குறித்து ஒருபேருண்மையை ,பிரபஞ்ச இரகசியத்தைப் பின் வரும் குறள் மூலம் நமக்கு உணர்த்துவதாக நாம் உணரலாம்

*உள்ளியது எல்லாம்*
*உடனெய்தும் உள்ளத்தால்*
*உள்ளான் வெகுளி எனின்*

வள்ளுவப்பெருந்தகை பொய் சொல்ல மாட்டார், புனைந்துரைக்கமாட்டார் உயர்வு நவிற்சியாக உண்மை அல்லாததை உலகுக்குச் சொல்ல மாட்டார் அப்படியென்றால் இந்தச் சத்திய வார்த்தைகளை நாம் நம்பினால் என்ன. சோதித்துப் பார்த்தால் என்ன?

உள்ளத்தில் கோபம் என்ற ஒரு வேண்டாத உணர்வை உடைத்துவிட்டால் நினைத்தது எல்லாம் நினைத்த மாத்திரத்திலேயே நிறை வேறி விடும் என்றல்லவா சொல்கிறார்.

இந்தக் கோபம் இருப்பதால் தானே இத்தனை இடைஞ்சல்கள். மற்றவர்கள் முதலில் மாறட்டும். நான் மாறி விடுவேன். அவர்கள் அன்பைக் காட்டட்டும் நான் நன்றியோடு இருப்பேன் என்று, மாற்றம் மற்றவர்களிடம் வரவேண்டும் என்று சொல்வதை விட, எதிர் பார்ப்பதை விட பெருந் தன்மையாக நாம் முதலில் மாறுவோம். மாற்றம் உலகில் தானாக மலரும்.

மற்றவர்களிடம் குறை காண வேண்டாம் அந்தப் பண்பு நம் சக்தியை வீணடித்து விடும். மிகவும் நல்ல,என் மீது அன்பு செலுத்தக் கூடியவர்கள்,என் மீது மிகுதியும் நேசமும், பாசமும் உடைய மனிதர்கள் எனக்குத் தேவை என்று தேடினால் ஒரு வேளை நம்மால் கண்டு பிடிக்க முடியாமல் போகலாம். அது ஏக்கத்தையும் ஏமாற்றத்தையும் தரலாம்.

அன்பும் நேசமும் நம்மிடமிருந்து தொடங்கட்டும். அன்பு எங்கிருந்து வந்தாலும் வரவேற்போம்.அந்தத் தர நிர்ணயம் செய்ய வேண்டாம். நேசிப்போம் நேசிக்கப் படுவோம், ஆனந்தம் அளிப்போம். ஆனந்தம் அடைவோம். அன்பே சிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலை முடியினால் வடிவமைக்கப்பட்ட ஆடை






பிரிட்டன் ஆடை வடிவமைப்பாளர் ஒருவர் முற்றிலும் வித்தியாசமான முறையில் ஆடையை வடிவமைத்துள்ளார். பிரிட்டனைச் சேர்ந்த தெல்மா என்ற ஆடை வடிவமைப்பாளர் காண்பவரை வியக்கவைக்கும் வகையில் தலைமுடியினை மட்டுமே பயன்படுத்தி முழுமையான ஆடை ஒன்றை வடிவமைத்துள்ளார்.


250 மீற்றர் நீளமும் 600 கிராம் கொண்ட ஆடையை வடிவமைக்க சுமார் 300 மணித்தியாலங்கள் செலவானது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தலைகீழாக அமைக்கப்பட்ட வீடு



எல்லோரும் மற்றவர்களிடமிருக்கும் வீடுகளில் இருந்து தமது வீடுகளை வித்தியாசப்படுத்த எண்ணுவார்கள். அதேபோல சற்று வித்தியாசமான முறையில் தலைகீழாக வீட்டை வடிவமைத்திருக்கின்றார்கள். இந்த வீடு ஆஸ்திரேலியா நாட்டில் அமைக்கப்பட்டுள்ளது. வெளித் தோற்றம் தலைகீழ் வடிவில் மட்டுமல்லாமல் உள் அலங்காரங்களும் தலைகீழ் வடிவில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த வீட்டை அமைப்பதற்கு எட்டு மாதங்கள் எடுத்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

# வலையில் சிக்கிய இராட்சத நண்டு



ஆஸ்திரேலியாவில் மீனவர் வலையில் சிக்கிய இராட்சத நண்டு பிரிட்டன் அருங்காட்சியகத்துக்கு விமானத்தில் கொண்டு செல்லப்பட்டது. ஆஸ்திரேலியாவின் டாஸ்மேனியாத் தீவுப் பகுதியில் மீனவர் வலையில் கிளாட் வகையைச் சேர்ந்த ராட்சத நண்டு கடந்த மாதம் சிக்கியது.

# அதிசயக் கார்



போக்குவரத்து வாகன உற்பத்தி நிறுவனங்களில் ஒன்று உருளை போன்ற வடிவத்தில் கார்களை அமைத்துள்ளது. இந்தக் கார் ஆனது சீனாவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் காரில் இரண்டு நபர்களே பயணம் செய்யக் கூடியவாறு காணப்படுவதுடன் போக்குவரத்து நெரிசல்களை குறைக்கவும் உதவுவதாக அதன் வடிவம் அமைந்துள்ளது.

# தனி மனிதன் உருவாக்கிய நாடு



அஸ்ஸாம் மாநிலம், கௌஹாத்தி நகரிலிருந்து 350 கிலோ மீற்றர் தொலைவில் இருக்கும் சாண்ட்பர் கிராமம் தண்ணீர் பஞ்சம் காரணமாக, மரங்கள் உள்ளிட்ட தாவரங்கள் வெகுவாகக் குறைந்துபோக பாம்புகள், பூச்சிகள் உள்ளிட்ட பல்வேறு உயிரினங்களும் அழிய ஆரம்பித்தன. இதனால் அப்பகுதியைச் சேர்ந்த ஜாதவ் பயங், வனத்துறையினரிடம் சென்று இதற்கு ஏதாவது செய்யுங்கள் என்று முறையிட்டார். இந்தப் பகுதியில் மரங்கள் எதுவும் வளராது என்று கூறிவிட்டார். இது, அவரை வெகுவாகப் பாதிக்கவே, இந்தப் பகுதியிலேயே தங்கியிருந்து காட்டுப்பகுதியை உருவாக்கியே தீருவேன் என்று சபதம் எடுத்தார். தனி மனிதனாக மூங்கில் நட்டு, தண்ணீர் பாய்ச்சி, களை எடுத்து என்று அவர் களத்தில் சுழல ஆரம்பித்தார். அடுத்து பல வகையான மரக்கன்றுகளையும் வெளியில் இருந்து வாங்கி வந்து நட்டார். சிவப்பு எறும்புகளையும் கொண்டுவந்து அங்கே வளர்த்தார். இந்த முயற்சிகளுக்கெல்லாம் அருமையான பலன்! நிறைய மரங்கள், மலர்கள், பூச்சிகள், உள்நாட்டு பறவைகள், வெளிநாட்டு பறவைகள், யானைகள், காண்டா மிருகம், மாடுகள், மான்கள் என்று வன விலங்குகளும் அங்கே பெருக 12 ஆண்டுகளில் மாபெரும் காடாக மாறிப்போனது. 1,360 ஏக்கர் என்று பெருகிவிட்ட அந்தக் காடு [illegible] முப்பது ஆண்டுகள் கழித்து 2008 ஆம் ஆண்டில்தான் மாநில வனத்துறையினர் [illegible] தெரிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# குழந்தைகளின் மனதைக் கவரும் கேக்

சிறு குழந்தைகளின் மனதைக் கவரும் வகையில் அழகான கலைநயத்துடன் கேக் வடிவமைக்கப்பட்டுள்ளது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் கைரேகைகளின் பலன்கள்

**ரேகைகளின் தன்மைகள் குறித்த விபரங்கள் தொடர்கின்றன.**




இதய ரேகை விரல்களுக்கு அடியில் உள்ளங்கையின் மேற்புறம் காணப்படும்.கைரேகை சாத்திரத்தில், இது நுனி விரலுக்கு அடியில் உள்ளங்கையின் ஓரத்தில் இருந்து தொடங்கி கட்டை விரலை நோக்கி ஓடும் ரேகையாக இருக்கிறது; வேறு சில சாத்திரங்கள், விரல்களுக்கு அடியில் தொடங்கி உள்ளங்கையின் விளிம்பிற்கு வெளியே ஓடுவதை இதய ரேகையாகக் குறிப்பிடுகின்றன. இந்த ரேகை இதயம் தொடர்பான தெளிவான மற்றும் மறைமுகமான விஷயங்களைக் குறிப்பிடுவதாக கைரேகை பார்ப்பவர்கள் குறிப்பிடுகிறார்கள். மேலும் இதயத்தின் ஆரோக்கியம் தொடர்பான பல்வேறு விஷயங்களுக்கும் அப்பாற்பட்டு, உணர்ச்சியைத் தாங்கும் திறன், காதல் உணர்வுகள், மன அழுத்தம், மற்றும் இன்பதுன்ப நிலைப்பாடு ஆகியவற்றையும் இது குறிப்பதாக நம்பப்படுகிறது.

கைரேகை பார்ப்பவர்களால் கூறப்படும் அடுத்த ரேகை, தலை ரேகையாகும் . இந்த ரேகை, சுட்டுவிரலின்கீழ் உள்ளங்கையின் ஓரத்தில் தொடங்கி, உள்ளங்கையின் வெளிப்புற விளிம்பிற்கு ஓடும். பொதுவாக, தொடக்கத்தில் தலை ரேகையானது ஆயுள் ரேகையுடன் இணையும். கல்வி, மற்றவர்களுடனான உறவுமுறை, புத்திசாலித்தனம் மற்றும் அறிவுத் தேடல் ஆகியவை உட்பட இது ஒருவரின் மனதையும், அது வேலை செய்யும் முறையையும் கணிப்பதாக பொதுவாக கைரேகை பார்ப்பவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

இறுதியாக, கைரேகை பார்ப்பவர்களால் ஒருவகையில் மிகவும் கருத்துவேறுபாடுகளைக் கொண்ட ரேகையான ஆயுள் ரேகை நோக்கப்படுகிறது. இது கட்டைவிரலுக்கும் மேலே உள்ளங்கையின் விளிம்பில் இருந்து தொடங்கி, மணிக்கட்டை நோக்கி ஒரு வில்லை போலப் பயணிக்கிறது. இந்த ரேகை ஒருவரின் ஆயுளையும், உடல் ஆரோக்கியத்தையும் மற்றும் பொதுவான ஆரோக்கியத்தையும் குறிப்பதாக நம்பப்படுகிறது. இந்த ஆயுள்ரேகையானது, பேரழிவு நிகழ்வுகள், உடல் காயங்கள் மற்றும் இடமாற்றங்கள் உட்பட, முக்கியமான வாழ்க்கை மாற்றங்களைப் பிரதிபலிப்பதாக நம்பப்படுகிறது. ஒருவரின் ஆயுள்ரேகையின் நீளம் அவரின் வாழும் காலத்தோடு தொடர்புபட்டிருப்பதாக பொதுவாக கூறப்படுவதை நவீன கைரேகை சாத்திர நிபுணர்கள் நம்புவதில்லை.

மேலும் சில முக்கிய ரேகைகள் அல்லது மாறுபாடுகளில் பின்வருவன உள்ளடங்கும்:

குரங்கு ரேகைமடிப்பு என்பது உணர்ச்சி, காரண காரியம் ஆகிய இரண்டு சிறப்பார்ந்த முக்கியத்துவத்தை உள்ளடக்கி உள்ளது. அவற்றை இந்த ரேகையில் இருந்து மட்டும் தான் தெரிந்து கொள்ள முடியும். ஓர் ஆழ்ந்த காரணத்தை இந்த ரேகை எடுத்துக்காட்டுகிறது. இது சுட்டு விரலுக்குக் கீழிலிருந்து தொடங்கி, சுண்டு விரலுக்குக் கீழே முனையில் பொதுவாக இதய ரேகை முடியும் இடத்தில் முடியும். இந்த ரேகையிலிருந்து கிளை ரேகைகள் எந்தத் திசையில் பிரிந்து செல்கின்றனவோ, அதற்கேற்ப இந்த ரேகை காட்டும் குறிப்புகளும் மாறும்.

விதி ரேகையானது, மணிக்கட்டுக்கு அருகில் உள்ளங்கையின் அடியிலிருந்து, நடுவிரலை நோக்கி உள்ளங்கையின் மையம் வழியாக மேலே ஓடும். கல்வி மற்றும் தொழில் சார்ந்த வெற்றிகள் மற்றும் தடைகள் உட்பட, இது ஒருவரின் வாழ்க்கையோடு மிகவும் தொடர்புபட்டிருப்பதாக நம்பப்படுகிறது.

கைரேகை சாத்திரத்தில் இருக்கும் மேடுகள் வியாழன், சனி, அப்போலோ புதன், செவ்வாய், நேர்மறை செவ்வாய் எதிர்மறை, செவ்வாயின் சமவெளி, லூனா மேடு, நெப்டியூன் மேடு, சுக்கிர மேடு என்பனவாகும்.

**பிற முக்கிய ரேகைகள்**

சூரிய ரேகை - இது விதி ரேகைக்கு இணையாக, மோதிர விரலின் கீழே இருக்கும். இது ஒருவருடைய புகழையும், தாழ்வையும் குறிப்பிட்டுக் காட்டும் என்று நம்பப்படுகிறது.

சுக்கிரனின் வட்டப்பாதை - இது சுண்டு விரலுக்கும், மோதிர விரலுக்கும் இடையில் தொடங்கி, மோதிர விரல் மற்றும் நடுவிரல்களுக்கு கீழே ஒரு கீற்று போல ஓடி, நடுவிரலுக்கும், சுட்டு விரலுக்கும் இடையில் முடிகிறது; இது அறிவு மற்றும் திறமை ஆகியவற்றோடு தொடர்புபட்டதாகக் கருதப்படுகிறது.

நட்பு ரேகைகள் - இது குறுகிய கிடைமட்ட ரேகைகளாகும். இது உள்ளங்கையின் விளிம்பில் இதய ரேகைக்கும், சுண்டு விரலின் கீழ்ப் பகுதிக்கும் இடையில் காணப்படும்; நெருங்கிய உறவுகள், சிலநேரங்களில் காதல் உறவுகளைக் குறிப்பிட்டுக் காட்டும் என்று நம்பப்படுகிறது.

வெள்ளி ரேகை - இது மணிக்கட்டுக்கு அருகில் உள்ளங்கையின் கீழிலிருந்து, சுண்டு விரலை நோக்கி உள்ளங்கையின் மேல்நோக்கி ஓடுகிறது; தொடர்ச்சியான உடல்நலப் பிரச்சினைகள், வியாபார புத்திசாலித்தனம், அல்லது மற்றவர்களுடனான உறவுமுறை ஆகியவற்றைக் குறிப்பிட்டுக்காட்டும் என்று நம்பப்படுகிறது.

பயண ரேகைகள் - கிடைமட்ட ரேகைகளான இவை உள்ளங்கையின் புடைத்த விளிம்பில் மணிக்கட்டிற்கும், இதய ரேகைக்கும் இடையில் காணப்படுகிறது; ஒவ்வொரு ரேகையும் அந்த நபரால் மேற்கொள்ளப்படும் ஒரு பயணத்தைக் குறிப்பிடுவதாக கூறப்படுகிறது. இந்த ரேகை நீண்டிருந்தால், அந்த நபருக்கு மிகவும் முக்கியமான பயணம் அமையும் என்று கூறப்படுகிறது.

''அப்போலோ ரேகை''- அப்போலோ ரேகை என்பது அதிருஷ்ட வாழ்க்கையைக் குறிக்கிறது; இது மணிக்கட்டில் இருக்கும் சந்திர மேட்டில் இருந்து, மோதிர விரலுக்கு இடையில் பயணிக்கிறது.

''வட்ட ரேகை''- இது ஆயுள் ரேகையைக் கடந்து ''ஓ'' வடிவத்தை உருவாக்குகிறது; இது தீமையின் அறிகுறியாகப் பார்க்கப்படுகிறது; கைரேகை பார்க்க வருபவருக்குப் பிரச்சினையை உண்டாக்கும் என்பதால், கைரேகை பார்ப்பவர்கள் இந்த ரேகையைப் பொதுவாக குறிப்பிட்டு கூறுவதில்லை.

(தொடரும்)

## நாங்களாக திருந்தினால் சரி

யாழ்ப்பாணத்தில் கலாசாரம் தற்போது மாறிக் கொண்டு செல்வதாக பலரும் குறை கூறிக் கொள்கின்றனர். தற்போது ஏனைய இடங்களில் வாழ்பவர்களும் இந்தக் கலாசார பிறழ்வு தொடர்பில் அக்கறை எடுத்துக் கதைக்கின்றனர்; அறிக்கை விடுக்கின்றனர். அத்துடன் அவர்களது பணிகளும் நிறைவடைகின்றன. ஆனாலும் இந்தப் பிறழ்வுகள் நின்றபாடில்லை.

தலைநகரின் இரட்டைக் கோபுர உச்சியிலிருந்து ஒளிபரப்பாகும் தனியார் வானொலி ஒன்று தனது பத்திரிகை கண்ணோட்ட நிகழ்ச்சியில் யாழ்ப்பாணக் கலாசாரத்தை நையாண்டி பண்ணியது. கொழும்பிலிருந்து வெளியாகும் பத்திரிகையொன்றில், யாழ்.நகரில் வாள் வெட்டில் படுகாயமடைந்து வைத்தியசாலையில் ஒருவர் அனுமதிக்கப்பட்டிருப்பதாக செய்தி வெளியாகியிருந்தது.

**ஏன்...**
**எதற்கு...**
**எப்படி?**

அந்தச் செய்தியை வாசித்த பின்னர், குறித்த வானொலியின் இரு அறிவிப்பாளர்களும், ''யாழ்ப்பாணம் இரத்த பூமி, எதுக்கெடுத்தாலும் வாள்தான் தூக்குவார்கள் என்று'' தெரிவித்தார்கள்.

யாழ்ப்பாணம்தான் கலாசாரத்தின் பிறப்பிடமாக சொல்லப்பட்ட காலம் மலையேறி இன்று அடிதடி காலாசாரத்துக்கு பெயர்போன பிரதேசமாக மாறியிருக்கின்றது. அவ்வளவு தூரத்துக்கு எங்களை நாங்கள் அறியாமல் அழித்துக் கொண்டிருக்கின்றோம்.

சட்டத்துறை இவற்றை மாற்றியமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளாது. இதனை தமிழர்களாகிய நாங்கள்தான் உணர்ந்து மாற்றியமைக்கவேண்டும். போதைப்பொருள் முதல் பாலியல் முறைகேடுகள் வரையில் எமது கலாசாரத்தின் ஆணிவேரைப் பிடுங்கி எறியக் காத்திருக்கின்றது.

'திருடனாய்ப் பார்த்துத் திருந்தா விட்டால் திருட்டை ஒழிக்க முடியாது' அதேபோல நாங்களாக திருந்தாவிட்டால் எங்களது கலாசாரத்தை பாதுகாக்க முடியாது.

-நக்கல் நரசிம்மன்.

## உதயனை விமர்சியுங்கள்

உதயன் பத்திரிகையில் கடந்த 07 ஆம் திகதி ஆசிரியர் தலையங்கத்தில் 'மீளக் குடியமர்வில் தாமதமும் காணி சுவீகரிப்பில் படுவேகமும்' என்று தலையங்கம் எழுதியிருந்தது.

தமது காணி சுவீகரிப்பு சம்பந்தமாக உரிய நீதிமன்றில் வழக்கிட்டு உரிய நிவாரணம் பெறுவதற்கு சகல வசதிகளும் சட்டத்தரணிகளும் தயாராக இருக்கும் போது அதனை ஏன் அவர்கள் நாடுவதில்லை.

இலங்கை உயர்நீதிமன்றம் (Supreme Court) வரையும் மேலும் சர்வதேச நீதிமன்றம், மற்றும் மனித உரிமை நிறுவனங்கள் சர்வதேசம் வரையும் காணப்படுகையில் அவற்றைப் பயன்படுத்துவதுதானே நியாயம். ஏக்கர் கணக்கில் காணியை இழப்பவனுக்கு வழக்கு செலவு ஒரு பொருட்டல்ல என்பதையும் கூறி வைக்க விரும்புகிறேன்.

எஸ்.சிவரூபன்
சட்டத்தரணி

★ ★ ★

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், சிங்கக் கொடி [illegible] தொடர்பாக 'உதயன்' [illegible] அளவு செய்திகள் வெளிவரவில்லை என்று எண்ணத் தோன்றுகிறது.

மே தினத்தன்று கட்சித் தலைவர் சிங்கக் கொடி ஏந்திய விடயம் மற்றும் அந்த விடயம் தொடர்பாக பின்னர் வெளிப்படுத்தப்பட்ட செய்திகளைக் காணமுடியாதுள்ளது.

தமிழினத்தின் உணர்வலையை பிரதிபலிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சிங்கக் கொடி ஏந்தியது தவறு. அதனை உரிய முறையில் உதயன் வெளிப்படுத்தியிருக்க வேண்டும்.

அதன் பின்னர் சம்பந்தன் ஐயா கொடி ஏந்தியதற்கு மன்னிப்புக் கேட்க மாட்டேன் எனக் கூறியதையும் உதயனில் பார்க்க முடியாத நிலை காணப்பட்டது.

ஊர்காவற்றுறை
கேசவன்

★ ★ ★

யாழ்ப்பாணத்தில் உண்மையாய் உழைக்கும் மக்கள் செங்கொடி ஏந்தி உணர்வு பூர்வமாய் செய்த மே நாளை உங்கள் ஊடகம் பேச மறந்தது ஏன்? எதிர்காலத்தில் உங்கள் விழி திறக்கும் என்று நம்புகிறேன்.

-குருபரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவர்களைப் பார்த்து நாமும் நடப்போம்

உலகப் பிரசித்தி பெற்ற தலைவர்களின் பெயர்கள் பல வருடங்கள் கழிந்தும் எமது மனதில் இருந்து அழியாமல் இருப்பதற்கு அவர்களின் தியாகங்களும் கடமை உணர்வுகளும் தேச பக்தியும்தான் காரணமாக அமைகின்றன. அப்படிப்பட்ட தலைவர்களின் மன உறுதியையும் கொள்கையையும் பார்த்து நாமும் நடக்க வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் போல் துணிவுடன் எதற்கும் அடி பணிந்து போகாமல் எமது உரிமையை பெற்றுக்கொள்ள முடியும். சில தலைவர்களைப் பார்ப்போம்; அவர்கள் போல் நடப்போம்.

**மகாத்மா காந்தி**

மகாத்மா காந்தியின் அகிம்சைக் கொள்கை துனீஷியா முதல் எகிப்து வரையான கொடுங்கோல் அரசுகளை வீழ்த்த அந்த நாட்டு மக்களுக்கு பயன்பட்டுள்ளது. துப்பாக்கிக் குண்டை விட மக்களின் குரலுக்கே வலிமை அதிகம் என்று காந்தியின் வாதம் நிரூபித்துள்ளது. அமைதியான வழிமுறைகளை பின்பற்றுவதில் மகாத்மா காந்தி உறுதியுடன் இருந்தார். அமைதிக்குப் பதிலாக ஆயுதங்களில் அதிக முதலீடு செய்துள்ள நாடுகளுக்கு இந்த மாற்றம் கடினமானதுதான். எனினும் அகிம்சையைத் தேர்ந்தெடுத்துள்ள மக்களின் மன உறுதி தொடருமானால் வளமான எதிர்காலத்தை ஏற்படுத்த முடியும்.

**நேதாஜீ சுபாஸ் சந்திரபோஸ்**

இதே போலத்தான் பிரிட்டிஸ்காரர்களை எதிர்த்து இராணுவ ரீதியாக போராடிய ஒப்பற்ற இந்தியத் தலைவர் மாவீரர் நேதாஜீ சுபாஸ் சந்திரபோஸ். அடிமைத்தனத்தை ஒழிப்பதற்கு அகிம்சைப் போராட்டம் எவ்வளவு தூரம் உதவியதோ அதே போல சுபாஸ் சந்திரபோஸ் ஆயுதம் ஏந்தி போராடியதும் இருந்தது. ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருந்து இந்தியாவை விடுவிக்க 1944 ஆம் ஆண்டு அவர் ஆற்றிய உரையில்:

"அதோ அந்த நதியின் கரைக்கு அப்பால் அந்த அடர்ந்த காடுகளுக்குப் பின்னால் எமது கண்களில் படும் அந்த மலைகளுக்குப் பின்னால் எமக்காக உறுதியளிக்கப்பட்ட அந்த நிலம் உள்ளது.

எந்த மண்ணில் இருந்து நாம் உயிர் பெற்றோமோ அந்த நிலத்தை நோக்கி திரும்புகிறோம். புறப்படுங்கள் இந்தியா அழைக்கிறது. இரத்தம் இரத்தத்தை அழைக்கிறது. கிளர்ந்தெழுங்கள் உங்கள் ஆயுதங்களை எடுத்துக் கொள்ளுங்கள். எம்மை அடிமையாக்கிய எதிரிகளின் படைகளை கிழித்துக்கொண்டு எமது பூமிக்கு பாதை அமைப்போம். எமது கடைசி மூச்சில் டெல்லிக்கு செல்லும் எமது பாதைக்கு முத்தமிட்டுச் சாவோம்" என்றார்.

**சேகுவேராவும், பிடல்கஸ்ரோவும்**

அதே போலத்தான் சேகுவேராவும், பிடல் கஸ்ரோவும் வெவ்வேறு துருவங்கள். கஸ்ரோவுக்கு போர்க் குணமும் போராடவேண்டிய அவசியமும் இருந்தது. ஆனால் போராட்டத்துக்கு வேண்டிய தத்துவப் பின்புலன் இல்லை. சேகுவேராவுக்கு தத்துவமாக கம்யூனிஸம் உறைந்திருந்தது.

ஆனால் போராடக் களமில்லை இருவரும் இணைந்த போது சக்திகள் இடம்மாறின இரண்டு மகத்தான சக்திகள் இணைந்த தருணம் கியூபா வளர்ச்சியின் அத்திவாரம். அப்போது சேகுவேராவுக்கு வயது 27 கஸ்ரோவுக்கு வயது 32 கஸ்ரோவுக்காவது கியூபா தனது சொந்த நாடு போராட வேண்டிய அவசியம் இயல்பானது. ஆனால் சேகுவேராவுக்கு அப்படியல்ல தனக்கு முற்றிலும் தொடர்பற்ற மற்றொரு தேசத்தில் அம் மக்களின் விடுதலைக்காக தன் உயிரைப் பணயம் வைத்தார். இதனால் சேகுவேரா மனிதருள் மாமனிதராக அடையாளம் காணப்பட்டார்.

புரட்சிக்கான திட்டங்கள் தீட்டப்பட்டன. ஏறக்குறைய ஒன்றரை வருட கடுமையான ஆயுதப் பயிற்சிக்குப் பிறகு 1956 நவம்பர் 26 இரவு மெக்ஸிக்கோ கடற்கரையில் 82 பேராளிகள் ஒருவர் பின் ஒருவராக ஏறிக்கொண்ட பின் 'கிரான்மா' எனும் படகு கியூபாவை நோக்கிப் பயணித்தது . அந்த முதல் தாக்குதல் வெற்றி பெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற தாக்குதல்கள் பெரும் வெற்றிச் செய்திகளையே குவித்தன

சேகுவேரா மறைந்திருந்த இடத்தினை ஒரு தேசத் துரோகியான பெண் காட்டிக் கொடுக்கிறார். பொலிவிய இராணுவம் சுற்றி வளைத்து தாக்குதல் நடத்தியது . அதில் காலில் காயப்பட்டு பொலிவிய இராணுவத்திடம் சேகுவேரா பிடிபடுகிறான். அவர்களே சேகுவேராவை சுட்டுக் கொல்கிறார்கள். வாழ்க்கையானாலும் மற்றையவர்களுக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்து காட்டிய சேகுவேரா பல்லாயிரக்கணக்கானவர்களைத் தன் வழிப்படுத்தியதால் அவன் என்றைக்குமே சாவதில்லை.

**பிரபாகரன்**

ஈழத் தமிழர்களுக்கு ஒரு தலைவன் இல்லாததால் பல பிரச்சினைகளுக்கு அவர்கள் முகம்கொடுத்து வருகிறார்கள். விடுதலைப் புலிகள் இருந்த காலத்தில் தலைவர் பிரபாகரன் இருக்கிறார் என்று மக்கள் நம்பியிருந்தார்கள், விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் இப்பொழுது அந்த நம்பிக்கை சிதறடிக்கப்பட்டுள்ளது.

மனதுக்குப் பிடித்த ஒரு புத்தகத்தை எத்தனை முறை வாசித்தாலும் மனம் புதிய உணர்வைப் பெறுவதைப் போலத் தான் பிரபாகரன் பற்றிய நிகழ்வுகளைப் படிப்பது. தமிழனுக்கு வீரத்தின் அர்த்தத்தை பிரபாகரன் வாழ்க்கை எடுத்துக்காட்டியது. இவர் அடிக்கடி படித்த நாவல் அலெக்ஸ் ஹேவியின் ஏழு தலைமுறைகள். அதில் இடியும் மின்னலும் இல்லாமல் மழை பொழியாது. போராட்டம் நடத்தாமல் எவரும் எதனையும் தரமாட்டார்கள் என்ற வரிகளுக்கு அமைய வாழ்ந்தார். இயற்கை எனது நண்பன், வாழ்க்கை எனது தத்துவாசிரியன், வரலாறு எனது வழிகாட்டி என்ற வார்த்தைகளைத் தான் பிரபாகரன் தனது டயரியில் எழுதி வைத்திருப்பார். போரில் காயமடைந்தவர்களை பார்க்கப் போனாலும் பொன்னியின் செல்வனில் வரும் பெரிய பழுவேட்டையருக்கு 64 வீரத்தழும்புகள் உண்டு என்று சொல்லி தைரியம் கொடுப்பாராம். பிரபாகரனுக்கு பிடித்த புராணக் கதாபாத்திரம் கர்ணன் தன்னிழப்புக்கும் உயிர்த்தியாகத்துக்கும் ஒவ்வொரு மணித்துளியும் தயாராக இருந்தவன் கர்ணன். அவனை எப்போதும் நினைப்பேன் என்பார்.

பிரபாகரன் குறித்து தங்களது வாழ்க்கை வரலாற்றுப் புத்தகத்தில் மிக உயர்வாக எழுதிய இந்திய இராணுவத்தின் உயரதிகாரிகள் மேஜர் ஜெனரல் ஹர்கிரத் சிங், ஜெனரல் சர்தேஷ் பாண்டே, ஜெனரல் திபேத்திர சிங் இவர்கள் மூவரும் இந்திய அமைதிப் படைக்கு தலைமை தாங்கி பிரபாகரனுடன் மோதியவர்கள்.

தன் அருகில் இருப்பவர் குறித்து எவரும் குறைசொன்னால் பிராபாகரன் பதில் இப்படி இருக்குமாம் "நான் தூய்மையாக இருக்கிறேன், இறுதிவரை இருப்பேன், என்னை எவரும் மாற்ற முடியாது. நீங்கள் குறை சொன்னவரை என் வழிக்கு விரைவில் கொண்டு வருவேன். தமிழீழ இலட்சியத்தில் இருந்து நான் பின்வாங்கினால் என்னுடைய பாதுகாவலரே என்னை சுட்டுக்கொல்லலாம்."

இப்படிப்பட்ட தலைவர்களை பார்த்தீர்களா இவர்கள் போல தமிழ் மக்களின் உரிமைக்காக நடப்பீர்களா? தமிழீழம் கேட்டுத்தான் 30 ஆயிரத்துக்கு மேற்பட்ட போராளிகளும் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்களும் உயிரைக்கொடுத்தார்கள் என்பது போராடியவர்களுக்குத்தான் தெரியும். போராட்டத்துக்கு சிறுதுளியளவுகூட பங்கெடுக்காம[illegible] தமிழீழம் [illegible]

■ பித்தன்

# சப்பாத்தா? காலா?

யாழ்ப்பாணத்தின் தனித்துவங்களில் கல்விப் பாரம்பரியம் மிக முக்கியமானது. இலங்கையிலேயே தலைசிறந்த கல்விமான்களை உற்பத்தி செய்த பெருமையை இன்னமும் குடாநாடு கொண்டிருக்கிறது. ஆனாலும் அவையெல்லாம் பழைய கதையாகிப் போய்விட்டன. தொடர்ச்சியாக நிகழ்ந்த போர், அதன் பின்னர் ஏற்பட்ட சடுதியான நாகரிக உள்நுழைவு, வெளிநாட்டு மோகம், ஆசிரிய வளமின்மை போன்ற காரணிகளால் படுபாதாளத்தை நோக்கி குடாநாட்டின் கல்வித்துறை சென்று கொண்டிருக்கிறது.

போதாக்குறைக்கு ஆசிரியர்களை சகட்டு மேனிக்கு இடமாற்றம் செய்து இருக்கின்ற குழப்பங்களை இன்னமும் அதிகரிக்கச் செய்யும் முயற்சியில் ஆளுநரும் இறங்கியிருக்கிறார். பாடசாலைகளுக்கு எந்தெந்தப் பாடங்களுக்கு ஆசிரியர்கள் தேவையோ அந்த வெற்றிடங்களை நிரப்பாது ஏற்கனவே குறித்த பாடசாலைகளில் எந்தப் பாடங்களுக்கு ஆசிரியர்கள் மிகுதியாக இருக்கிறார்களோ அவற்றிற்கு இன்னமும் மேலதிக ஆசிரியர்களை இடமாற்றம் செய்து தனது அதிகாரத்தை நிலைநிறுத்தியிருக்கிறார் ஆளுநர்.

இதனால் மிகச் சிறப்பான ஆசிரியத்துவ ஆற்றலைக் கொண்டவர்கள் கூட தமது துறை தவிர்ந்த ஏனைய பாடங்களை வாங்குகின்ற சம்பளத்துக்காகக் கற்பிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் வெறும் ஏட்டுச் சுரைக்காய் மட்டுமே மாணவர்களுக்குள் திணிக்கப்படும் நிலையும் அதனால் தொடர்ந்தும் யாழ்ப்பாணத்தில் கல்விப் பாரம்பரியம் இழி புள்ளியை நோக்கி நகரும் ஆபத்தும் தொடரவே போகிறது. இதனை மனதில் வைத்துக் கொண்டுதான் அரச தரப்பு காய்களை நகர்த்துகிறது போலும்.

இதனை உறுதி செய்வது போல இன்னொரு காரியத்திலும் அதிகார வர்க்கம் இறங்கியிருக்கிறது. யாழ்ப்பாணத்தில் மட்டுமல்லாது நாடாளாவிய ரீதியில் ஏராளமான தமிழ் மொழி மூல ஆசிரியர்களை மிக நீண்ட காலமாக செதுக்கி வந்த பலாலி ஆசிரிய கலாசாலையை எப்படியாவது இழுத்து மூடிவிட வேண்டும் என்ற நோக்கத்தில் பல்வேறு திரைமறைவு வேலைகள் நடந்தேறி வருகின்றன.

**கோணல் கோலங்கள்**

பலாலி ஆசிரிய கலாசாலையின் நிர்வாகப் பொறுப்பை கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு கைமாற்றியமை, பலாலி ஆசிரிய கலாசாலையில் உள்ள கற்கை நெறிகளை வேறுகலாசாலைகளில் பயிலுமாறு உத்தரவிட்டமை என்று அழுத்தங்கள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. இத்தகைய அழுத்தங்கள் தொடரும் பட்சத்தில் வேறு வழியின்றி பலாலி ஆசிரிய கலாசாலையை மூட வேண்டிய நிலை ஏற்படும் என்று அரசு திட்டமிடுகிறது.

ஆங்கிலக் கற்கை நெறிக்கு பலாலிக் கலாசாலை பெயர் போனது. ஏராளமான ஆங்கில ஆசிரியர்களை உற்பத்தி செய்த இந்தக் கலாசாலையில் இருந்து அந்தக் கற்கை நெறி தூக்கப்பட்டுள்ளது. அதற்குப் பதிலாக மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலையில் ஆங்கிலக் கற்கை நெறியை பயிலுமாறு குறித்த கற்கை நெறிக்கு விண்ணப்பித்த ஆசிரியர்களுக்கு தொலைபேசி மூலம் அறிவிக்கப்பட்டது. இதில் வேடிக்கை என்னவென்றால் பலாலி ஆசிரியர் கலாசாலையை மூடச் செய்வதற்கான இத்தகைய திரைமறைவு நடவடிக்கைக்கு ஒத்து ஊதும் குழலாக இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் உயர் புள்ளி ஒருவர் இருப்பதாக ஆசிரியர்கள் கூறுகிறார்கள். குறித்தநபரே ஆங்கிலக் கற்கை நெறி பலாலியில் இருந்து மட்டக்களப்புக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும், எனவே ஆசிரியர்கள் அங்கு சென்று ஆங்கிலக் கற்கையை பயிலுமாறும் தொலைபேசி மூலம் அறிவுறுத்தியுள்ளார். பின்னர் அவரே பலாலி ஆசிரியர் கலாசாலையை அரசு மூடினால் போராட்டத்தில் குதிப்போம் என்றும் அறிக்கை விடுத்துள்ளதாக பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் விசனம் தெரிவித்தனர்.

**ஓடுகாலி**

ஆங்கிலக் கற்கை நெறி மட்டக்களப்புக்கு மாற்றப்பட்டதால் பலாலி ஆசிரியர் கலாசாலை மூடப்படுகிறதோ இல்லையோ ஆனால் நிச்சயமாக ஆங்கிலக் கற்கை நெறிக்கு விண்ணப்பித்த ஆசிரியர்கள் பாதிக்கப்படப்போவது மட்டும் நிச்சயம். வெறும் மூவாயிரம் ரூபா வேதனத்தில் பணியாற்றும் ஆசிரிய உதவியாளர்கள் மட்டக்களப்புக்குச் சென்று வரவே அவர்களது சம்பளப் பணம் போதாமல் இருக்கும். இதுதவிர தங்குமிடம், உணவு, கற்றல் உபகரணங்கள் போன்ற தேவைகளுக்காக அவர்கள் இன்னும் பெருந்தொகையான பணத்தை செலவிட வேண்டியிருக்கும். எனவே இவ்வாறான அழுத்தங்கள் நிரம்பிய சூழலில் ஆசிரியர்களுக்குப் போதனை செய்வதன் மூலம் ஆரோக்கியமான ஆசிரியர்களாக அவர்களைச் செதுக்க முடியாது போய்விடும்.

ஏற்கனவே ஏனைய பாடங்களை விடவும் ஆங்கில பாடத்தில்தான் யாழ்ப்பாணம் பின்தங்கி நிற்கிறது. தற்போது அந்தப் பாடத்திற்கான ஆசிரியர்களை இவ்வாறு கற்கை நெறியை மட்டக்களப்புக்கு மாற்றி பந்தாடுவதன் மூலம் இன்னமும் ஆங்கிலத்தில் வீழ்ச்சி ஏற்படும். எனவே இது குறித்து உரிய தரப்புக்கள் அலசி ஆராய்ந்து யதார்த்தமான முடிவொன்றை எடுக்க வேண்டும்.

பலாலி ஆசிரிய கலாசாலையில் போதிய பௌதிக, ஆளணி வளங்கள் இல்லாமையாலேயே அதனை மூடுவதற்கு அரசு முயற்சி செய்கிறது என்று கூறப்படுகின்றது. உண்மையில் தனது ஆளுகைக்குள் இருக்கும் மிக முக்கியமான கல்வி ஆதார நிலையமான கலாசாலையில் உரிய வசதிகள் இல்லாவிட்டால் அதனை உடனடியாக ஏற்படுத்தி கொடுப்பதுதான் அரசினதும் கல்வித் திணைக்களத்தினதும், கல்வி, உயர்கல்வி அமைச்சினதும் கடமையாகும். ஆனால் அந்தக் கடமையை மறந்து விட்டு வளங்களை வழங்காது, கலாசாலையை இழுத்து மூட முற்படுவது சப்பாத்துக்கு அளவாக காலை வெட்டுவது போன்றது.

யாழ்ப்பாணக் கல்விப் பாரம்பரியத்தில் பிணைந்து போயுள்ள பலாலி ஆசிரிய கலாசாலைக்கு மூடுவிழாச் செய்வதில் காட்டும் அக்கறையை அதற்கு புத்துயிர் ஊட்டுவதில் காட்டினால் வீழ்ந்து கொண்டிருக்கும் கல்வித்துறையை [illegible]சிறிதளவேனும் முன்னோக்கி நகர்த்த முடியும். அதைவிடுத்து ஆக்கத்தை விடவும் அழிப்பதில்தான் கண்ணாயிருப்போம் என்று அரசும், அதிகாரிகளும் கருதினால் நமது கல்விப்பயிர் மண்ணாகிப் போவதைத் தடுக்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org